விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 09 ஞாயிற்றுக்கிழமை (23.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 094

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

★ திடீர் சுற்றிவளைப்பு ★ கடும் சோதனை ★ இரவு நேர கைது


# இராணுவ நடவடிக்கைகளால் வடக்கு மக்கள் அச்சம்!

## 300 இளைஞர்கள் மீது நேற்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

போர்க்காலத்தை நினைவுபடுத்தும் வகையில் வடக்கில் இராணுவத்தினரும் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரும், பொலிஸாரும் கடுமையான சோதனை நடவடிக்கையிலும், திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளிலும் இரவு நேர கைது நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மக்கள் அச்சத்துடன் நாளாந்த பொழுதைக் கழித்து வருகின்றனர்.

(23ஆம் பக்கம் பார்க்க...)



## ஒரே குடும்பத்தில் நால்வர் கைது

(வவுனியா)

வவுனியா ஸ்ரீராபுரம் கிராமத்தில் வசித்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வட மாகாணத்தில் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்களை தேடும் பணி

23 ஆம் பக்கம் பார்க்க..

## காரில் வந்து சி.ஐ.டி எனக் கூறி 20 பவுண் தங்க நகைகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

காரில் வந்த மர்ம நபர்கள் தம்மை புலனாய்வுத்துறையினர் என்று கூறி வீட்டிருந்த சுமார் 20 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்து சென்ற சம்பவம் ஒன்று யாழ். கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நேற்று பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் நேற்று பிற்பகல் ஒருமணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட வயோதிகப் பெண்ணொருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

திரைப் படப் பாணியில் இடம் பெற்ற மேற்படிச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம் உரும்பிராய் தெற்கு உரும்பிராயிலுள்ள வீடொன்றுக்கு நேற்று பிற்பகல் ஒருமணியளவில்

23 ஆம் பக்கம் பார்க்க..

## கைத்துப்பாக்கி கைக்குண்டு ரவைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். உரும்பிராய் தெற்கு வி.ரி.எஸ் வீதியிலுள்ள பாழடைந்த வீட்டிலிருந்து கைத்துப்பாக்கி, துப்பாக்கி ரவைகள், கைக்குண்டு என்பனவற்றை

23 ஆம் பக்கம் பார்க்க..

## ஒரே நாளில் என் பிள்ளைகள் மூவரை அதிரடிப்படையினரே கைது செய்தனர்

### ஜனாதிபதி ஆணைக்குழு முன் தாய் சாட்சியம்



தனது மூன்று பிள்ளைகள் தொடர்பாக 24 வருடங்களாகியும் எந்த வித தகவல்களும் இதுவரை இல்லை என ஜனாதிபதி ஆணைக குழு முன்னிலையில் சாட்சியமளித்த 9 பிள்ளைகளின் தாயாரான மகேஸ்வரி ராஜநாதன் தெரிவித்துள்ளார்.

1990ஆம் ஆண்டு விஷேட அதிரடிப்படையினரால் தனது மூன்று பிள்ளைகளும் ஒரே நாளில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் காணாமல் போனதாக அவர் கூறுகிறார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் காணாமல்போனோர் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளித்த அவர், காணாமல் போயுள்ள தனது மூன்று பிள்ளைகளில் இருவர் 13 மற்றும் 16 வயதுடைய பாடசாலை மாணவர்கள் என்று கண்ணீர் மல்கக் கூறினார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் கிழக்கு மாகாணத்திற்கான முதலாவது அமர்வின் இறுதி நாள் விசாரணைகள் நேற்று சனிக்கிழமைய

23 ஆம் பக்கம் பார்க்க..

## விசேட நீதிமன்றம் மூலம் இலங்கை மீது விசாரணை

### வலியுறுத்துகிறது பிரித்தானியா

சியாராலியோனுக்கு எதிராக ஐ.நா சபையின் உதவியுடன் அமைக்கப்பட்ட விசேட சர்வதேச நீதிமன்ற விசாரணையை போன்று, இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கும் விசேட குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றை அமைக்குமாறு பிரித்தானியா கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்மூலம் இலங்கைக்கு எதிரான பிரசாரம் வேறு பாதையில் திருப்பப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த முனைப்பை பிரித்தானியா, புலம்பெயர்ந்த தமிழர்களின் அழுத்தங்களின் அடிப்படையிலும் அமெரிக்காவின் ஜெனிவா யோசனைக்கு இந்தியா ஆதரவளிப்பதாக அறிவித்தமையையும் அடுத்தே பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் இந்த புதிய கோரிக்கையை விடுத்துள்ளார்.

அமெரிக்கா ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக முன்வைத்துள்ள யோசனைக்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. சியாராலியோனில்

24 ஆம் பக்கம் பார்க்க..

புத்தாண்டை முன்னிட்டு
SISIL WORLD
வழங்கும் அதிவிசேட பண்ட மாற்றுக்கொடுப்பனவு
உங்கள் பழைய குளிர் சாதனபெட்டியை கொடுத்து
புத்தம்புதிய 10வருடம் உத்திரவாதம் கொண்ட 50% மின் சக்தி சேமிக்க கூடிய அதிநவீனரக சூழலுக்கு பாதிப்பற்ற SISIL குளிர்சாதன பெட்டியினை இன்றே பெற்றிடுங்கள்.
அதி விசேட விலை கழிவுகள்
விசேட பரிசுப்பொருட்கள்
வட்டியற்ற இலகுக்கொடுப்பனவு முறை சகிதம் உங்கள் வீட்டுக்கே வந்து புதிய குளிர் சாதன பெட்டியை தருவதோடு பழைய குளிர்சாதன பெட்டியினையும் மீளபெறுவோம்
விசேட சலுகை ஏப்ரல் 30 மட்டுமே
இல. 106, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 021 221 9291
இல. 125, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். 021 224 2335
இல. 17/3, கண்டி வீதி, கிளிநொச்சி 021 228 3755



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-6818)


# மாணவர்கள் மீது கடும் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப்பீட மாண வர்கள் இனம் தெரியாத 15 பேர் கொண்ட குழுவால் கண்மூடித் தனமாக தாக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை மருதனார் மடம் நுண்கலை பீட வளாகத்தில் நின்று கொண்டிருந்த நுண்கலை பீட மாணவர்களை மோட்டார் சைக்கிளில் வந்த 15 பேர் கொண்ட இனந் தெரியாத கும்பல் ஒன்று பல்கலை காவலாளியைத் தள்ளி விட்டு கடுமையாக கண்மூடித் தனமாகத் தாக்கியுள்ளது.

தாக்குதல் சம்பவத்தின் போது கடுமையான காயங்களுக்குள் ளான மாணவர் ஒருவர் தற்போது வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனு மதிக்கப் பட்டுள்ளார். இதேவேளை நேற்றுக்காலை குறித்த பீடத்தில் முதலாம் வருட மாணவர் களுக்காக வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதன் காரணமாகவே நுண்கலை மாண வர்கள் நிகழ்ச்சி ஒழுங்குகளை நிறைவு செய் யும் பொருட்டு பல்கலை வளாகத்தில் நின்று கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசார ணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (செ-6)


## வட இலங்கை சுதேச வைத்திய சாலை

### பொதுக் கூட்ட அறிவித்தல்

காலம் :- 19.04.2014 புதன்கிழமை
பிற்பகல் 2.30 மணி

இடம் :- 188 B மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

விடயம் :- லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி யில் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாண வர்களுக்கு வழங்கப்படும் சித்த ஆயுள்வேத டிப்ளோமா தொடர்பான இறுதி முடிவுகள்.

➢ இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், வைத்தி யர்கள், கல்விமான்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குமாறு வேண்டுகிறோம்.

➢ ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆராய் வதற்காக தொடர்ந்து நடைபெறவுள்ள பொதுச் சபைக் கூட்டத்தில் 05.04.2014ஆம் திகதிக்கு முன் இவ்வருட சந்தாப்பணம் செலுத்திய உறுப்பினர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

செயலாளர்
வட இலங்கை சுதேச வைத்திய சபை

(5879)


# விக்னேஸ்வரன் ஆபத்தானவர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபா கரனை விடவும் வட மாகாண சபையின் முதலமைச்சர் விக் னேஸ்வரன் ஆபத்தான வர் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் நிசாந்த சிறி வர்ண சிங்க தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரி விக்கையில், பிரபா கரன் ஆயுதங்களை ஏந்தி யுத்தம் செய்தார். ஆனால் விக்னேஸ் வரன் அரசியல் சாச னத்துடன் யுத்தம் புரி கின்றார்.

முதலமைச்சர் என்ற வரப் பிரசாதங்களை அனுபவித்து வரும் விக் னேஸ்வரன் சர்வதேச சமூகத்துடன் இணைந்து நாட்டை பிளவுபடுத்த முயற் சித்து வருகின்றார் என சிறிவர்ண சிங்க தெரிவித்தார். (செ-11)


## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி கஸ்தூரியார் ஒழுங்கை யில் அலுவலக பாவனைக்கு அல்லது வீட்டு தேவைக்கு ஸ்ரோர் பாவனைக்கு உகந்த நாற்சார வீடு உண்டு.

தொடர்பு :- 077 285 0753

(5878)



NORTH LEAD COMPUTER & ACCESSORIES WHOLESALER

| | |
|---|---|
| 2GB M.SD Card : 375 | Optical Mouse : 225 |
| 4GB Pendrive : 850 | USB Keyboard : 450 |
| 8GB Pendrive : 950 | Wireless Mouse : 850 |
| 16GB Pendrive : 1450 | Wireless Key & Mouse: 1750 |
| 7.2Mb M.Dongle : 2550 | Head Phone with Mic : 275 |
| 21.1Mb M.Dongle : 3850 | 10mp Webcamera : 775 |
| Intel D.Core Procesor: 8200 | ATX Porch Casing : 2550 |
| Intel i3 Processor : 15900 | 500GB Ext. Hard Disk: 9000 |
| Intle Mother Board : 7900 | 1TB Ext. Hard Disk : 12750 |
| Asus Mother Board : 7650 | Lap Orginal Charger : 1850 |
| E-Sonic Mother Board: 6500 | Laptop Battery : 7500 |
| 500GB Hard Disk : 6950 | Laptop Screen LED : 10750 |
| 1TB Hard Disk : 9250 | Power Supply : 1550 |
| 500GB Laptop HDD : 7550 | 1User Kaspersky : 1550 |
| 2GB Kingston Ram : 3550 | 3User Kaspersky : 2950 |
| 4GB Kingston Ram : 5750 | Laptop Coolarpad : 750 |
| 650w Techfine UPS : 4550 | 1.8Meter USB Cable : 190 |
| 1200w Techfine UPS : 8900 | 3Meter USB Cable : 290 |
| Samsung DVD Writer: 2650 | 5Meter USB Cable : 390 |
| 19"AOC & HP LED: 11850 | D.Core Full System : 47500 |
| Laser Printer HP1102: 12900 | i3 Full System : 57500 |
| #328, Stanly Road, Jaffna. (Near to Ariyakulam Junction) Tel: 222 4459, 0774192275 | #12, Kanagapuram Raod, Kili-nochchi.(Near to Barathi Hotel) Tel: 206 0909, 0772533390 |

(C-6819)


# விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்தவ பீடத்தின் ஏற்பாட்டில் மரவேலை செய்பவர் களுக்கான சுகாதாரம் தொடர்பான விழிப் புணர்வு கருத்தரங்கும் இலவச மருத்துவ பரிசோதனையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் முற்பகல் 11.00 மணி வரை யாழ்.மருத்துவ பீடத்தில் நடை பெறவுள்ளது.

இவ்விழிப்புணர்வு கருத்தரங்கு இத்தொழி லுடன் தொடர்புபட்ட அனைவரையும் பங்கு பற்றி பயனடையுமாறு மருத்துவ பீட மாண வர்களால் கோரப்பட்டுள்ளது. (செ-11)

# மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகமும் கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர்தினம் நாளை திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நல்லூர் உதவிப் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப் பாணம் ஜெய்ப்பூர் நிறுவனத்தலைவர் திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி, சிறப்பு விருந்தின ராக, நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியனும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.ஏ.ஜெயராஜனும், யாழ்.மாவட்ட (மகளிர் அபிவிருத்தி இணைப்பாளர்) செல்வி உதயணி தவரட்ணமும் கலந்து கொள்ள வுள்ளனர். (செ-11)


## எமது வாடிக்கையாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

நமது LUX HOT and COOL BAR புதிய சைவ, அசைவ, நம் நாட்டு வெளிநாட்டு சாப்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.




யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள New CARGILLES இல் நமது LUX PIZZA கொழுப்பு, சீனி அற்ற பல சாப்பாட்டு வகைகளை இன்று 23.03.2014 இலிருந்து அறிமுகப்படுத்துகிறது என்பதையும் LUX PIZZA - ன் கிளைகள் நல்லூர் / சுன்னாகம் / சாவகச்சேரி / மானிப்பாய் போன்ற இடங்களிலும் ஒரேவித சேவைபுரிய காத்திருக்கிறோம் என்பதனை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-6821)



Hotel Lux Etoiles



யாழ் மண்ணின் இணைய வானொலி
சுடர்fm www.sudarfm.com பெருமையுடன் வழங்கும்
சுடர் விருதுகள் - 2014

நீங்கள் குறும்படம் அல்லது பாடல்களை படைக்கும் படைப்பாளிகளா?

அப்படியாயின், நீங்கள்தான் சுடர் விருதுகள் 2014ற்கு சொந்தமானவர்கள்

இப்போதே உங்கள் படைப்புக்களின் இரண்டு இறுவெட்டினையும் தொடர்பு கொள்ளும் முகவரியுடனும் எமக்கு அனுப்பி வையுங்கள்.

இவ்விருதுகள் "பல்துறை" சார்ந்த கலைஞர்களுக்கான விருது என்பதை மறந்து விடாதீர்கள் ! ! !

370A, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
மேலதிக தொடர்புகளுக்கு 0770557261
இறுதித்திகதி 2014/03/31

(5877)


# மின் விநியோகம் தடை

(கிளிநொச்சி)

உயர்அழுத்தமின் விநியோக மார்க்கங் களில்ஏற்படும்திருத்த வேலைகளுக்காக கிளிநொச்சி மாவட் டத்தில் இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை பின்வரும் இடங் களில் மின் விநியோ கம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள் ளது.

இதன் அடிப்படை யில் கிளி.நகரம், பரந் தன், பூநகரி மற்றும் முல்லை மாவட்டத் தின் புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்படும் என கிளி நொச்சி மாவட்ட பிர தம அத்தியட்சர் ரி.குக ராஜா தெரிவித்துள் ளார். (செ-11)


## உடனடித் தேவை

### யாழ் நகரில் பின்வரும் பணியாளர்கள் தேவை

1. உணவு பரிமாறுதலில் அனுபவம் வாய்ந்தவர்கள் (சிங்களம், ஆங்கிலம் கதைக்கத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது)
2. சமையல் உதவியாளர்கள்
3. காசாளர்கள் (பெண்கள்) - 2
4 வீட்டுப் பணிப் பெண்கள் (குழந்தை பராமரிப்பு உட்பட)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
60, STANLEY ROAD, ஆரியகுளச்சந்தி

தொடர்பு கொள்ள வேண்டிய திகதி 26.03.2014 காலை 10 மணிக்கு நேரில் வரவும்
தொலைபேசி இலக்கம் :- 077 347 8427

(5874)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நடந்த மனிதவுரிமை மீறல்களில் இந்தியாவுக்கும் பங்குண்டு

## யஷ்வந்த் சின்ஹா கூறுகின்றார்

**இலங்கையில் இனப்படுகொலையை நடத்தியதில் இந்தியாவும் பங்காளி. இதன் காரணமாகத்தான் ராஜபக்ஷவும் தமது பிரதமரும் அடிக்கடி கைகுலுக்கிக் கொள்கிறார்கள் என இந்தியாவின் முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா தெரிவித்துள்ளார். சென்னை எழும்பூரில் ம.தி.மு.க. சார்பில் நடைபெற்ற மனிதவுரிமை தினக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் தொடர்ந்து பேசுகையில்,

நமது அரசியல் சாசனத்தில் மனித உரிமை மிக முக்கியமான அம்சமாகச் சேர்க்கப்பட்டு உள்ளது. ஆனால், யதார்த்தத்தில் நம்முடைய தேசம் மனித உரிமைக்காக செய்தது என்ன? அதைத் தெரிந்துகொள்ள நாம் இரண்டு விடயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும்.

நம்முடைய அயல் நாடான திபெத்தை சீனா ஆக்கிரமித்தது. இன்றுவரை அந்த ஆக்கிரமிப்பு தொடர்கிறது. திபெத் மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள். இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். இன்றும் அந்த மக்களின் விடுதலை தீபம். சீனா என்ற அசுர சூறைக் காற்றால் அணைக்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்தியா அதை இன்னும் வேடிக்கைதான் பார்த்துக்கொண்டு இருக்கிறது.

இரண்டாவது. நம்முடைய சகோதரரகள் வாழும் இலங்கையில் நடநத மனித உரிமை மீறல்கள். சனல் 4 வெளியிட்ட ஆவணப் படங்களை நானும் பார்த்தேன். ஒருசில நிமிடங்களுக்கு மேல் என்னால் அதைப் பாரக்க முடியவில்லை. மனிதனாகப் பிறந்த யாராலும் அதைப் பார்க்க முடியாது.

இலங்கையின் அத்துமீறலைத் தடுக்க அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் பேசினேன். அதற்குப் பதில் சொன்ன பிரதமர், சீனாவைக் காரணம் காட்டி இலங்கை யின் மீது பொருளாதாரத் தடை விதிக்க முடியாது.

இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரிக்க வேண்டும் என்று ஜெனீவாவில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன் பிரதமர் மன்மோகனும் ராஜபக்ஷவும் சந்தித்தனர்.

அப்போது நமது பிரதமர், தமிழர் பகுதிகளில் உள்ள இராணுவத்தை இலங்கை அரசாங்கம் உடனடியாக விலக்க வேண்டும் என்றார். அதற்கு "உடனடியாக முடியாது என்றார் ராஜபக்ஷ. அதைக் கேட்டு விட்டு நமது பிரதமரும் திரும்பிவிட்டார்.

ஏனென்றால் அவர் செயற்படும் பிரத மராக இல்லை. அவர் அந்த அவமானத்தை ஏற்றுக் கொண்டு திரும்பியதற்கும் காரணம் இருக்கிறது. அந்த இனப்படுகொலையை நடத்தியதில் இந்தியாவும் பங்காளிதானே? அனைத்தையும இவர்கள்தானே திட்டம் தீட்டி நடத்தினார்கள்.

அதன் காரணமாகத்தான் ராஜபகஷவும் பிரதமரும் அடிக்கடி கைகுலுக்கிக் கொள் கிறார்கள். அந்த இரண்டு கரங்களிலும் தமிழர்களின் இரத்தக் கறை படிந்திருக்கிறது.

அதிலும் ராஜபக்ஷவின் கரத்தை விட, நமது பிரதமரின் கரங்களில் தமிழனின் இரத்தக் கறை அதிகமாகப் படிந்துள்ளது. நம்முடைய பிரதமரும் இன அழிப்புக் குற்றவாளி.

தமிழர்களின் இறந்த உடலைச் சிதைத்த மாபாவத்தை செய்த காங்கரஸ்க்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் நீங்கள் வாக்களித்தால், நம் தமிழனின் உடலைச் சிதைத்த மாபாவத்தில் நீங்களும் பங்கெடுத்தவர்கள் ஆவீர்கள் என்று எச்சரிக்கிறேன் என்றார். இவரது பேச்சு காங்கிரஸ் கட்சிக்கு மிகப்பெரிய அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. (2)

# 3 இலங்கையர்கள் இந்தியாவில் கைது

(கொழும்பு)

கடன் அட்டை மோசடியுடன் தொடரபுடைய மூன்று இலங்கையர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15 இலட்சம் ரூபா மோச டியுடன் தொடர்புடைய இவர்கள் மூவரும் சென்னை பொலி ஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (2)

# ஆசிரியர் காணாமற்போய் எலும்புக்கூடாக மீட்கப்பட்டார்

## இது எப்படியான தேசம்? கேள்வியெழுப்புகிறது இ.ஆ.ச.

ஒரு ஆசிரியர் காணாமற் போய் என்புக் கூடாக மீட்கப்பட்டுள்ளார் என்றால் இது எப்படியான தேசம்? என இலங்கை ஆசிரியர் சங்கங்கள் கேள்வியெழுப்பியுள்ளன. வடக்கு மாகாணத்தில் அதிபர், ஆசிரியர்கள் மட்டும் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை.

மனிதவுரிமை ஏற்பாட்டாளர்கள் உட்பட அனைவரும் தான் சுதந்திரமாக செயற்பட முடியவில்லையெனவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது. யாழ். பஸ் நிலையம் முன்பாக நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடை பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தின் போதே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர் நிரூபன் காணாமற்போய் எவ்வித விசாரணையும் பொலிஸாரால் முன்னெடுக்கப்படாத நிலையில் என்புக்கூடாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆசிரியரொருவர் காணாமற்போய் என்புக் கூடாக மீட்கப்பட்டுள்ளார் என்றால் இது எப்படியான தேசம்? இதனை நாம் வன்மையாக கண்டிப்பதோடு இப்படுகொலை தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்படல்வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் அதிபர், ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல மனிதவுரிமை ஏற்பாட்டாளர்களும் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை.

இன்று (நேற்று முன்தினம்) வடமாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் கறுப்புப் பட்டி அணிந்தே ஆசிரியர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

நிரூபன் மட்டுமல்ல மன்னார் புதைகுழி உட்பட அனைத்திற்கும் நீதியான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும்.

நீதி கிடைக்கும்வரை போராடுவோம், இங்கு போராட்டமே ஒரே வழி. இதனை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் உரத்துச் சொல்வோம் என்றார் அவர். (2-4)

# அநீதிகள் மற்றும் அடக்குமுறைகளுக்கெதிராக ஐ.ம. முன்னணியினர் போராடி வருகின்றனர்

## வ.மா.சபை உறுப்பினர் விந்தன் தெரிவிப்பு

பேரினவாத அரசுகளாலும் அரச ஆதரவுக் குழுக்களாலும் இனவாதக் குழுக்களாலும் படையினராலும் மேற்கொள்ளப்பட்டு வரும் அநீதிகள் மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராக ஜனநாயக மக்கள் முன்னணியினர் போராடி வருகின்றனர் என வடக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 29 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மேல்மாகாண சபைத் தேர்தலில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் மனோகணேசன் தலை மையிலான ஜனநாயக மக்கள் முன்னணி ஏணிச்சின்னத்தில் வேட்பாளர்களை களமிறக்கி இருக்கின்றது.

ஜனநாயக மக்கள் முன்னணியினர் ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக நாட்டில் அடக்கப்பட்டு ஒடுக்கப்படும் சமூகத்திற்கு தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருபவர்கள். வடக்கு, கிழக்கிலும் தலை நகரிலும் பேரினவாத அரசுகளாலும் அரச ஆதரவுக் குழுக்களாலும் இனவாதக் குழுக்களாலும் படையினராலும் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்களான கொலைகள், ஆட்கடத்தல்கள், கைதுகள், நில ஆக்கிரமிப்புகள், திட்டமிட்ட குடியேற்றங்கள், மிதமிஞ்சிய இராணுவ பிரசன்னம், வடகிழக்கில் சட்டவிரோதமான முறையில் பௌத்த விகாரைகளை அமைத்தல், இந்து, கிறிஸ்தவ ஆலயங்களையும் பள்ளிவாசல்களையும் உடைக்கும் அராஜக செயல்களுக்கு எதிராகவும் அரச பயங்கரவாதத்தால் மேற்கொளளப்படும் மனிதாபிமான, மனிதநேய மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கு எதிராகவும் நீதி கோரியும் அரசியல் உரிமை கோரியும் தலைநகரிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங் களையும் தீவிரமாக முன்னெடுத்தும் வருபவர்கள்.

இறுதி யுத்தத்தில் காணாமற்போனோர், கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் தொடர் ந்து குரல்கொடுப்பவர்கள். நடந்து முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வடமாகாணத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டங்களில் கூட்டமைப்பின் வெற்றிக்காக பல மேடைகள் ஏறியும் அறிக்கைகள் விட்டும் ஆதரவு தெரிவித்தவர்கள்.

நாட்டில் அதிகாரத்தை பகிர்ந்தளித்து நாட்டை ஐக்கியப்படுத்தி கட்டியெழுப்ப அயராது பாடுபட்டவர்கள். எமது மக்களுடைய பிரச்சினைகள் சர்வதேசம் வரை சென்று இன்று ஐ.நாவில் எதிரொலிக்கின்றது என்றால் அதற்கு ஜனநா யக மக்கள் முன்னணியினருக்கும் கணிசமான பங்குண்டு என்பதை ஒருபோதும் தமிழினம் மறக்கப் போவதுமில்லை, மறுக்கப்போவது மில்லை.

இத்தகைய அத்துமீறல்களுக்கு எதிராக தமிழ் கூட்டமைப்பினராகிய எம்மாலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராலும் முன்னெடுக்கப்படும் அனைத்துப் போராட்டங்களிலும் பங்கெடுத்து உள்நாட்டிலும் உலக அரங்கிலும் தமிழ் பேசும் இனத்திற்காக நேரடியாகவும் மற்றும் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையங்கள் ஊடாகவும் குரல்கொடுத்து நாடுகளின் தூதராலயங்கள், நாடுகளின் இராஜதந்திரிகள் மட்டத்திற்கும் இந்த நாட்டில் சிறுபான்மையினர் எதிர்நோக்கும் அனை த்து விடயங்களையும் அரசியல் நோக்கம் கருதாது உணர்வுபூர்வமாக எடுத்தியம்பி வருபவர்கள்.

இப்படியான ஒரு கட்சிக்கு எதிர்வரும் மேல் மாகாணசபைத் தேர்தலில் ஆதரவு கொடுப்பது தமிழர்களாகிய எமது தார்மீக பொறுப்பும் கடமையுமாகும்.

வடக்கு, கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தங்களை வாக்கா ளர்களாக பதிவு செய்துள்ள தமிழ் பேசும் மக்கள் கட்டாயமாக ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏணிச்சின்னத்திற்கு வாக்களித்து நீங்கள் விரும்பும் அக்கட்சியின் வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க வேண்டும். இதுதான் தற்பொழுது வடகிழக்கிலும் புலத்திலும் வாழும் தமிழர்களின் விருப்பமும் கூட. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான் சார்ந்த கட்சியும் பொருத்தமான நேரத்தில் ஒரு தீர்க்கமான முடிவினை எடுத்து தமிழ் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜனநாயக மக்கள்முன்னணியை ஆதரிக்க வேண்டும் எனவும் கோரி நிற்கின்றது என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




36வது சுவிசேஷ மாநாடு!

மார்ச் மாதம் **28**ம் **29**ம் **30**ம் திகதிகளில்

தினமும் மாலை **5.00** மணிக்கு

**நகரசபை மைதானம் யாழ்ப்பாணத்தில்** நடைபெறும்.

(5660)

(துரையப்பா மைதானம் அருகில்)

**பிரியமானவர்களே !**

அண்டசராசரத்தை ஆளுகை செய்யும் ஆண்டவர் ஒருவர் இருக்கிறார். அவருடைய வல்லமையை அளவிட முடியாது. அவரே தொடக்கமும் முடிவுமானவர். ஜீவியத்தில் நோய், துன்பம், கண்ணீர், சஞ்சலம், தோஷங்களிலிருந்தும், விடமுடியாத பழக்கவழக்கம், பாவ வாழ்க்கை, பொல்லாத ஆவிகளின் செய்வினை கட்டுகள், மாந்திரீகம், பில்லிசூனியத்திலிருந்தும் விடுதலை பெற இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நோக்கி வருகிறது. இச் சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். இன்றே அற்புதத்தின் நாள். ஆசீர்வாதத்தின் நாள். உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தெய்விக சுகத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள வாருங்கள்!**

உங்களுக்காக பிரார்த்தனை செய்பவர்கள்,

**கலாநிதி. M.R. இராஜேந்திரம்** அவர்கள். **C.V. இராஜேந்திரம்** அவர்கள்.

**36வது வருட வேதாகம கருத்தரங்கு!**

2014 மார்ச் 23 முதல் 30 வரை தினமும் காலை 8.00 - 2.00 வரை

நடைபெறும் இடம்:- **A.O.G சபை மண்டபம்,**

68/2, ராசாவின் தோட்டம், சுண்டிகுளி, யாழ்ப்பாணம். பிரவேசம் இலவசம்

For Information :- Jesus Lives Evangelical International Ministry

...22608, Fax- 2525695, Web- Jesuslivesl k.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியில் ஆறுமாதம் கொண்ட தொழில் தேடுபவர்களுக்கான இலவச தொடர்பாடல் ஆங்கிலபாட கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளதாக கல்லூரிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

குறித்த கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாமல் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள தொழில் நுட்பவியல் கல்லூரியில் அமைந்துள்ள தொழில்நுட்பவியல் கல்லூரியில் நேரடியாக வருகை தந்து பதிவுகளை மேற்கொண்டு பயிற்சி நெறியினைத் தொடர முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 222 0028 எனும் தொலைபேசி இலக்கத்தினை தொடர்பு கொள்வதன் மூலம் தகவல்களைப் பெற முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் சிங்கள சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப் பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி வரை கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்து ள்ள யாழ் பிராந்திய நிலையத்திலும், 155 ஆம் மைல்கல் , கண்டி வீதி, கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் பெற்றுக் கொள்ளமுடியும் என அவர் குறிப்பிடடுள்ளார்.

இக் கற்கை நெறிக்கு 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்க முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)

# அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பு

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித்திட்டம் தயாரிப்பு கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக சுழிபுரம் வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை பண்ணாகம் ஜே/175 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் அதேவேளை பனிப்பு லம் ஜே/176 கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரையும் நடைபெறும்.

இதேவேளை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சித்தங்கேணி ஜே/177 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு காலை 9 மணி தொடக்கம் 11.30 மணி வரையும் சங்கானை கிழக்கு ஜே/178 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரையும் நடைபெறவுள்ளது. (2)

# வாரம் ஒரு தகவல்

## மூளை உபயோகம்

"நான் ஒரு விடயம் சொல்லுவேன் அது உண்மையா இல்லையா என்பதை நீங்கள்தான் சொல்ல முடியும்."

"சொல்லுங்கள்"

"நமது மூளையை நாம் முழுமையாக உபயோகப்படுத்துவதில்லை என்கிறேன்."

"உண்மை தான்... ஒரு சராசரி மனிதன் தனது மூளையில் ஒரு சிறிய பகுதியைத்தான் உபயோகப்படுத்துகிறான். இன்னும் உபயோகிக்க வேண்டிய பகுதி நிறைய இருக்கிறது."

"பார்த்தீர்களா... அப்படி இருக்கும் போது அது ஞாபகமில்லை இது ஞாபகமில்லை என்று வேறு சொல்லிக்கொண்டு இருக்கிறோம்."

"ஒரு மனிதன் தனது மூளையில் 90 ஆயிரம் கோடி வார்த்தைகளை பதிந்து வைத்துக்கொள்ள முடியும்."

"அப்படியா..."

நாம் படிப்பது மனதில் பதிய வேண்டுமானால் நாம் அதை படித்த பின்னரும் மனதில் நிறுத்தி 10 நிமிடமாவது அசை போட வேண்டும்."

"காலை நேரத்தில் படிப்பது நல்லது அல்லவா?"

"மூளையின் செயலாற்றும் திறன் ஒவ்வொரு மணிக்கும் மாறுபடுகிறது. காலையில் சுறுசுறுப்பு, மதியத்தில் மந்தம், உடம்பு சோர்ந்து போகும்போது மூளையும் சோர்ந்து விடுகிறது. அவ்வப்போது ஓய்வு கொடுத்து அதை உபயோகப்படுத்த வேண்டும்."

"இது ஒரு மனநோய் மருத்துவமனை தானே?"

"ஆமாம்"

"உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி டாக்டர். உங்களிடம் இவ்வளவு தூரத்திற்கு கேள்வி கேட்டதனால் என்னை மனநோயாளி என்று நீங்கள் தப்பாக புரிந்து கொள்ளக்கூடாது."

"இவ்வளவு தூரத்திற்கு பதில் சொன்னதால் நீங்களும் என்னை தப்பாகப் புரிந்து கொள்ளக்கூடாது... நான் டாக்டர் இல்லை!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# முகாமைத்துவ பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் முகாமைத்துவ பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் க.பொ.த.உயர் தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி அடைந்தவர்களும் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்களும் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான்கு வருடங்களை கொண்ட இக் கற்கை நெறிக்குரிய வகுப்புக்கள் அனைத்தும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் உள்ள பிராந்திய நிலையங்களிலும் இடம்பெறும்.

இக் கற்கை நெறிக்கான விண்ணபப்படிவங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்திலும் 155 ஆம் மைல், கண்டி வீதி, கிளி நொச்சி பிராந்திய நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார். (2)

# தேசிய கித்துள் கண்காட்சி விற்பனை சந்தை

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் தேசிய கித்துள் கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4,5,6, ஆம் திகதிகளில் கொழும்பு பௌத்தலோக மாவத்தையிலுள்ள சுதர்ஷி வளாகத்தில் நடைபெறும்.

இக் கண்காட்சி தொடர்பிலான ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு, நாரஹன்பிட்டியில் அமைந்துள்ள தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. (2)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (2)

# இராசி பலன்

23.03.2014
(பங்குனி 9, ஞாயிற்றுக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.19 மணிக்கு
சப்தமி மாலை 6.15 மணிவரை
கேட்டை பிற்பகல் 1.30 மணிவரை
இராகுகாலம் 4.46-6.16 மணிவரை
சுபநேரம் 9.16-10.46 மணிவரை

**மேடம்** காலையில் சலசலப்பும் மாலையில் கலகலப்புமாக இருக்கும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**இடபம்** எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, காலையில் கைகூடும் என்ற காரியம் மாலையில் தாமதமாகலாம்.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள், முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், வீட்டுவேலைகளை முடிப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**சிங்கம்** சிறப்பான நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், போக விரும்பும் இடத்திற்கு போவதில் சில தடைகள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**கன்னி** குடும்பத்தினர் உங்களின் சொற்களை கேட்டு நடக்க முன்வருவர், இல்லத்தில் சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும், பயணங்களால் நன்மையுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** இளைய சகோதரத்தின் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.

**விருச்சிகம்** சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, பயணங்களால் பலனுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள்,சேமிப்பை விலக்குவது நல்லது,திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையை கேட்டு நடப்பது நல்லது, சுப விரயங்கள் கூடும் நாள், உறவினர் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கும்பம்** எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், சமயோசித புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசி தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**மீனம்** வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், நம்பிக்கைகள் நடைபெறும் நாள், போசன நன்மையுண்டு.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 80 |
| தக்காளி | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 |
| கோவா | 30 | 50 |
| கரட் | 90 | 100 |
| பூசணி | 30 | 40 |
| புடோல் | 40 | 60 |
| வாழைக்காய் | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-80 | 80 |
| பெரிய வெங்காயம் | 60-75 | 60 |
| பாகற்காய் | 200 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 |
| பயற்றங்காய் | 60 | 60 |
| லீக்ஸ் | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 60 |
| கறிமிளகாய் | 70 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 240 |
| போஞ்சி | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 40 |
| தேசிக்காய் | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40-45 |
| இராசவள்ளி | 70 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ இலட்சியத்தை நிறைவேற்ற பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும்

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532

## ம.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சுட்டிக்காட்டு



தமிழீழம் தொடர்பில் ஐ.நா. ஈழத்தில் பொதுவாக்கெடுப்பு நடத்திட இந்திய அரசு ஆதரவு அளிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை ம.தி.மு.க. மேற்கொள்ளும் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.த.மு.க. தேர்தல் அறிக்கையை பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டார்.

அதில் கூறியிருப்பதாவது,

தமிழ் ஈழம் என்ற இலட்சிய நோக்கத்தை நிறைவேற்ற ஐ.நா. மன்றம் ஈழத்தில் பொது வாக்கெடுப்பு நடத்திட இந்திய அரசு ஆதரவு அளிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை ம.தி.மு.க. மேற்கொள்ளும்.

இந்தியாவில் விடுதலைப் புலிகள இயக்கத்திற்கு விதிக்கப்பட்டுவுள்ள தடையை நீக்க வலியுறுத்துவோம்.

இந்தியாவில் மரண தண்டனையை முற்றிலும் நீக்க வேண்டும் என வலியுறுத்துவோம்.

தமிழ்நாட்டு மீனவர்களின் மரபு உரிமையைப் பாதுகாக்கவும், மீனவர்கள் இலங்கை கடற்படையால சுட்டுக் கொல்லப்படுவதைத் தடுக்கவும், மீனவர்கள் மீதான தாக்குதல்களை முடிவுக்கு கொண்டு வரவும் கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீட்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாற்று வழித்தடத்தில் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வலியுறுத்துவோம்.

கூடங்குளத்தில் மேலும் அணு உலைகள் அமைக்க முயற்சிப்பதைத் தடுப்பதுடன், தற்போது இயங்கி வரும் அணு உலைகளையும் மூடிட வலியுறுத்தப்படும்.

மீதேன் எரிவாயு எடுக்கும் திட்டத்தை இரத்துச்செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

சில்லறை வணிகத்தை அழிக்க முயலும் அயல்நாட்டு நேரடி முதலீட்டுக்கொள்கையைத் திரும்பப் பெற வலியுறுத்துவோம்.

இளைஞர்கள் சீரழிவுக்கும் மூலகாரணமான மதுக்கடைகளை மூடவேண்டும். முழுமையான மது விலக்கை நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதில் ம.தி.மு.க. உறுதியாக இருக்கின்றது.

உச்சநீதிமன்றத்தின் கிளையை தமிழகத்தின் தலைநகர் சென்னையில் அமைத்திட வலியுறுத்துவோம்.

கறுப்புப் பணத்தை மீட்டு இந்தியாவுக்கு கொண்டு வர வலியுறுத்துவோம.

சென்னை, கொல்கத்தா விமான நிலையங்களைத் தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவைத் திரும்பப் பெற வலியுறுத்துவோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (2)

**தேவை**

கட்டட நிர்மாணத்துறையில் பல வெற்றிடம் மேசன்/ செடலிங் பாஸ்/ கம்பிபாஸ்/ பெயின்டர்/ வெல்டர் (1200/= 1500/=) கையுதவியாளர் (900/=-1100/=) உணவு+ தங்குமிடம் வழங்கப்படும் (யாழ் கொழும்பு கண்டி/ களனி/ தெஹிவளை) வயது 18-45

(சி-6804) தொடர்பு-077-5561883

**உடனடி வேலைவாய்ப்பு**

நீங்கள் 18-50 வயதுடையவரா? (ஆண்- பெண்) சம்பளம் 18000/-, 25000/-, 32000/- உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளுடன் உடனடியான வேலைவாய்ப்புக்கு கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/ கோடியல்/ நூடில்ஸ/ தண்ணீர் போத்தல் PVC/ கோழி இறைச்சி/ தேயிலை/ காமென்ட்/ பெயின்ட் மற்றும் பல தொழிற்சாலை களில் உற்பததி/ லேபல்/ தரம் பிரித்தல்/ களஞ்சியப் பிரிவுக்கு ஆட்கள் தேவை (நண்பர்கள் குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள். உடன் தொடர்பு (விசேடம் வடக்கு/ கிழக்கு தமிழ்/ முஸ்லிம் மக்களுக்கு) தொடர்பு: 077 8430179

(சி-6804)

TEGOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute


## அதியுயர் ஊடக விருதுகள் 2013

**சிறந்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் 15 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி**

அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பின்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களைக் அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து கோருகின்றது.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா டி ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டு செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்கு கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிரிவர்தன விருது. (மும்மொழிகளிலும்)
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது

ஊடகத்துறையைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.



இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல: 96, கிருல வீதி கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது www.slpi.lk, www.pccsl.lk என்ற இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 10 ஏப்ரல் 2014 ஆகும்.**

இ

**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா: 41 செவ் 12 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, BA – Following / உளவளத்துணையாளர்<br>தொ.இ: B/2956 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 16.25<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA – 3rd Year<br>தொ.இ: G/2968 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 98 செவ் 7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L / சாரதி<br>தொ.இ: B/2959 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 64<br>உயரம்: 4'3"<br>தகைமை/தொழில்: O/L / Data Entry<br>தொ.இ: G/2969 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 11.5<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: தொழில்நுட்பம் (USA – PR)<br>தொ.இ: B/2960 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 58<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BFA<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்<br>தொ.இ: G/2973 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4 செவ் 1 ல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: A/L / வியாபாரம்<br>தொ.இ: B/2963 | பிறப்பு: 1967 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 41 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / கணக்காளர்<br>தொ.இ: G/2979 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

1717 FOLLOW US

முழுவதையும் DOWNLOAD செய்திட முடியவில்லையா?



4.5GB - ரூ.399
8GB - ரூ.699
12GB - ரூ.999
28GB - ரூ.1,999

Sri Lanka Telecom Mobitel

(சி-6806)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைதான நபர் நீதிமன்றத்தினால் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட நபரை நிரபராதி எனக் கூறி யாழ்.மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் யாழ். மேல் நீதிமன்றத்தினால் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே வல்லிபுரம் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த தவராசா கஜேந்திரன் (வயது 33) என்ற நபரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.


மேற்படி நபர் கடந்த 2006, 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தின் முன்னரங்க காவலரண்கள் மீது தாக்குதல் மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி ஓமந்தை பகுதியில் வைத்து பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கடந்த 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்.மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட போது இவரால் அளிக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கடந்த ஜனவரி 31ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவருக்கு எதிரான வேறு சான்றுகள் உள்ளனவா எனப் பரிசீலனை மேற்கொள்வதற்காக மேற்படி வழக்கு நேற்று முன்தினம் வரை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அரச சட்டத்தரணி குறித்த நபருக்கு எதிராக வேறு சான்றுகள் இல்லையென மன்றில் தெரிவித்ததனையடுத்து நீதிபதி குறித்த நபரை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆஜராகியிருந்தார். (2-4)




நன்றி: ஐலன்ட்

# அகிம்சை முறையே எங்கள் ஆயுதம்; பிரார்த்தனையே எங்கள் கேடயம்

## மன்னாரில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் நிலைமை சீரடையவில்லை என்ற தோற்றத்தை வரவழைக்கவே இராணுவத்தினரும் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரும் செயற்பட்டு வருகின்றனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதியின் செயற்பாடுகள் மீண்டும் வேதாளம் முருங்கைமரத்தில் ஏறிக் கொண்டது போல் தெரிகின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள் ளார்.

மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அடையாள உண்ணாவிரதமும் பிரார்த்தனைக்கும் முதலமைச்சரால் அனுப்பிவைக்கப்பட்ட செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.குடாநாட்டுக்கு ஒரு புதிய கட்டளைத் தளபதி நியமிக்கப்பட்டிருந்தார். முன்னர் கிளிநொச்சியில் பதவியேற்றிருந்த அவர் யாழ். குடாநாட்டில் பதவியேற்றதும் பல நல்ல காரியங்களைச் செய்தார்.

200 இற்கும் மேற்பட்ட இராணுவத் தடைப் பணியிடங்களை அவர் வாபஸ் பெற்றுக் கொண்டார். எமது விவசாயிகள் பாதிக்கப் படக் கூடாது என்பதால் இராணுவம் பயிரிட்டுப் பெற்ற மரக்கறிகளை திருநெல்வேலிச் சந்தைக்கு அனுப்பாது தடுத்தார். ஏ9 வீதியில் குடா நாட்டிற்குள் இராணுவத்தால் நடத்தப்பட்ட இயக்கச்சி தவிர்ந்த கடைகளை அவர் மூடச் செய் தார்.

இராணுவத்தினர் மத்தியில் கட்டுப்பாடுகளையும் கட்டுக்கோப்பையும் கொண்டு வந்தார். இவ்வாறு இருக்கும் போதுதான் ஜெனீவா வந்தது. கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை என்னிடம் வந்து விடுதலைப்புலிகள் மீண்டும் வடக்கில் மீள் இணைகின்றார்கள். இதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது எனது கடமை என்றார். பாதுகாப்பு பலப்படுத்தப்படுகின்றது என்றார். பம்போட்டு எவ்வாறு மீள் இணைப்பு நடை பெற்றிருக்கின்றது என்று தாங்கள் நம்புகின்றார்கள் என்பதை எடுத்துக் காட்டினார்.

இதை ஏன் உங்களுக்கு சொல்கின்றேன் என்றால் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டுள்ளது போலத் தெரிகின்றது. பழைய நாட்களை எமக்குணர்த்தும் விதத்தில் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்பது வெளிப்படையாகவே தெரியவந்துள்ளது.

ஆகவே அன்று நடந்தவற்றை என்றும் நடைமுறைப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட இருக்கின்றன. அவ்வாறு நடந்துகொண்டிருப்பதற்கு எதி ராகத் தான் இந்த உண்ணாவிரதமும் பிரார்த் தனையும் இடம்பெறுகின்றன.

சர்வதேசங்கள் எமது நாட்டின் நடவடி க்கைகளைக் கண்காணிப்பதை அரசாங்கம் விரும்பவில்லை. அதனால்தான் இவ்வளவு காலமும் இருந்துவிட்டு மார்ச் 28 ஆம் திகதிக்கு அண்மித்த கால கட்டத்தில் கதைகள் கட்டவிழ்க்கப்பட்டு ஜெனீவாவிலும் கூறப்பட்டு வருகின்றன.

நான் இராணுவத் தளபதியிடம் கேட்டேன். ஜெயக்குமாரி வீட்டினுள் இருந்து யாரோ ஒரு வர் வந்த வேளையில் இராணுவத்தினர் அங்கு இருக்கவில்லையா என்று. தூரத்தில் இருந்தார்கள் என்றார். இராணுவத்தினர் அங்கு இருக்கும்போதே சுட்டுவிட்டுத் தப்பிப் போய்விட்டார் என்றால் அதை ஏற்பது சற்றுக்கடினமாக இருக்கின்றது என்றேன். அவர் பதில் கூற வில்லை.

எப்படியாவது வடமாகாணத்தில் நிலைமை சீரடையவில்லையென்றதோற்றத்தைவரவழைக்கவே இந்த நாடகங்கள் நடத்தப்படுகின்றன என்பதே தமிழ்மக்கள் அனைவரின் ஏகோபித்த முடிவு.

எனவே கட்சி அடிப்படையில் அன்றி நாங்கள் வருங்காலம் எமக்கு மேலும் இடர் தரு வதாக அமையாது நல்லவிதமாக அமைய வேண்டுமென்றே நாங்கள் இந்த அடையாள விரதத்தையும் பிரார்த்தனையையும் நடத்து கின்றோம்.

மக்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள். வன்முறைகளுக்கு எந்தத் தருணத்திலும் இடங்கொடுக்காதீர்கள். எங்கள் அகிம்சை முறையே எமது ஆயுதம். எமது பிரார்த்தனையே எமது கேடயம். இவற்றின் உதவியுடன் எம்மை உறுத்துப்பார்க்கும் சகலரையும் தர்மத்தின் பக்கம் சாய வைப்போம்.

நாங்கள் எந்தவிதத்திலும் அரசாங்க எதிர்ப்பில் ஈடுபடவில்லை. ஆனால் இங்கு போர்க் கால முடிவில் நடைபெற்றவை சம்பந்தமான ஆய்வு நடைபெற இடமளிக்கப்படவில்லை. நடப்பவை சம்பந்தமாக அரசாங்கம் ஆற அமரச் சிந்தித்துப் பார்க்கவில்லை.

அத்துடன் எதேச்சாதிகாரமாக இங்கு நடக்கப் போகின்றவற்றுக்கு இன்று இடப்படும் அடித்தளத்தை ஆராய எமக்கு அனுசரணைகள் வழங்கப்படவில்லை. எனவே அடுத்த நாடு களுக்குச் சொல்லி அழவேண்டிய ஒரு சந்தர்ப்பத்தை எமக்கு அரசாங்கமே எடுத்துத் தந்துள்ளது. இதற்காக எம்மைக் குற்றங்கூறு வதில் பயனில்லை.

மனிதவுரிமையாளர்கள் ருக்கி பெர்னாண்டோ, அருட்தந்தை பிரவீன் மகேசன் ஆகியோர் அநியாயமாகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு இரண்டு நாட்களின் பின்னர் குற்றச்சாட்டுக்கள் எதுவும் இன்றி விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

இன்று பூஸா முகாமுக்கு அனுப்பப்பட்டிருக்கும் ஜெயக்குமாரி கூட ஒருநாள் வழக்கேதுமின்றி விடுதலைப்படவேண்டியவரே. ஆனால் அதுவரையில் அவர் அனுபவிக்கப்போகும் நரக வேதனைகள், அவரின் மகள் அனுபவிக்கப்போகும் அவலங்கள் ஆகியனவற்றுக்கு யார் பதில் சொல்லப்போகின்றார்கள்.

ஜெனீவாவில் கதை அளக்க இவர்கள் தான் கிடைத்தார்களா? அரசாங்கமும் இராணுவமும் புலி வந்துள்ளது, புலி வந்துள்ளது என்று ஜெனீவாவில் கூக்குரல் இட இவர்கள் தான் பலிக்கடாக்களாகக் கிடைத்தார்களா?


இராணுவத்தை வெளியேறச் சொன்னால் இதே புலிக்கதை கூறி எமக்கு இராணுவத்தின் பாதுகாப்புத்தேவை என்கின்றார்கள் அரசாங்கமும் இராணுவமும்.

சிவில் பொலிஸ் படையை வேண்டுமானால் விருத்தி செய்யுங்கள். கூடிய தமிழ் பேசும் பொலிஸ்காரர்களை பொலிஸ் பதவிகளில் நிறுத்துங்கள்.

இதைவிட எமது காணிகளைப் பலாத்காரமாக அரசாங்கம் வெளிமாவட்டங்களில் இருந்து வருகின்றவர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதையும் எதிர்த்து இந்த விரதத்திலும் பிரார்த்தனையிலும் ஈடுபடுவோம்.

மக்கள் யாவரும் அகிம்சை வழி நின்று தமது கட்டுப்பாட்டையும் கட்டுக்கோப்பையும் வெளிக் கொண்டுவரும் விதமாக அமைதியுடன் அணி திரண்டு எமது அந்தரங்கத்தை வெளிக் கொண்டு வருவோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4-266)





இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தினரால் இசையரங்கம் அண்மையில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் மங்கல விளக்கேற்றுவதையும் இசையரங்கம் இடம் பெறுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலோர பாதுகாப்பு திணைக்களம் படைப்பிரிவாக மாற்றம்

(கொழும்பு)

கடலோர பாதுகாப்பு திணைக்களத்தை படைப் பிரிவாக மாற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார்.

அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கி வரும் கடலோர பாதுகாப்பு திணைக்களத்தை கலைத்து விட்டு, அதனை படைப்பிரிவாக மாற்ற துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி, கடந்த 20 அமைச்சரவை பத்திரம் ஒன்றை தாக்கல் செய்துள்ளதாக தெரிய வருகிறது.

சில அமைச்சர்கள் முன்வைத்த யோசனைகளை அடுத்து அன்றைய தினம் ஜனாதிபதியின் அமைச்சரவை பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம புதிய திணைக்களமாக கடலோர பாதுகாப்பு திணைக்களம் ஏற்படுத்தப்பட்டது.

உடனடியாக செயற்படும் உத்தரவுகளை திணைக்களத்தினால் பிறப்பக்க முடியாது என்பதால், அதனை படைப் பிரிவாக மாற்ற வேண்டும் என அமைச்சரவை பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது திணைக்களமாக இயங்கி வரும் கடலோர பாதுகாப்பு திணைக்களம் படைப்பிரிவாக மாற்றபபட்ட பின்னர், திணைக்களத்தில் பணியாற்றி வரும் ஊழியர்களின் உரிமைகள் இரத்துச் செய்யப்படுவதுடன் அது உத்தரவுக்கு அமைய செயற்படும நிறுவனமாக மாறும் என அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.(2)

# வடபகுதி வளிமண்டலவியல் தகவலை சேகரிக்க முடியாதுள்ளது

வட பகுதியில் வளிமண்டலவியல் தகவலை சேகரிக்க முடியாதுள்ளது என வளிமண்டலவியல் முன்னெச்சரிக்கை திணைக்கள பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் யாழ் மாவட்ட செயலகத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகளாவிய ரீதியில் உலக வளிமண்டலவியல் நிறுவனத்தின் கீழ் இந்த வளிமண்டல திணைக்களங்கள் யாவும் இயங்குகின்றன. ஆதலால் வடபகுதி பிரதேசங்களாகவுள்ள காங்கேசன்துறை, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு வளிமண்டலவியல் தகவலை சேகரிக்க முடியாதுள்ளது.

இலங்கையில் 22 தன்னியக்க வளிமண்டல நிலையங்களும் 38, விவசாய ஆராய்ச்சி நிலையங்களும், 350 மழைவீழ்ச்சி சேகரிப்பு நிலையங்களும் உள்ளன.

அதில் யாழ்ப்பாணத்தின் சில இடங்களான யாழ்ப்பாண கல்லூரி, தென்னை அபிவிருத்தி நிலையம், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை போன்ற இடங்களில் இந்த மழைவீழ்ச்சி சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி 2012 ஆம் ஆண்டளவில் 930 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி காணப்பட்டது. கடந்த வருடம் ஆயிரத்து 30 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி காணப்பட்டது. ஆயினும் சாதாரணமாக புவியியல் ரீதியான மழைவீழ்ச்சி ஆயிரத்து400 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியை கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் தேவையான மழை குறித்த மழைக் காலப் பகுதிக்கு கிடைக்கப்பெறாமையே மழைவீழ்ச்சி குறைவடைய காரணம் எனவும் அவர் தெரிவித்தார். (2-6)

# சட்டமூலம் நிறைவேற்ற சபையில் கோரம் அவசியமில்லை

(கொழும்பு)

சட்ட மூலமொன்றை நிறைவேற்ற சபையில் கோரம் அவசியமில்லை என பிரதி சபா நாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

மருத்துவ (திருத்த) சட்ட மூலம் அண்மையில் சபையில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 16 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டன. மேற்படி சட்ட மூலம் தொடர்பான விவாதத்தின் முடிவில் அஜித் குமார எம்.பி. வாக்கெடுப்பு கோரியிருந்தார்.

ஒழுங்குப் பிரச்சினையொன்றை நேற்று முன்தினம் எழுப்பிய அவர் கோரம் இன்றி மேற்படி சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் இதனை சட்டபூர்வமாக ஏற்க முடியாது. இது குறித்து நிலையியற் கட்டளையிலும் அரசியல் யாப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, சபையில் எப்பொழுதும் கோரம் இருக்க வேண்டும் .20 பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இல்லாவிட்டால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கோரம் இல்லாததை சுட்டிக்காட்ட முடியும். சட்ட மூலம் நிறைவேற்றவும் கோரம் தேவை என்றார். இதற்கு பதிலளித்த பிரதி சபாநாயகர் இந்த விடயத்தை சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். சட்டமூலம் ஒன்றை நிறைவேற்ற கோரம் அவசியமில்லை என்றார். (2)



லண்டனைச் சேர்ந்த செந்தில்நிதி கார்த்திகா என்பவரால் வழங்கப்பட்ட நாகதம்பிரான் சிலை அண்மையில் உருத்திரபுரம் பாலையடி அருட்செல்வ விநாயகர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெற்ற போது.... (படம்: சிவநகர் செய்தியாளர்)

# பிரிவுத்துயர் பகிர்வு

## இராமலிங்கம் வசந்தராஜன்



பளை முள்ளியானைப் பிறப்பிடமாகவும் சுவிட்சர்லாந்து Oberbuchsiten ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் வசந்தராஜன் கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு Friedhof Meisenhardmore ,4600 Olten, Switerland என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

## அந்தோனிமுத்து கவுரியேற்பிள்ளை



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது இன்பர்சிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து கவுரியேற்பிள்ளை கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி பூசை இன்று முற்பகல் 10 மணிக்கு சக்கோட்டை புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ சபையில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் சக்கோட்டை புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ சபையின் சேமக்காலை பழைய வேதக்கோயிலடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

## சந்தோஷி கஜந்தன்



குருநாகல்,நாரம்மளவை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தோஷி கஜந்தன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குருநாகல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.


## கணபதி கந்தசாமி



நாவற்குழி கிழக்கு, தச்சன் தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி கந்தசாமி கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிண முருங்கை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## கார்த்திகேசு ஆறுமுகம்



காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு ஆறுமுகம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு இன்பம் மலர்சாலையில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# மருந்துகள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய பங்களாதேஷிலிருந்து இலங்கைக்கு மருந்துகள்

வைத்தியசாலைகளில் அடிக்கடி நிலவும் சிலவகையான மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் பங்களாதேஷ் அரசாங்கத்திடமிருந்து நேரடியாக மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு அந்நாட்டின் பிரதமர் ஷேக் ஹசீனா அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

அரசாங்கத்திடமிருந்து அரசாங்கத்திற்கு எனும் செயற்றிட்டத்திற்கூடாகவே பங்களாதேஷிலிருந்து இலங்கைக்கு நேரடியாக மருந்துகள கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதன் காரணமாக இலங்கை. அரசாங்கம் பங்களாதேஷின் மருந்து நிறுவனங்களுடன் எவ்வித தொடர்பினையும் ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இதன்போது ஏற்படமாட்டாதெனவும் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் பங்களாதேஷிற்கு மேற்கொண்ட விஜயத்தின்போது அந்நாட்டு ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளுக்கமையவே இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திலிருந்து அரசாங்கம் மருந்து கொள்வனவு தொடர்பிலான இரு நாடுகளுக்குமிடையிலான ஒப்பந்தம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் கைச்சாத்திடப்படுமெனவும் அமைச்சின் பேச்சாளர் வன்னிநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க வைத்தியசாலைகளுக்கான மருந்துகள் கேள்வி பத்திரமடிப்படையிலேயே வெளிநாடுகளிலுள்ள மருந்து நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்றன. எனவே, தேவையான அளவு மருந்துகள் உரிய நேரத்தில் கிடைக்காமையினால் அடிக்கடி மருந்து தட்டுப்பாடு ஏற்படுகின்றது.

சில மருந்து நிறுவனங்கள் வேண்டுமென்றே காலம் தாழ்த்துவதனால் அதிக விலைக்கு வேறு இடங்களில் மருந்துகளை கொள்வனவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது.

இப்பிரச்சினைகுறித்து அதிக கவனம் செலுத்தி வந்த அமைச்சர், நிரந்தர தீர்வு காணும் நோக்கிலேயே பங்களாதேஷ் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தியிருந்தார்.

இலங்கை அரசாங்கத்துக்கு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தும் வெளிநாட்டு மருந்து நிறுவனங்களின் ஏகபோக உரிமையிலிருந்து மீட்சி பெறுவதற்காக அமைச்சர் மலேசியா. தாய்லாந்து ஆகிய அரசாங்கங்களுடனும் பேச்சு நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(2)

# பொதுபல சேனா பௌத்த பிக்குகள் ஆத்திரமடைவது வருத்தமளிக்கிறது

## ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

(கொழும்பு)

பொதுபல சேனா இயக்கத்தின் பௌத்த பிக்குகள் ஆத்திரமடைவது வருத்தமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்ட குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பௌத்த மதக் கோட்பாடுகளில் அன்பையும் கருணையையும் போதிக்கின்ற போதிலும், இந்த பௌத்த பிக்குகள் குரோத உணர்வுடன் செயற்படுகின்றனர்.

பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் அண்மையில் மிகவும் இழிவாக தூற்றி யிருந்தார். இது தொடர்பில் நான் மிகுந்த வேதனையடைகின்றேன்.

ஞானசார தேரரின் நடவடிக்கைகள் ஏனைய பௌத்த பிக்குகளின் நன்மதிப்பினை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

பொதுவாக பௌத்த மத தேரர்கள் அன்பை போதிக்கின்ற போதிலும் ஞானசார தேரர், குரோத உணர்வுடன் இழிசொற்களை பயன்படுத்தி திட்டியிருந்தார்.

எல்லா நேரங்களில் பௌத்த பிக்குகளை மதிக்கின்றேன். எனினும் பௌத்த பிக்கு ஒருவர் மிகவும் கீழ்த்தரமான சொற்களைப் பயன்படுத்தி இவ்வாறு கேவலமாக பேசுவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எமது மக்களின் மனோ நிலை குறித்து பேசுவதற்கு எங்களுக்கு உரிமையுண்டு. அவ்வாறு பேசுவதனால் பௌத்த பிக்குகள் கீழ்நிலைப் படுத்தப்படமாட்டார்கள்.

எமது மக்களின் பிரச்சினைகளை சர்வதேசத்திற்கு எடுத்துச் சொல்லியதில் தவறில்லை. அதற்காக கடுஞ்சொற்களினால் என்னை திட்ட வேண்டிய அவசியமில்லை.

எனினும் நாட்டில் நாம் குரோதத்தை உருவாக்கி செயற்படவில்லை என ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமிர்ந்து நில் - திரைவிமர்சனம்




சென்னை மார்ச்.11 (டி.என்.எஸ்) இலஞ்சம் வாங்குவதும், கொடுப்பதும் தவறு என்ற நிலை மாறி, தற்போது இலஞ்சம் கொடுக்கவில்லை என்றாலும் வாங்கவில்லை என்றாலும் தான் தவறு என்ற நிலை உருவாகிவிட்டது. இதை திரைப்படங்களின் வாயிலாக பல இயக்குநர்கள் தங்களுக்கு உரிய பாணியில் சொல்லியிருக்கிறார்கள். அந்த வரிசையில் இயக்குநர் சமுத்திரக்கனியின் இலஞ்ச ஒழிப்பு பிரசாரமாக வெளியாகியிருக்கும் படம் தான் "நிமிர்ந்து நில்".

கலவி மட்டும் இன்றி, அன்பு,அரவணைப்பு உள்ளிட்டவையை கற்பிக்கும் குருகுலம், ஒன்றில் படித்து பள்ளி படிப்பிலும், கல்லூரி படிப்பிலும் மாநில அளவில் முதல் மாணவராக வெற்றி பெற்ற ஜெயம் ரவி, நாட்டில் நடக்கும் சிறு சிறு தவறுகள் நடப்பதையும், அதற்கு பொலிஸே சில நேரங்களில் ஆதரவாக இருப்பதையும் கண்டு குமுறுகிறார். குமுறுவதுடன் மட்டும் அல்லாமல், இந்த தவறுகள் குறித்து மேலிடத்திற்கு புகார் தெரிவிக்க, மேலிடம் அதற்கு நடவடிக்கையும் எடுக்கிறது.

இந்த நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட நீதிபதி, பொலிஸ் அதிகாரி, டிரபிக் பொலிஸ் ஆகியோர் இணைந்து ஜெயம் ரவியை போட்டுத்தள்ள பார்க்க, அதில் இருந்து தப்பிக்கும் ஜெயம் ரவி, அரசியல்வாதிகளைக் காட்டிலும் அரசு துறை அதிகாரிகளால் தான் தவறு நடக்கிறது என்றும், அதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார். அவருக்கு உதவியாக நேர்மையான அரசு துறை அதிகாரிகள் துணை நிற்கிறார்கள்.

அதன்படி, இலட்சம் கொடுத்தால் இந்த நாட்டில் எதுவும் நடக்கும் என்பதை மக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில், இல்லாத ஒரு நபருக்கு பிறப்பு சான்றிதழ், ரேஷன் கார்ட், வாக்கு அட்டை, வாகன ஓட்டுநர் உரிமம், அவர் மீது நீதிமன்ற வழக்கு என்று பல அரசு ஆவணங்களையும் இலட்சம் கொடுத்து சேகரிக்கிறார்கள். இதை ஊடகம் வாயிலாக மக்களுக்கு தெரியப்படுத்த, இதில் சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்கள் மீது நீதிமன்றம் வழக்கு பதிவு செய்கிறது.

இதற்கிடையில் இலட்சம் வாங்கிய அரசு ஊழியர்கள் தனியாக ஒரு குழு அமைத்து இதில் இருந்து தங்களை காப்பாற்றிக்கொள்ள முடிவு செய்கிறார்கள். அதன்படி, இல்லாத ஒரு நபரை இருப்பதாக,காட்டும் முயற்சியில் ஈடுபடும் அவர்கள், ஜெயம் ரவி கூறிய இல்லாத அந்த நபரை தேடிப்பிடிக்கிறார்கள்.

அப்படி அவர்கள் தேடி பிடித்த நபர் யார்?, அவர் நீதிமன்றத்திற்கு வந்தாரா அல்லது அவரை ஜெயம் ரவி தடுத்து நிறுத்தினாரா? என்பதுதான் படத்தின் க்ளைமாக்ஸ்.

"நீ உன்னை சரி செய்து கொள் உலகம் தானாக சரியாகிவிடும்" என்ற வாசகத்தோடு படம் ஆரம்பிக்கும் போதே, ரசிகர்கள் சீட்டில் நிமிர்ந்து அமர்கிறார்கள். அவர்களை அப்படியே தொடர்ந்து அமர செய்யும் அளவுக்கு படமும், படு வேகத்தோடு பயணிக்கிறது.

டிரபிக் பொலிஸின் கை பேசும் முறை, பேருந்து படிக்கட்டில் பயணிக்கும் பயணிகள், செல்போன் பேசிக்கொண்டு வாகனம் ஓட்டுவது என்று மக்கள் செய்யும் சிறு சிறு தவறுகளில் தனது கோபத்தை வெளிக்காட்டும் இயக்குநர் சமுத்திரக்கனி, இறுதியில் இலஞ்சம் என்ற ஒன்றால் நாட்டில் என்ன என்ன தவறுகள் நடக்கிறது என்பதை சுத்தியல் அடியைப் போல் ஓங்கிச் சொல்கிறார்.

ஜெயம் ரவி, இதுவரை நடித்த படங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். ஜெயம் ரவியின் கதாபாத்திரங்களுக்கு நடிக்க அதிக வாய்ப்புகள் இருந்தாலும், அவை ஏனைய கதாபாத்திரங்களினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வித்தியாசங்களை கெட்டப்பில் பெரிதாக காட்டவில்லை என்றாலும், நடிப்பிலும், உடல் மொழியாலும் காட்ட ஏகப்பட்ட வாய்ப்புகள் இருப்பினும், ரசிகர்களை பெரிதாக ஏதும் பாதிக்கவில்லை.

ஹீரோ என்றால், அவருக்கு ஒரு ஹீரோயின் வேண்டும் என்ற ரெகுலர் நாயகியாக அமலா பாலின் கதாபாத்திரம் அமைந்திருக்கிறது.

காமெடிக்காக சூரி இருந்தாலும் அவர் வரும் காட்சிகள் பெரும்பாலும் சீரியஸாக தான் இருக்கிறது. சீரியஸான கதாபாத்திரத்தில் பேராசிரியர் ஞானசம்பந்தம்,நமோ நாராயணன், சித்ரா லட்சுமணன் ஆகியோர் நடித்திருந்தாலும் இவர்கள் வரும் காட்சிகள் அனைத்தும் ரசிகர்களை குலுங்க குலுங்க சிரிக்க வைக்கிறது. அதுவும், பார்வதி நாயரை கரெக்ட் பண்ண,அமைச்சரும், மருத்துவரும் போட்டி போடும் காட்சிகள் தியேட்டரையே அதிர வைக்கிறது.



சிபிஜ அதிகாரியாக நடித்துள்ள சரத்குமார், படவா கோபி, விஜய் டிவி கோபிநாத், நாசர் என்று படத்தில் உள்ள ஏனைய கதாபாத்திரங்கள் அவர் அவர் வேலையை சரியாக செய்திருக்கிறார்கள்.

ஜி.வி.பிரகாஷ் குமாரின் இசையில் பாடல்கள் சொல்லும்படியாக இல்லை. பின்னணி இசை சுமார் ரகம் தான். ஜீவன் மற்றும் எம்.சுகுமாரின் ஒளிப்பதிவு படத்திற்கு பலம் சேர்த்துள்ளது.

நீண்ட நேரம் ஓட வேண்டிய படமாக இருப்பினும், படத்தொகுப்பாளர் ஏ.எல்.ரமேஷின் கத்திரி அதை ரொம்ப பதமாகவே வெட்டியுள்ளது.

இலஞ்சம் வாங்கும் அரசு அதிகாரிகளை, கொலை செய்வது, கடத்தி கொலை செய்வது என்று விதவிதமாக தமிழ் சினிமா தண்டிருந்தாலும், இன்னும் பல இயக்குநர்களின் பாணியில் பல விதமாக அவர்கள் தண்டிக்கப்பட்டு தான் வருகிறார்கள்.அந்த வகையில் சமுத்திரக்கனி, தனது பாணியில் தண்டித்திருக்கிறார். அவர் தண்டித்திருக்கும் முறை பாராட்டுக்குரியது. ஆனால், அதை மட்டுமே அவர் செய்திருந்தால் அவரை இன்னும் பலமாக பாராட்டியிருக்கலாம். இடையில், ஆந்திரா நரசிம்ம ரெட்டி, அவருக்கு ஒரு பாட்டு, பிறகு பைட் என்று கமர்ஷியல் மசாலாவை சேர்த்து, ஏகப்பட்ட நெடியை ஏற்படுத்தி படம் பார்க்கும் ரசிகர்களுக்கு கண் எரிச்சலை ஏற்படுத்தி விட்டார்.

இயக்குநராக சமுத்திரக்கனி தான் சொல்ல வந்ததை முழுமையாக சொல்ல தவறினாலும், வசன கர்த்தாவாக படம் முழுவதும் தனது ஆதிக்கத்தை செலுத்தியுள்ளார். படத்தில் இடம்பெறும் வசனங்கள அனைத்துமே கைதட்டலுக்குரியது.

அரசு அதிகாரிகளால் தான் சமுதாயம் கெட்டுப்போகிறது என்பதை படத்தின் முதல் பாதியில் நிமிர்ந்து நின்று, தைரியமாக சொல்லியிருக்கும் சமுத்திரக்கனி, இரண்டாம் பாதியில் வியாபாரம் என்பதை மனதில் வைத்து சொன்னதால் வளைந்துவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

# விருதுக்காக மட்டும் நடிக்கவில்லை -லட்சுமி



விருதுகளுக்காக படங்களில் நடிக்க வேண்டும் என்ற எண்ணமில்லை என லட்சுமி மேனன் தெரிவித்துள்ளார்.

பழனியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் கோவிலில் மாசித் திருவிழாவை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்த நிகழ்ச்சியில் திரைப்பட இயக்குநர் கஜேந்திரன், நடிகை லட்சுமி மேனன், நடிகர் மூணாறு சுப்பிரமணி உள்ளிட்ட பல்வேறு சின்னத்திரை நட்சத்திரங்களும் பங்கேற்றனர்.


இந்த விழாவில் பேசிய லட்சுமி மேனன், மலையாளத்தில் அறிமுகமானாலும் நான் தமிழ் படங்களில் தான் அதிகமாக நடித்துள்ளேன்.

என் நடிப்பில் சிகப்பு மனிதன், ஜிகர் தண்டா, மஞ்சப்பை, சிப்பாய் ஆகிய படங்கள் வெளிவரவுள்ளன. இதற்குமேல் எந்த படங்களிலும் ஒப்புதல் அளிக்கவில்லை.

மேலும் நடிப்பு என்பது திரையரங்குகளுக்கு வருபவர்களை ரசிக்க வைக்கவே தவிர, விருது பெற வேண்டும் என்ற எண்ணத்தில் நடிக்கவில்லை என்று கூறியுள்ளார்.

முருகன் என் இஷ்ட தெய்வம். அதனால் இந்த முறை பழனியில் தங்கத்தேர் இழுத்தேன் எனவும் கூறினார்.

## அந்தநாள் ஞாபகம்



முழு நீள குடும்பப் புகைப்படம்: சரோஜா தேவி, தன் குடும்பத்தினருடன் சிவாஜியை அவரது இல்லத்தில் சந்தித்தபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் உண்மையை கண்டறியுமென நாம் இருந்து விட முடியாது

## சர்வதேச விசாரணை வேண்டுமென வலியுறுத்துகிறார் ஜோசப் ஆண்டகை

(குருமன்காடு)

பொய்யர்களே இந்த அரசாங்கத்தில் உள்ளனர். இவர்கள் சாத்தானை விட பெரிய சாத்தான் சொல்லாத பொய்களையெல்லாம் இவ் அரசு சொல்கிறது.

ஆகவே, இவர்களினூடாக உண்மை கண்டறியப்படுமென நாம் இருந்து விடமுடியாது. சர்வ விசாரணை எமக்கு தேவையென மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழு ஏற்பாடு செய்திருந்த அடையாள உண்ணாவிரத போராட்டத்திலும் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

தற்போதும் இலங்கையில் நடக்கும் விடயங்களே நடந்து கொண்டிருக்கின்றன. ஆட்சியாளர்களுக்கு இருட்டில் இருந்து வெளிச்சத்திற்கு வருவதற்கு விருப்பமில்லை. இருட்டுக்குள் செய்யும் காரியங்களையே செய்கின்றனர்.

மெய்யை சொல்வதற்கு அற்பமேனும் சக்தி அவர்களுக்கு வரவில்லை. இவ்வாறு இருட்டுக்குள் இருக்கும் மனிதர்கள் கைகளால் தடவிக்கொண்டே இருப்பார்கள். வெளிச்சம் இருக்குமாக இருந்தாலே முன்னேறலாம். ஆகவே இந்த நாடு முன்னேற வேண்டுமாக இருந்தால் சர்வதேச விசாரணை இன்றியமையாததாகும்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில், உங்களை இருட்டுக்குள் வைத்துள்ளனர். நீங்கள் வெளிச்சத்திற்கு வந்தாலே நாட்டை முன்னேற்ற முடியும். புதிய பாதையில் கொண்டு செல்ல முயும் என நான் தெரிவித்திருந்தேன்.

இதற்கான நியாயத்தையும் நான் காட்டியே எழுதியுள்ளேன். ஆனாலும் இன்னும் அதே இருட்டிலேயே அவர்கள் தற்போதும் இருக்கின்றார்கள். அவ்வாறே மக்களை ஆளலாம் எனவும் எண்ணுவதுடன் மக்களை பொய்மையில் அழைத்து சென்று தென்னிலங்கை மக்களை அறியாமையில் வைத்துள்ளனர்.

எனினும், சர்வதேச மேற்பார்வையோடு விசாரணை மேற்கொள்ளப்படும் என்ற அர்த்தத்திலேயே தற்போது எம் முன்னால் வைக்கப்படவுள்ள ஜெனீவா பிரேரணை அவ்வாறே அமைந்து விடுகின்றது. ஆயினும் இது போதாது. இது எங்களுக்கு தேவையும் இல்லை.

யாரை வைத்தாலும் இவர்கள் அவ்வாறே போவதற்கு விரும்புவார்கள். சர்வதேச ரீதியாக ஒருவர் வந்து இவ்வாறு நடத்துங்கள் என்று கூறினாலும் அவர்களையும் தம் வசப்படுத்த வல்லமையுள்ளவர்கள்.

ஆகவே இதில் என்ன முடிவு வரும் என எனக்கு தெரியாது. ஆனால் எல்லோரும் சொல்கின்றார்கள் சிறிது நன்மை உள்ளது என. ஆனால் சிறிது நன்மை எமக்கு போதாது. ஏன் நாம் சிறிது சிறிதாக நன்மையை பெற வேண்டும்.

நாம் முழு நன்மையை பெறுவதற்கும் வழி உள்ளது தானே. ஆகவே அந்த வழியை நாம் கடைப்பிடித்தால் என்ன?. அவ்வாறான தைரியம் சர்வதேசத்திற்கு தேவை. அதேபோல் இந்த நாடும் திருந்துவதற்கு அதுவே ஒரேயோரு வழியாகவும் உள்ளது.

யுத்த சூனிய பிரதேசத்தில் யாரையும் சுடக்கூடாது ஆனால் சனல் 4 காட்டிய காணொளியில் காட்டியது என்ன. அந்த இடத்தில் தான் அனைத்து குண்டுகளும் போடப்பட்டன. அப்போது மக்கள் படும் பாட்டை பார்க்க முடிகின்றது.

அது மட்டுமல்ல அவர்கள் செய்த அனைத்து காரியங்களும் சர்வதேச சட்டங்களுக்கு மாறானதாகவும் போர் குற்றங்களாகவும் செய்து குவித்தார்கள்.

யுத்தம் இடம்பெற்ற இடத்தில் மருந்து இருக்கவில்லை. உண்பதற்கு உணவு இருக்கவில்லை. இவ்வாறான நிலையில் உணவையும் மருந்தையும் போர் ஆயுதமாக அவர்கள் பாவித்தார்கள்.


இது இவ்வாறு இருக்கையில் மகிந்த சமரசிங்க சொல்கின்றார் ஒரு பொது மகனும் கொல்லப்படாமல் போரை முடித்துள்ளோம் என்று. சாத்தானை விடவும் பெரிய சாத்தான் கூட சொல்லமாட்டான். அந்த அளவிற்கு பொய் கூறுகின்றார்கள்.


இதே அமைச்சர் கடந்த வருடம் ஜெனீவாவில் சொல்லியிருந்தார் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் 92 வீதமானவற்றை நாம் நிறைவேற்றி விட்டோம் என்று. ஆனால் அரை வீதம் கூட செய்யவில்லை.

ஆகவே இவ்வாறான பொய்யர்களே இந்த அரசாங்கத்தில் உள்ளனர. எனவே நாம் இவ்வாறானவர்களை நம்பி உண்மையை கண்டு பிடிப்பார்கள் என இருந்து விட முடியாது. ஆகவேதான் சர்வதேச விசாரணை எமக்கு தேவை என வலியுறுத்துகின்றோம் என அவர் கூறினார். (2-9-250-266)







தேசிய சேமிப்பு வங்கியின் கிளிநொச்சி கிளையினரால் கடந்தாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், மாணவனொருவர் கௌரவிக்கப்படுவதையும் கலந்து கொண்ட மாணவர்கள் உட்பட ஏனையோரையும் படங்களில் காணலாம்.

# முல்லைத்தீவு மக்களின் குறைகளை கேட்டறிந்த வடமாகாண சபை உறுப்பினர்கள்

## நிவர்த்தி செய்து தருவதாக உறுதியளிப்பு



(குருமன்காடு)

முலலைத்தீவு மக்களின் குறைகளைக் கேட்டறியும் நோக்கோடு வடமாகாண சபையின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய குழுவினால் கடந்த வியாழக்கிழமை மக்கள் சந்திப்புக்கள் காலை முதல் இரவு வரை பல்வேறு இடங்களில் நடைபெற்றது.

இதன் போது வடமாகாணசபை மீன்பிடி, நன்னீர் மீன்பிடி, போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சர் டெனீஸ்வரன், சுகாதாரத்துறை அமைச்சர் சத்தியலிங்கம் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களான லிங்கநாதன, அஸ்மின் ரவிகரன் ஆகியோர் மக்கள் சந்திப்புகளை மேற்கொண்டு அவர்களின் குறைகளை கேட்டறிந்தனர்.

முல்லைத்தீவு தனியார் போக்குவரதது உரிமையாளர் சங்கத்தினர் சந்திப்பில் போக்குவரத்து உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் கலநதுரையாடப்பட்டு குறைகளை கேட்ட பின்னர் உரையாற்றிய வடமாகாண சபை அமைச்சர் டெனீஸ்வரன்.

புதிய நிர்வாகத்தெரிவு தொடர்பிலும மாவட்டத்தில் மக்களுக்கான சேவைகளை நல்ல முறையில் வழங்க எல்லோரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும என உறுதியளித்தார்.

அதன் பின்னர் மாலை கொக்குளாய் பிரதேசத்தில் மீனவர்களின் குறைகளை அறியும பொருட்டு குறைகள் உள்வாங்கப்பட்டு அது தொடர்பிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

குறிப்பாக கொக்கிளாய் நீரேரியில் அதுமீறி செய்யப்படும் மீன்பிடி, உழவு இயநதிரத்தின் மூலம் கரவலை இழுத்தல் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கான பாதை போன்றவை முக்கிய மக்கள் குறைகளாக அமைந்திருந்தன.

இதனையடுத்து, புல்மோட்டை கிராமத்திற்கு சென்று முஸ்லிம் மீனவர்களை சந்தித்ததோடு தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை பயன்படுத்த வேண்டாம் என்ற கருத்து அங்கு வலியுறுத்தப்பட்டு மாற்றீடான தொழில் முறைகள் ஆராயப்பட்டு அவை தொடர்பில் வருங்காலத்தில் கூடிய விரைவில் முடிவெடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சந்திப்புகளில் கலந்து கொண்ட வடமாகாண சபையின் சுகாதாரத் துறை அமைச்சர் சத்தியலிங்கம சுகாதார சேவைகள் தொடர்பில் தன்னுடன் நேரடியாகவோ அல்லது மாவட்டத்திற்கு பொறுப்பான வடமாகாண சபை உறுபபினர்கள் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம் என கூறினார்.

மக்களால் குறிப்பிடப்படுகிற சுகாதார பிரச்சினைகள் இயலக்கூடிய வகையில் தீர்க்கப்படும் என்பதையும் அழுத்தமாக முன்வைத்தார். மேலும் கடந்த இரு தினங்களுக்கு முன் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை வினைத்திறனாக்க [illegible] முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளதையும் தெரிவித்தார். (2-9-250)

# நடமாடும் வைத்திய சேவை முகாம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பு (ஐ.இ அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சங்கத்தின் ஆதரவுடன் நடமாடும் வைத்திய சேவை நடைபெற்று வருகின்றது.

இதன் முதற்கட்டமாக சிவநகர் முதியோர் சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய நோயாளர்களிற்கான இலவச வைத்திய முகாம் அண்மையில் சிவநகர் பொது மண்டபத்தில் நடத்தப்பட்டது.

இதன்போது, நூற்றுக்கணக்கான வயோதிபர்கள் பங்குபற்றி நோய்களுக்கான தீர்வுகளைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

அத்தோடு, இந்நடமாடும் சேவை தொடர்ந்தும் ஒவ்வொரு கிராமங்களிலும் நடத்தப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்களினால் அறிவுறுத்தப்பட்டது. (2-9-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நான் கத்தவே இல்லை...!

கண்ணுசாமி, பில்லாகுடி என்ற குக்கிராமத்தில் வசித்து வந்தான். மகா கஞ்சன். ஒரு நாள, விமான நிலையத்தைப் பார்ப்பதற்காக தன் மனைவியோடு வந்திருந்தான். விமானம் மேலே கிளம்புவதையும், வானில் வட்டமிடுவதையும், கீழே இறங்குவதையும், இருவரும் ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.



அவர்களின் ஆர்வத்தைப் பார்த்த அங்கிருந்த விமானி ஒருவர், "நீங்கள் இருவரும் வாருங்கள் இந்த விமானத்தில் ஏறி, வானத்தில் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வரலாம். ஆளுக்கு நூறு ரூபாய்தான!" என்றார்.

கஞ்சனுக்கு ஆர்வம் தான். இதற்காக்வா இருநூறு ரூபாய் வீண் செலவு செய்வது என்று நினைத்து, "நாங்கள் வரவில்லை," என்றான்.

எப்படியும் அவர்களிடம் பணம் பெற நினைத்த விமானி "நீங்கள் பணம் தர வேண்டாம். எந்தக் கட்டணமும் இல்லாமல், உங்களை இனாமாகவே விமானத்தில் ஏற்றிச் செல்கிறேன். வானத்தில் விமானம் பறக்கும்போது, என்ன நடந்தாலும், நீங்கள் சிறு சத்தம் கூடப் போடக் கூடாது. அப்படி சத்தம் போட்டுவிட்டால், கட்டணமாகிய இருநூறு ரூபாயை நீங்கள் கொடுத்துவிட வேண்டும். சம்மதம் தானே?" என்றார்.

"சம்மதம்!" என்றான் கஞ்சன். தன் மனைவியுடன், விமானத்தில் ஏறி அமர்ந்தான். விமானம் பறக்கத் தொடங்கியது.

வானத்தில் விமானம் குட்டிக் கரணம் போட்டது. தலை கீழாகப் பறந்தது. சீறிப் பாய்ந்தது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருந்த கஞ்சன், சிறு ஓசை கூட எழுப்பவில்லை. வேறு வழியின்றி விமானத்தைத் தரை இறக்கினார் விமானி.

கஞ்சனின் கையைக் குலுக்கி, "ஆமாம், பயமுறுத்தும் விமான விளையாட்டுகளை நான் வானத்தில் செய்யும்போது, இதுவரை எனக்குத் தெரிந்து சிறு ஓசைகூட எழுப்பாது இருந்தீர்கள்! என் பாராட்டுக்கள். எப்படி இது உங்களால் முடிந்தது?" என்று கேட்டார் விமானி.

"நான் கூட, ஒரே ஒரு சமயம், என்னை அறியாமல் கத்த இருந்தேன். எப்படியோ முயன்று அடக்கிக் கொண்டேன்!" என்றான் கஞ்சன்.

"எப்போது?" என்று கேட்டார் விமானி.

"என் மனைவி, விமானத்தில் இருந்து தவறிக் கீழே விழுந்தபோது!" என்றான் கஞ்சன்.

மயங்கி விழுந்தார் விமானி.

## சாஹீது பகத்சிங்



'சாஹீது பகத்சிங்' என அழைக்கப்படும் 'பகத்சிங்' அவர்கள், 1907, ஆம ஆண்டு செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி, இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் லயால்பூர் மாவட்டத்திலுள்ள "பங்கா" என்ற கிராமத்தில், சர்தார் கிசன் சிங் என்பவருக்கும், வித்தியாவதிக்கும் இரண்டாவது மகனாக ஒரு சீக்கிய குடும்பத்தில் பிறந்தார்.

இவர் ஒரு குறிப்பிடத்தக்க இந்திய விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் புரட்சியாளர் ஆவார். உண்மையான வீரனாக வாழ்ந்து, நாட்டிற்காகப் போராடி மடிந்து போனதால், இவர் 'சாஹீது (மாவீரன்) பகத்சிங்' என அழைக்கப்பட்டார். ஆங்கில ஆட்சியை வெளியேற்றி, இந்தியாவை சுதந்திர நாடாக்க ஆயுதமேந்தி போராடிய புரட்சி அமைப்பான "இந்துஸ்தான் சோசலிசக் குடியரசு" அமைப்பின் தலைவர்களுள் ஒருவர் ஆவார்.

1919 ஆம் ஆண்டு, இந்தியாவின் அம்ரித்சர் நகரில் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில், ஆயுதம் ஏதுமின்றி கூட்டத்தில் பேச்சை கேட்டுக்கொண்டிருந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என பாராமல், ஆங்கில அரசு, 'ரெஜினால்ட் டையர்' என்ற இராணுவ அதிகாரியன் தலைமையில் அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது. அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலைக் கண்டு நாடே கொதித்தது. இந்த கொடூரமான படுகொலை, பகத்சிங்கின் மனதில் பெரும் மாற்றத்தையும் விதைத்தோடு மட்டுமல்லாமல், இரத்தம் படிந்த மண்ணை ஒரு புட்டியில் அடைத்து எடுத்துவந்து தன்னுடன் வைத்துக்கொண்டு, அவர் வெள்ளையர்களை விரட்ட சபதமும் பூண்டார்.

1924 ஆம் ஆண்டு, சச்சீந்திரநாத் சன்யால் என்பவரால் தொடங்கப்பட்ட "இந்துஸ்தான் குடியரசுக் கழகம்" என்னும் அமைப்பில் இணைந்தார். பிறகு 1926 இல் பகத்சிங், சுகதேவ், பவதிசரண் வேரா, எஷ்பால் போன்றோர் இணைந்து "நவ்ஜவான் பாரத் சபா" என்ற இளைஞர் அமைப்பை நிறுவினர்.

1928 ஆம் ஆண்டு, "சைமன் கமிஷனை" எதிர்த்து காங்கிரஸ் போராட்டத்தில் ஈடுபட்டபோது, அந்த போராட்டத்தில் காங்கிரஸ் தலைவர் லாலா லஜபதிராய் பொலிஸாரால் தடியடிப்பட்டு இறந்தார். இதனால் கோபம்முற்ற பகத்சிங்கும், ராஜகுருவும் இணைந்து, லாலா லஜபதிராய் இறப்புக்கு காரணமாயிருந்த காவலதிகாரியான சாண்டர்ஸை சுட்டுக் கொன்றுவிட்டு தலைமறைவாகினர்.

1929 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி, சட்ட வரைவு நிறைவேற்றப்பட்ட பொழுது, குண்டுகளை வீசினர். இதனால் பகத்சிங், ராஜகுரு மற்றும் சுகதேவ் ஆகிய மூன்று பேரும் குண்டு வீசிய வழக்கில் கைதுசெய்யப்பட்டனர்.

சென்ட்ரல் அசெம்பிளி ஹாலில் வெடிகுண்டு வீசியது மற்றும் துண்டு பிரசாரம் போட்டு "இன்குலாப் ஜிந்தாபாத்" என்று முழக்கமிட்டு தானே சரணடைந்த பின்னர், காங்கிரஸ் தலைவர் லாலா லஜபதிராய் என்பவரின் இறப்புக்கு காரணமாயிருந்த காவலதிகாரியை சுட்டுக்கொன்ற குற்றத்திற்காக தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட பகத்சிங், ராஜகுரு, மற்றும் சுகதேவ் ஆகியோர் ஆங்கில அரசின் 24 ஆவது அகவையில் 1931 ஆம் ஆண்டு, மார்ச் 23 ஆம் திகதி தூக்கிலிடப்பட்டார்கள்.

ஒரு போராளியின் வாழ்க்கை என்பது வெறும் சரித்திரம் மட்டுமல்ல, அது ஒரு பாடமும் கூட. இன்றைய இந்தியாவில் எத்தனையோ இளைஞர்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் பகத்சிங் வாழ்க்கை போற்றத்தக்க ஒன்றாகும். விடுதலைப் போராட்ட உணர்வுகளை இளைஞர்கள் மனதில் விதைத்திட, தன் மரணத்தையே பரிசாகத் தந்த மாபெரும் போராளி. வாழ்வதன் மூலமாக மட்டுமல்லாமல், இறப்பதன் மூலமாகவும் ஒரு சகாப்தத்தினை உருவாக்க முடியும் என வாழ்ந்து காட்டியவர். அவர் வாழ்ந்த வாழ்க்கைக் காலம் குறுகியது என்றாலும் நூற்றாண்டுகளைக் கடந்து சுமந்து நிற்கும்.

## 03.2014 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1752 - கனடாவின் முதலாவது பத்திரிகை த ஹலிஃபாக்ஸ் கசெட் வெளியிடப்பட்டது.
- 1801 - ரஷ்யாவின் முதலாம் பவுல் மன்னன் வாள் ஒன்றினால் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டான்.
- 1903 - ரைட் சகோதரர்கள் தமது வெற்றிகரமான முதலாவது வானூர்திக்கான காப்புரிமம் பெறுவதற்கு விண்ணப்பித்தனர்.
- 1919 - இத்தாலியின் மிலான் நகரில் முசோலினி தனது பாசிச அரசியல் இயக்கத்தை ஆரம்பித்தார்.
- 1931 - இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களான பகத்சிங், ராஜ்குரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1933 - ஹிட்லர் ஜேர்மனியின் சர்வாதிகாரியானது ரெய்க்ஸ்டாக்கினால் சட்டபூர்வமாக்கப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: இந்தியப் பெருங் கடலில், அந்தமான் தீவுகளை ஜப்பானியர் கைப்பற்றினர்.
- 1956 - பாகிஸ்தான் உலகின் முதல் இஸ்லாமியக் குடியரசாகியது.
- 1965 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது இரு விண்வெளி வீரர்களைக் கொண்ட நாசாவின் ஜெமினி 3 விண்கலம் ஏவப்பட்டது.
- 1966 - தனது முதல் கரந்தடி தாக்குதலில் சேகுவேராவின் அணி வெற்றிகரமாக பொலிவிய இராணுவப்பிரிவை தோற்கடித்தது.
- 1982 - குவாத்தமாலாவின் பெர்னாண்டோ கார்சியா தலைமையிலான அரசு இராணுவப் புரட்சி ஒன்றில் கவிழ்ந்தது.
- 1998 - டைட்டானிக் திரைப்படம் 11 ஆஸ்கார் விருதுகளை வென்றது.
- 2001 - ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையம் வளிமண்டலத்தில் வெடித்து, பீஜியின் அருகில் தெற்கு பசுபிக் பெருங்கடலில் வீழ்ந்தது.

### பிறப்புக்கள்

- 1858 - லூட்விக் குயிட், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1941)
- 1881 - ரொஜர் டூ கார்ட், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (இ. 1958)
- 1881 - ஹேர்மன் ஸ்டீடிஞ்சர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1965)
- 1893 - ஜி. டி. நாயுடு, தமிழக விவசாய அறிவியலாளர்
- 1907 - டானியல் போவெட், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1992)

### இறப்புக்கள்

- 1931 - பகத்சிங், இந்திய சுதந்திரப் போராட்ட வீரன் (பி. 1907)
- 1964 - யோக சுவாமிகள், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சித்தர் (பி. 1872)
- 1992 - பிரீடெரிக் ஹயெக், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1899)

சிறப்பு தினம்

- உலக வானிலை தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....அமாவாசை தோறும் சிவாசாமியார் செய்யும் பூஜையைக் காண சில குறிப்பிட்ட பக்தர்களும் வர ஆரம்பித்தனர். அப்படி பூஜையைக் காண வந்த பக்தர்களுள் ஒருவர்தான் கிருஷ்ணன் குட்டி.

சிவாசாமியார் காலமாகவே அவரது உடல் சட்டை முனிவர் குகைக்கு அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டதாம். சிவாசாமிக்குப் பிறகு சந்தன மகாலிங்கருக்குப் பூஜை செய்யும் பொறுப்பை கிருஷ்ணன் குட்டி மேற்கொண்டார்.

இவர் காலத்தில் வந்ததுதான் இந்த சந்தன விநாயகர் மூர்த்தி. இராஜபாளையத்தைச் சேர்ந்த சத்தியமூர்த்தி சுவாமிகள் தான் இந்த விநாயகரை இங்கு கொண்டு வந்து வைத்தார்.

எந்த பூஜையாயினும் சரி, எந்தச் செயலைச் செய்வதாயினும் சரி, பிள்ளையார் வணக்கம் இல்லாமல் செய்ய இயலுமோ? இந்தச் சந்தன மகாலிங்கம் பூஜை தடையின்றிச் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றால் பிள்ளையார் பூஜையும் அவசியம் என்பதை உணர்ந்த சத்தியமூர்த்தி சுவாமிகள் அழகான விநாயகர் விக்கிரகம் ஒன்றை கூலி கொடுத்து மலைக்கு மேலே சுமந்து வரச்செய்து சந்தன மகாலிங்கத்தருகில் வைத்தார்.

சத்திய மூர்த்தி சுவாமிகளின் எண்ணம் பொய்யாகவில்லை. அவரது எண்ணத்தைப் போலவே அவர் கொண்டு வந்த பிள்ளையாரின் மகிமையால் சந்தன மகாலிங்கருக்குத் திருப்பணி செய்யும் வேலையும் வந்தது.

பாண்டிச்சேரியில் அச்சகம் ஒன்றில் அச்சுக் கோப்பவராக வேலை செய்து வந்த பெங்களூர் சுவாமிகள் என்பவர் தன் ஆன்மார்த்த குருவைத் தேடி பல இடங்களிலும் அலைந்து திரிந்து இறுதியாக இங்கு சதுரகிரியில் சந்தன மகாலிங்கமாக வீற்றிருப்பதைக் கண்டு கொண்டார்.



தாணிப்பாறை

சாதாரணமாக சுவாமியின் தரிசனத்திற்காக வந்தவருக்கு, இவ்விடத்தில் சித்தர்கள் தரிசனம் கிடைக்கவே அவர்களின் ஆணைப்படியே இங்கு தங்கி இறைபணிகளைச் செய்ய ஆரம்பித்து விட்டார். தான் கொண்டு வந்த கைப்பொருள் அனைத்தையும் செலவிட்டு சந்தன விநாயகருக்கு சிறிய அளவில் கோயில் கட்டினார். பின்னர் பக்தர் சிலரின் ஒத்துழைப்புடன் அதுவரையில் ஒற்றையடிப் பாதையாக இருந்த சந்தன மகாலிங்கர் கோயில் பாதையை படிக்கட்டுப் பாதையாக மாற்றினார்.

சந்தன மகாதேவி ஆலயத்துக்கும் சிறிய அளவில் திருப்பணி செய்வித்து கிருஷ்ணன் குட்டி உதவியுடன் சந்தன மகாதேவிக்கு ஒரு திருவுருவச் சிலையும் அமைத்தார். 1988 இல் சிறிய அளவில் கும்பாபிஷேகம் கூட

## ஆன்மீகம் 70

நடத்தப்பட்டதாம்.

இதெல்லாம் இங்கு இருக்கும் சித்தர்களின் துணையோடு முடிந்தததாகத் தெரிவித்த பெங்களூர் சுவாமிகள் தான் வந்த வேலை முடிந்து விட்டது என்று புறப்பட்டு விட்டார். அதற்குப் பிறகு அவரைப் பற்றிய தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.

சிவனடியார் கதை சொல்லி முடிப்பதற்கும் மலையடி வாரம் வருவதற்கும் சரியாயிருந்தது. இப்போது சுந்தர மகாலிங்கம் கோயிலடியில் நிற்கின்றோம்.

### ஆனந்த வல்லியம்மன் தரிசனம்


ஏறத்தாழ எல்லா சன்னதிகளையும் தரிசித்த நிறைவு. இனி சாப்பிட்டுவிட்டு படுக்க வேண்டியதுதான் என்று நினைக்கையில், அதற்குள் சோர்ந்து விடாதீர்கள். நீங்கள் ஆனந்த வல்லியம்மனையும் இன்றைக்கே தரிசித்தாக வேண்டும். அப்போதுதான் அமாவாசை யாத்திரை நிறைவு பெறும். நாளைக்கு சாதாரண தரிசனம்தான் கிட்டும். இப்பொழுதே நேரமாகிவிட்டது. சீக்கிரம் போங்கள் என்றார் சிவனடியார்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



82

...காரோட்டி, கூட வந்த சபாபதி, காவல் அதிகாரிகளை சாப்பிடச் சொல்லி விட்டு செம்மலை வேறிடத்தில் உட்கார வைத்தேன். கூட்டம் வந்த விதத்தைச் சொல்லி மன்னிப்புக் கேட்டேன்.

இதுக்கு ஏன் இந்த பெரிய வார்த்தை? இங்கே வந்தது எவ்வளவு நல்லதாப் போச்சு. இவ்வளவு பெரிய வீடுங்க. இவ்வளவு பணக்கார தங்கச்சிங்க, சொந்தக்காரங்க இருக்காங்க. இவ்வளவெல்லாம் இருந்தும் ஏன் என் கிட்டே வேலை செய்யறீர்? என்று கேட்டார்.

அந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. சிந்தித்தேன்.

பதிலைக் காணோம். என்னாயிற்று? என்று கேட்டார்.


நான் இதுக்கு பதில் சொல்ல முடியாது. ஒரு கதைதான் சொல்லணும் என்றேன்.

இங்கேயும் கதையா? சொல்லும்... அதுக்குள்ள கூட வந்தவங்க சாப்பிடட்டும் என்று காலடியில் உட்கார்ந்திருந்த என்னைத் தோள் பிடித்துத் தூக்கிப் பக்கத்தில் உட்கார வைத்தார்.

நான் சொன்னேன்.

திரு நபியின் உண்மையான பக்தராக பிலால் இருந்தார். முதன்முதல் அடிமைத்தளையிலிருந்து நபியால் மீட்கப்பட்டார் அவர்.

ஒருசமயம் அவரது பிள்ளைகளும் திரு நபியின் பேரப்பிள்கைளும் விளையாடிக் கொண்டிருக்கையில் பேரர்கள் பிலாலின் பிள்ளைகளை நோக்கி நீ என் தாத்தாவின் அடிமை மகன். எங்களோடு சேர்ந்து வியைாடாதே என்று சொன்னார்கள்.



தந்தையிடம் வந்து தந்தையே! உங்கள் நபியின் பேரன்கள் உங்களைத் தன் பாட்டனின் அடிமை என்று பேசிவிட்டார்கள். இதைப்பற்றி நபியிடம் கேளுங்கள். அவரது பேரப்பிள்ளைகளை கண்டிக்கச் சொல்லுங்கள் என்றான் சிறுவன்.

பிலால் நபியிடம் சென்றார். கூனிக் குறுகி நின்றார்.

என்ன பிலால்? என்று நபிகள் கேட்டார்.

தங்களின் பேரப்பிள்ளைகள் என்னை தங்கள் அடிமை என்று சொன்னார்களாம். என்னைத் தாங்கள் அடிமையாக ஏற்றுக் கொண்டீர்களா? என்று பிலால் கேட்டாராம்...

அப்படித்தான் இப்போ நானும் கேட்கிறேன். என்னை உங்க வேலைக்காரனா ஏத்துக்கிட்டீங்களா? என்றதும் கண் கலங்கி என்னை அணைத்துக் கொண்டார் செம்மல்.

மாட்டுக்கார வேலன் படப்பிடிப்பிற்காக ஊட்டி சென்றிருந்தோம். தமிழகம் விருந்தினர் விடுதியில் தங்கி இருந்தோம். செம்மலின் மீது அபார அன்புடையோர்களில் திருப்பதிசாமியும் ஒருவர். நடிகர் குத்துச் சண்டை வீரர். அவர் என்னை சைகையில் கூப்பிட்டு சிறுநீர் கழித்துவிட்டு வருகிறேன். சற்று தடவிக் கொடுங்கள் என்பதை சைகை மூலம் சொல்லி விட்டு மெல்ல போனார்.

நான் அவர் இருந்த இடத்தில் அமர்ந்து அந்த பொன்னிறக் காலைத் தொட்டேன். அவ்வளவுதான் யாராது? என்று குரல் கொடுத்தார் செம்மல்.

நான்தான் என்றேன். விரைந்து எழுந்து உட்கார்ந்தார். உமக்கு ஏன் இந்த வேலை? என்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்குடைபடும் இலங்கை!



இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் மூலமாக அனைத்துலக விசாரணைகளை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் ஜெனிவாவில் தீவிரமடைந்துள்ளன.

இந்தச் சூழலில் இத்தகைய பரந்துபட்ட விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை என்று கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடந்த கருத்தரங்கொன்றில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்திய தமிழர் தரப்பு, அத்தகைய நேரடியான சர்வதேச விசாரணைப் பொறிமுறை குறித்து அமெரிக்கத் தீர்மானம் வலியுறுத்தத் தவறியதால் சற்றுக் குழம்பிய நிலையில் உள்ளது.

இத்தகைய கட்டத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கான சட்டரீதியான் அதிகாரமோ, நிதி ஆதாரமோ கிடையாது என்ற வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் கருத்து அவர்கள் மத்தியில் இன்னும் கொஞ்சம் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடும்.

அவ்வாறாயின், உண்மையில் ஜெனிவாவில் என்னதான் நடக்கிறது என்ற சந்தேகம் இந்தக் கட்டத்தில் எழுவது இயல்பு. கொழும்பில் நடந்த கலந்துரையாடலில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மூன்று விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

முதலாவது விரிவான விசாரணைக்ளை நடத்துவ்தற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு தார்மீகப்பொறுப்பு இல்லை என்பது. இரண்டாவது இத்தகைய விசாரணைகளைச் செய்வதற்கு சட்டரீதியான அதிகாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு கிடையாது என்பது. மூன்றாவது இத்தகைய விசாரணைகளை முன்னெடுப்பதற்கான நிதி ஆதாரம் இல்லை என்பது.

இவற்றில் முதலாவது தவிர்ந்த, ஏனைய இரண்டு காரணங்களும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸினால் மட்டும் முன்வைக்கப்பட்டவை அல்ல.

அமெரிக்கா தலைமையிலான நாடுகளினால் முன்வைக்கப்பட்ட தீர்மான வரைவு குறித்து ஜெனிவாவில் நடத்தப்பட்ட இணைக் கலந்துரையாடல்களின் போது, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், கியூபா போன்ற இலங்கை ஆதரவு நாடுகளாலும் இது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அந்த நாடுகள் நவநீதம்பிள்ளையின் தார்மீகப் பொறுப்புக் குறித்து வாய் திறக்கவில்லை. ஆனால், இலங்கை அரசாங்கம் தாராளமாகவே அவருக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டு வருகிறது.

நவநீதம்பிள்ளைக்கு தார்மீகப் பொறுப்பு இல்லை என்பதற்கு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ள காரணம் இதுதான். விரிவான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு திறந்த மனம் வேண்டும்.

போர் நடந்த காலப் பகுதியிலேயே நாட்டில் தீவிரவாதம் இல்லை. இலங்கை அரசாங்கம் தீவிரவாதம் இருப்பதாகக் காட்டி போரை நடத்துவதாக கூறியவர்தான் நவநீதம்பிள்ளை.

போர் முடிந்து ஒருவார காலப் பகுதிக்குள் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை அவசியம் என்று வலியுறுத்தியதுடன், ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை சர்வதேச விசாரணை தேவை என்று பிரசாரம் மேற்கொண்டு வந்தவர். இத்தகைய தார்மீக உணர்வு இல்லாத ஒருவரால் எப்படி விரிவான விசாரணைகளை மேற்கொள்ள முடியும்?

இதுதான், நவநீதம்பிள்ளைக்கு விரிவான விசாரணை நடத்தும் தார்மீக உரிமை இல்லை என்று இலங்கை கூறுவதற்கான காரணம். அதாவது அரசாங்கம் எப்போதும் கூறுவது போல வெளிப்படையாகச் சொல்வதானால் பக்கச்சார்பானவர், பாரபட்சமாக நடப்பவர் என்று கூறலாம். ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மான வரைவில் எங்குமே நவநீதம்பிள்ளை என்ற சொல் பயன் படுத்தப்படவில்லை.

எந்தவொரு தனி மனிதருக்கும் பொறுப்பளிக்கும் வகையில் இந்தத் தீர்மான வரைவு அமைந்திருக்கவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகமே விசாரணையை முன்னெடுக்க வேண்டும். அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றுதான் தீர்மான வரைவில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு நவநீதம்பிள்ளை தலைமை தாங்குவதால், அவரது செல்வாக்கு விசாரணையிலிருக்கும் என்ற கருத்தும் தவறானது.

ஏனென்றால், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியுடன் அவர் ஓய்வுபெறப் போகிறார். ஆக, இன்னும் ஐந்து மாதங்களுக்கு மட்டுமே அவரது செல்வாக்கு அங்கு இருக்கப் போகிறது. ஆனால், விசாரணை பற்றிய முழு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு ஒரு வருடகால அவகாசம் உள்ளது.

எனவே, நவநீதம்பிள்ளை என்ற தனி மனிதரை வைத்து விசாரிப்பதற்கான தார்மீகப் பொறுப்பு இல்லை என்று நிராகரிக்கப்படுவது உலகின் காதுகளில் ஏறப் போவதில்லை. அடுத்து, இரண்டாவது விடயத்துக்கு வருவோம்.

நவநீதம்பிள்ளைக்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கான சட்ட அதிகாரம் இல்லை என்கிறார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ். அதாவது ஒரு நாட்டின் மீது விரிவான விசாரணை நடத்துவது மனித உரிமைகள் ஆணையாளரின் கடமை அல்ல. இது குறித்து ஐ.நா. சாசனத்தில் எந்தப் பகுதியிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், கடந்த திங்கட்கிழமை 17 ஆம் திகதி ஜெனிவாவில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பின்போது விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரம் தமக்கு உள்ளது என்பதை நவநீதம்பிள்ளை உறுதியாக கூறியிருந்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஒப்புதலுடன் விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதுவும் உள்ளக விசாரணைப் பொறிமுறைக்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்டு, அது திருப்தியளிக்கத்தக்க பெறுபேற்றைத் தராத நிலையில்தான் சர்வதேச சமூகம் இத்தகைய விசாரணையை முன்னெடுக்கத் துணிகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேவேளை, மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் அதிகாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்பணியகத்துக்கு இல்லையென்று வாதிடும் இலங்கை அரசாங்கமும் சரி, அதன் தோழமை நாடுகளும் சரி இதற்கு முன்னர் நடத்தப்பட்ட விசாரணைகளை மறந்துவிட்டன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச விசாரணை ஒன்று தொடர்பான விவகாரம் விவாதத்துக்கு வருவது இதுதான் முதன்முறையல்ல.

ஏற்கனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மனித உரிமை மீறல்கள் குறித்து தேசிய மட்ட விசாரணைகளை நடத்துவதற்கு ஒரு அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறும்போது அனைத்துலக விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டங்களுக்கான ஜெனிவா அக்கடமி 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வெளியிட்டுள்ள ஒரு ஆவணம்.

இலங்கை விவகாரம் சார்ந்த இந்த ஆவணம் வெளியிடப்பட்டதல்ல. பொதுவான ஒரு உயர் மட்ட நிகழ்ச்சி நிரலுக்காகவே இது தயாரித்து வெளியிடப்பட்டது.

எனவே, இலங்கையை பழிவாங்குவதற்காகவே சர்வதேச விசாரணை என்ற விடயம் முன்னிறுத்தப்படுவதாக எவராலும் கருத முடியாது. அடுத்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் மூலம் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை பல சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் சில உண்மை கண்டறியும் விசாரணைகள். அவை பெரும்பாலும் சிறப்பு அறிக்கையாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன அல்லது சுதந்திரமான நிபுணர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வேறு சில, சர்வதேச விசாரணை ஆணைக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள்.

இதற்கு உதாரணமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட சர்வதேச விசாரணை ஆணைக்குழுக்களின் சில விபரங்களை இப்போது பார்க்கலாம்.

1.இஸ்ரேலியப் படைகளால் லெபனானில் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள், அங்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து விசாரிக்க, 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய லெபனான் விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

மூன்று நிபுணர்கள் இந்த விசாரணைக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

2.லிபியாவில் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்து விசாரிப்பதற்காக மூன்று நிபுணர்களைக் கொண்டதாக லிபியா மீதான ஐ.நாவின் சுதந்திர விசாரணை ஆணைக்குழு 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய நியமிக்கப்பட்டது.

3.2010 ஆம் ஆண்டு ஐவரிகோஸ்ட்டில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அதற்கான சூழமைவுகள் குறித்து விசாரிக்க, 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய சர்வதேச விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

4.சிரியாவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க மூன்று நிபுணர்களைக் கொண்ட சுதந்திரமான அனைத்துலக விசாரணைக்குழு 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக உருவாக்கப்பட்டது.

5.வடகொரியாவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய மூன்று பேர் கொண்ட சர்வதேச விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து விசாரித்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. பொதுச்செயலர் பான்கி மூன் நியமித்த நிபுணர் குழுவுக்குத் தலைமை தாங்கிய மர்சுகி தருஸ்மனே, வடகொரியா குறித்த சர்வதேச விசாரணைக் குழுவின் தலைவராகவும் செயற்பட்டிருந்தார்.

இவையெல்லாம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு சுதந்திரமான சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க முடியும் என்பதற்கான உதாரணங்கள்.

இதுபோன்றதொரு, விசாரணைக் குழுவை உருவாக்கவே அமெரிக்கத் தீர்மான வரைவு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு அதிகாரமளிக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் நினைவுகூர்வது பொருத்தம்.

2010 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் செயலர் பான்கி மூன் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் குறித்து தமக்கு ஆலோசனை வழங்க நிபுணர் குழுவொன்றை நியமித்தபோதும், இலங்கை அரசர்ங்கம் இதுபோன்றுதான் கூறியது.

அதாவது இத்தகைய நிபுணர் குழுவை நியமிப்பதற்கு ஐ.நா. பொதுச் செயலர் பான்கி மூனுக்கு அதிகாரமில்லை என்றும் ஐ.நா. சாசனத்தில் அது பற்றிக் குறிப்பிடவில்லை என்றும் எகிறிக் குதித்தது.

ஆனால், கடைசியில் அந்த நிபுணர் குழுவின் அறிக்கையே சுற்றி வளைத்து இலங்கையின் கழுத்தை இப்போது நெரித்துக் கொண்டிருக்கிறது.

இனி, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்ட மூன்றாவது விடயத்துக்கு வருவோம்.

விரிவான விசாரணைகளை நடத்த அதிகாரிகள், வசதிகள் மற்றும் சலுகைகள் தேவை.

இதற்கான வரவு- செலவுத் திட்டம் நவநீதம்பிள்ளைக்கு ஒதுக்கப்பட்டிருக்காத நிலையில், அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மான வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோன்று, 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எவ்வாறு இலங்கைக்கு எதிரான விசாரணை நடத்த முடியும்? என்று அவர் கேள்வியெழுப்பியிருந்தார்.

முதலில் விசாரணை நடத்தும் அதிகாரமில்லை என்று கூறிய வெளிவிவகார அமைச்சர்ஜிஎல்.பீரிஸ்மற்றும் இலங்கையின் தோழமை நாடுகள், பின்னர் அதற்கு நிதி வளம் இல்லை என்று கூறுவது விந்தையானது.

அதைவிட, ஏற்கனவே சர்வதேச விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன.

மேலும், சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டங்களுக்கான ஜெனிவா அக்கடமி 2011 ஆம் ஆண்டு டிசெம்பரில் வெளியிட்ட ஆவணத்திலும் இத்தகைய விசாரணைகளுக்கான நிதி ஒதுக்கீடு குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா. வரவு- செலவுத்திட்டஒதுக்கீடுகள் மூலம் இதற்கான நிதியைப்பெறமுடியும் என்று கூறுகிறது இந்த ஆவணம்.

ஆக, அமெரிக்கா முன்வைக்கும் தீர்மான வரைவு தொடர்பாக இலங்கை முன்வைக்கும் வாதங்கள் எந்தளவுக்கு பலவீனமானவை என்பதை இவையே நிரூபித்துள்ளன. இலங்கை அர்சாங்கம் சர்வதேச அரங் கில் தொடந்து எதற்காக மூக்குடைபட்டு வரு கிறது என்பதை இப்போது உணர முடிகிற தல்லவா?

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவின் நிபந்தனை ஏற்கமுடியாது; விரும்பினால் பேச்சுவார்த்தைக்கு வரலாம்

## ராஜித சேனாரட்ன திட்டவட்டம்

**தமிழக மீனவர்களை விடுவித்தால் மட்டுமே பேச்சுவார்த்தை தொடரும் என்ற தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் நிபந்தனையை ஏற்க முடியாது. விரும்பினால் பேச்சுவார்த்தைக்கு வரட்டும். எமது நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் நாம் முன்னெடுப்போம் என கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**



தமிழக மீனவர்கள் அனைவரையும் விடுவித்தால் மட்டுமே எதிர்வரும் 25ஆம் திகதி இலங்கையில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையில் பங்கேற்க முடியும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் ராஜித சேனாரட்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்குமிடையிலான இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை கடந்த 13ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருந்தது. எனினும், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் அனைவரையும் விடுவித்தால் தான் பேச்சுவார்த்தைக்கு வரமுடியும் என தமிழக முதல்வர் அறிவித்திருந்தார். இதனால் இறுதி நேரத்தில் பேச்சுவார்த்தை கைவிடப்பட்டது.

இந் நிலையில் 174 மீனவர்கள் அவர்களது வள்ளங்களுடன் விடுவிக்கப்பட்டதுடன், பேச்சுவார்த்தை இம்மாதம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டு தமிழகத்துக்கும் அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 25ஆம் திகதி பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரும் நிலையில் கடந்த 19ஆம் திகதி எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 54 இந்திய மீனவர்கள் நெடுந்தீவு கடற்பரப்பிலும், 21 மீனவர்கள் மன்னார் கடற்பரப்பிலும் மீண்டும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டாலேயே 25ஆம் திகதி பேச்சுவார்த்தையில் தமிழக மீனவர்கள் கலந்துகொள்வார்கள் என தமிழக முதல்வர் மீண்டும் அறிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் தொடர்ந்தும் விடுத்துவரும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறிய கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் விரும்பினால் பேச்சுவார்த்தைக்கு அவர்கள் வரட்டும் எல்லை தாண்டி மீனவர்கள் வரும்போது அவர்களை கைது செய்வோம். எமது நடவடிக்கையைத் தொடர்ந்து முன்னெடுப்போம் என்றும் அமைச்சர் திட்டவட்டமாக கூறினார். (2)

# சிறுவனை கொலை செய்த நபருக்கு மரண தண்டனை

பன்னிரண்டு வயது சிறுவனை கொலை செய்த நபரொருவருக்கு மொனராகலை மேல் நீதிமன்ற நீதிபதி மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 1993 ஆம் ஆண்டில் அம்பேமவைச்சேர்ந்த நளின் பிரியந்த (வயது 12) என்ற சிறுவனை சுவரொன்றில் இடித்து கொலை செய்தமை தொடர்பாக அதே இடத்தை சேர்ந்த ஆர்.எம்.முத்துபண்டார (56வயது) என்பவருக்கெதிராக வெல்லவாய பொலிசாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மொனராகலை மேல் நீதிமன்றத்தில் நீதிபதி கிகான எய்ச் குலதுங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதனடிப்படையில் கொலை செய்த சந்தேக நபரை குற்றவாளியாக கண்ட நீதிபதி அந்நபருக்கு மரண தண்டன்ன வழங்கி தீர்ப்பளித்தார். (2)

# குற்றவாளிகளை தூக்கிலிட நான் தயார்- திஸ்ஸ கரலியத்த

எப்படியான நரகத்திற்கு சென்றாலும் குற்றவாளிகளை தூக்கிலிட்டு கொல்லதான் தயாராக இருப்பதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாலியல் வல்லுறவு, கொலை மற்றும் போதைப்பொருள் விற்பனை போன்ற பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என யோசனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

மரணதண்டனையை அமுல்படுத்த இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை.

நாட்டில் உள்ளவர்கள் பிரம்புக்கு அஞ்சியவர்கள். தண்டனைக்கு அஞ்சியவர்கள்.

அமைச்சர் ஒருவரினால் சட்டத்தை அமுல்படுத்த முடியாது. குற்றவாளிகளை தூக்கிலிட்டு கொலை செய்யும் அதிகாரத்தை வழங்கினால் எந்த நரகத்திற்கு சென்றாலும் குற்றவாளிகளை தூக்கிலிட நான் தயார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (2)





வடமாகாண பிரதி நிதி திட்ட அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட வடமாகாணத்திற்கான 2015ஆம் ஆண்டிற்குரிய நிதி ஒதுக்கீடு சம்பந்தமான கலந்துரையாடலொன்று நேற்று இடம்பெற்றுள்ளது. இக்கலந்துரையாடல் வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி தலைமையில் இடம்பெறுவதையும் கலந்து கொண்ட அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# பாராளுமன்றில் கௌரவமாக நடந்து கொள்ளுங்கள்

## தினேஷ் குணவர்த்தன எம்.பி.காட்டம்

முதியோரை நிர்வகிப்பதற்காக சிரேஷ்ட அமைச்சர்களுக்கு பணம் விரயமாக்கப்படுவதாக ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்த குற்றச்சாட்டை ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன வன்மையாக கண்டித்தார். பாராளுமன்றத்தில் கௌரவமாக நடந்து கொள்ளுமாறும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சிரேஷ்ட அமைச்சு தொடர்பில் வாய்மூல விடைக்காக கேள்வியொன்றை எழுப்பியிருந்த அஜித் பீ பெரேராவுக்கு ஆளும் தரப்பு சார்பில் அமைச்சர் தினேஷ் குணவர்தன பதிலளித்தார்.

சிரேஷ்ட அமைச்சர்கள் எவரும் முதியவர்கல்லர். அவர்கள் நாட்டின் மேம்பாட்டுக்காக பங்களிக்கின்றனர்.

புதிதாக பாராளுமன்றத்துக்கு வந்து வாய்க்கு வந்தவாறு எதனையும் பேச முடியும் என சிலர் நினைக்கின்றனர். எந்த அரசியல் வாதியும் ஓய்வுபெறுவதில்லை. இந்த கூற்று குறித்து கவலை தெரிவிக்கிறோம் என்றார். (2)

# இலங்கை போக்குவரத்து சபைக்கு புதிதாக 2 ஆயிரத்து 200 பேருந்துகள்

இலங்கை போக்குவரத்து சபைக்கு 2 ஆயிரத்து 200 புதிய பேருந்துகள் பெற்றுக் கொடுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதன்படி 42 ஆசனங்களைக் கொண்ட 800பேருந்துகள் மற்றும் 54 ஆசனங்களையுடைய ஆயிரத்து 400 அரைச் சொகுசு பேருந்துகளையும் கொள்வனவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சொகுசு பேருந்தை இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு அதில் ஒன்றின் பெறுமதி 34 ஆயிரத்து 100 அமெரிக்க டொலர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

போக்குவரத்துஅமைச்சர் குமார வெல்கமவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமையவே இந்த அனுமதி கிடைத்துள்ளது. (2)

# அரசியல் இலாபம் தேடும் நோக்கில் ஜெனீவா பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது

## இஸ்லாமிய பிரதிநிதிகளை சந்தித்தபோது சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்படும் மத நல்லிணக்கத்தைக் குழப்பி அரசியல் இலாபம் தேடும் நோக்கிலேயே ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை முன்வைக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதியின் மனித உரிமைகள தொடர்பான விசேட பிரதிநிதியும், பெருந்தோட்டத்துறை அமைச்சருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாட்டு பிரதிநிதிகளைச் சந்தித்து இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்திகள் குறித்து விளக்கமளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் பிரேரணையில் மத ஒற்றுமையைக் குலைக்கும் வகையிலும் மத நல்லிணக்க செயற்பாடுகளை குழப்பும் வகையிலும் தகாத முறையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன் ஊடாக அரசியல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு சில நாடுகள் முயற்சிக்கின்றன என்பது தெளிவாகியிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மத ஸ்தலங்கள் மீது தமிழீழ விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மற்றும் காத்தான்குடி பள்ளிவாசலில் முஸ்லிம்கள் கொல்லப்பட்ட சம்பவங்களையும் அமைச்சர், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாட்டு பிரதிநிதிகளுகக்கு விளக்கிக் கூறியிருந்தார்.

பல்வேறு சமூகங்களைச் சேர்நத, பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்கள் நீண்ட காலமாக நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வருவதையும் அமைச்சர் அந்நாட்டுப் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறியிருந்தார்.

அரசியல் நோக்கத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடுகள தமக்கிடையிலான ஒற்றுமையை வெளிக்காட்ட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தப் பிரேரணையானது ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் இன்னொரு நாட்டின் விடயத்தில் தலையிடல், பாரபட்சம் பார்க்காமை போன்ற அடிப்படை கொள்கைகளை மீறும் வகையில் அமைந்திருப்பதாகவும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இதன்போது சுட்டிக்காட்டினார்.

இச் சந்திப்பில் அமைச்சர் நிமால் சிறிபால.டி.சில்வா, ஐ.நாவுக்கான இலங்கை தூதுவர் ரவிநாத் ஆரிய சிங்க, ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஆகியோரும் கலந்துகொண்டிருநதனர்.

பாகிஸ்தான் தலைமை வகிக்கும இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பில் 57 நாடுகள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# ஊசல் ஒரு தேடல் கவிதை வெளியீடு



(யாழ்ப்பாணம்)

செல்வக்குமார் எழுதிய **ஊசல் ஒரு தேடல்** எனும் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தியாகி அறக்கொடை நிறுவனத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

வரவேற்புரையை யாழ். மருத்துவபீட பதிவாளர் சர்வேஸ்வரா, ஆசியுரைகளை எழுத்தாளர்களாக சிற்பி சரவணபவன், கோப்பாய் சிவம், நூலின்வெளியீட்டுரையை ஆய்வாளர் நிலாந்தன், சிறப்புரையை பேராசிரியர்கள் சிவலிங்கராஜா, ஆய்வுரையை ஐ. சாந்தன், சட்டத்தரணி ராஜ குலேந்திரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (செ-2-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வவுனியா தெற்கிலுப்பைக்குளம் பராசக்தி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்கள் ஒலிம்பிக் தீபம் ஏற்றி போட்டிகளை ஆரம்பிப்பதையும் விருந்தினர் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)





சாவகச்சேரி நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதன்போது பாடசாலை அதிபர் திருமதி த.ஜீவகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் மாணவனொருவனுக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)





யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன் போட்டியை ஆரம்பித்து வைப்பதனையும் அருகில் வித்தியாலய அதிபர் நிற்பதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம்.

நிழல்கள்



மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் விருந்தினர் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதையும் இடைவேளை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் அதிதிகள் வரவேற்கப்படுவதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதிகளை நாடாளுமன்றில் அமர்த்துவதே ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஜனநாயகம்-பொன்சேகா

**நாட்டை மீட்டெடுப்பதற்காக பல்வேறு தியாகங்களை செய்த படையினரை சிறையில் அடைத்து, அரந்தலாவை பௌத்த பிக்குகள் படுகொலை உள்ளிட்ட கொடூரச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பயங்கரவாதிகளை நாடாளுமன்றில் அமர்த்துவதே ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஜனநாயகம் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

வியான்கொடவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்ட குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

தேர்தல் நெருங்கும் போது அரசாங்கம் மக்களை பிழையாக வழிநடத்த ஏதாவது ஒன்றை பிடித்துக் கொள்ளும்.

மத்திய, வட மாகாணசபைத் தேர்தல்களின் போது எரிவாயு, கனிய எண்ணெய் வளம் கிடைக்கப்பெற்றுள்ளதாக அரசாங்கம் பிரசாரம் செய்தது.

உண்மையில் அவ்வாறான எரிவாயு வளமுடைய கிணறுகள் இலங்கையில் உண்டா?

அரசாங்கம் பெற்றுக் கொண்ட கடன் மற்றும் அதன் மூலம் ஈட்டிய தரகுப் பணம் போன்றவற்றினால், மக்கள் பொருளாதார பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

தேசப்பற்றாளர்கள் போன்று பேசினாலும் ராஜபக்ஷ அரசாங்கம் பிரபாகரனுக்கு 800 மில்லியன் ரூபா பணம் வழங்கியுள்ளது.

போர் முடிவடைந்தன் பின்னர் பான் கீ மூனுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன்காரணமாகவே உலக நாடுகள் இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்கின்றன.

நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை பாதிக்கப்பட்டுள்ளது. பெண் ஒருவர் வீட்டில் தனியாக இருக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமது ஏழை மக்களின் பிள்ளைகள் பால் குடிக்க முடியாத அளவிற்கு வறுமையில் வாடுகின்றனர்.

எனினும், ராஜபக்ஷவின் புதல்வர்கள் சுங்கத் தீர்வையற்ற பந்தயக்கார்களை தருவித்து, வீதிகளை மூடி ஓட்டி மகிழ்கின்றனர் என சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார். (2)

## கிளிநொச்சி இளைஞன் கடற்படையினரால் கைது

மன்னார் வங்காலை பகுதியில் கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

குறித்த இளைஞர் சிறுத்தோப்பு கிராமத்தில் தங்கியிருந்து வங்காலையில் கடல் தொழிலில் ஈடுபட்டு வருவதாக தெரிய வருகின்றது.

தற்போது மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக சோதனைகளும்,தேடுதல்களும் இடம் பெற்றும் வரும் நிலையிலே குறித்த இளைஞர் கிளிநொச்சி கிராமத்தைச் சேர்ந்தவராக இருந்த காரணத்தினாலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

தற்போது குறித்த இளைஞர் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின் குறித்த இளைஞனை மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (2)

## இந்திய அமைதிகாக்கும் படையினருக்கு எதிராக கிழக்கில் முறைப்பாடுகள்

கிழக்கு மாகாணத்தில் இருந்தும் காணாமற் போனோர் தொடர்பான ஆணைக்குழுவிடம் இந்திய அமைதி காக்கும் படையினருக்கு எதிரான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக அதன் செயலாளர் எச். டபிள்யூ குணதாச தெரிவித்துள்ளார்.

இந்த ஆணைக்குழு நேற்று முன்தினம் செங்கலடியில் விசாரணை நடத்திய போது, 250 புதிய முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அதில் 3 முறைப்பாடுகள் இந்திய அமைதிக்காக்கும் படையினருக்கு எதிரானவை என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த ஆணைக்குழு 1990 ஆம் ஆண்டில் இருந்து 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய விசாரணைகளையே மேற்கொள்ளும் நிலையில், இந்திய அமைதிகாக்கும் படையினருக்கு எதிரான முறைபாடுகள் தொடர்பில் ஏதும் செய்ய முடியாது என்று அவர் கூறியுள்ளார். (2)



வாழ்நாள பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்களின் இலகு போதம் முதலாம் இரண்டாம் நூல் வெளியீடு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது வாழ்நாள பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் நூலினை வெளியிட்டு வைகக பேராசிரியர் மா. வேதநாதன் பெற்றுக் கொள்வதையும் அருகில் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோ கத்தர்களான திருமதி வி.மகிந்தனி, திருமதி ம. அனந்தலெட்சுமி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மு.காங்கிரஸ் இணைய வேண்டும்

### இதுவே முஸ்லிம்களின் விருப்பம் என்கிறார் ஹசன் அலி


(கொழும்பு)

நீண்டகாலமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்துள்ள போதும் முஸ்லிம்களின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை என்று முஸ்லிம் காங்கிரஸின் பொது செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இதன் காரணமாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைய வேண்டும் என்று முஸ்லிம் மக்கள் விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து ஐந்து



ஆண்டுகள் கடந்தும் அரசாங்கம் முஸ்லிம்களின் பிரச்சினைகளை இன்னும் தீர்க்கவில்லை.

இந் நிலையில் இதற்கான மாற்று நடவடிக்கைகள் தொடர்பில் சிந்திக்க வேண்டி இருப்பதாகவும் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.(2)

## மனிதவுரிமைகளுக்கு மதிப்பளிக்குமாறு இலங்கை அரசிற்கு அமெரிக்கா கோரிக்கை

இலங்கை அரசாங்கம் தமது சொந்த மக்களை தண்டிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இறுதிப்போரின் போது இரண்டு தரப்பிலும் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் உண்மைகளை வெளிக் கொணர்வோருக்கு எதிராகவே இந்த நடவடிக்கையை அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் ஜென் சாக்கி இது தொடர்பில் நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

மனிதவுரிமை காப்பாளர்களான ருக்கி பெர்னாண்டோ வணக்கத்துக்குரிய கத்தோலிக்க அருட் தந்தை பிரவீன் மகேசன் ஆகியோர் கைது செய்யப்பட்டு வசாரணை செய்யப்பட்டமை தொடர்பில் அமெரிக்கா கவலை கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார.

இவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்ட போதும் தொடர்ந்தும் இலங்கைப் படையினரால் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான கைதுகளுக்கு அச்சுறுத்தல்களும் இலங்கையில் நல்லிணகத்தை தூரப்படுத்துவதுடன் ஜனநாயக வரம்புகளை மீறிவிடும் என்று சாக்கி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந் நிலையில் சர்வதேச விழுமியங்களை கருத்திற்கொண்டு மனிதவுரிமைகளை காக்குமாறு அவர் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார். (2)

## ஏப்ரல் முதல் வாரம் கித்துள் ஊக்குவிப்பு வாரமாக பிரகடனம்

(கொழும்பு)

ஏப்ரல் மாதத்தின் முதல் வாரம் கித்துள் ஊக்குவிப்பு மற்றும் நுகர்வு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் கித்துளின் முக்கியத்துவத்தை மேம்படுத்தும் வகையில் இவ்வாரம் பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

இவ்வாரத்தில் கித்துள் தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன்- கித்துள் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் கித்துள் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. மேலும் கித்துள் உற்பத்திகளின் போஷாக்கு- மருத்துவ மற்றும் சுகாதாரப் பெறுமானங்கள் தொடர்பில் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளும் நடத்தப்படவுள்ளன.

உல்லாசப்பயணிகள் - பொதுமக்கள் மத்தியில் கித்துள் பாவனையையும் நுகர்வையும் அதிகரிக்கச் செய்வதற்கான பல நிகழ்ச்சிகளும் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## சிலி நாட்டின் புதிய ஜனாதிபதிக்கு மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து செய்தி



சிலி நாட்டின் புதிய ஜனாதிபதி மிச்சேல் பெச்சலெட்டுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார். கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு கடந்த வாரம் பதவியேற்ற சிலிநாட்டின் புதிய ஜனாதிபதி மிச்சேல் பெச்சலெட்டுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அவர் தனது வாழ்த்துச் செய்தியில்,

நீங்கள் இரண்டாம் முறையாகவும் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பது சிலி மக்கள் உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையை எடுத்துக் காட்டுவதாயுள்ளது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். உங்கள் தலைமைத்துவத்தின் கீழ் சிலி சுபீட்சம் மற்றும் அபிவிருத்தியை நோக்கி மேலும் முன்னேற்றமடையும் என நான் நம்புகின்றேன். இரண்டு நாடுகளுக்கிடையேயும் காணப்படும் மிகநெருங்கிய உறவுகளைச் சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி, அந்த உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் புதிய சிலி ஜனாதிபதியுடன் மேலும் நெருங்கிப் பணியாற்ற தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மிச்சேல் பெச்சலெட் சிலியின் ஜனாதிபதியாக இரண்டாம் முறையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைகுழி தேசம்

ஈழத் தமிழர் படுகொலைகளுக்குப் பின்னர் எல்லா இடங்களிலும் இப்போது மனித புதைகுழிகளாக உருமாறி விட்டன. திருக்கேதீஸ்வரம், இறுதிப் போர் நடந்த மூங்கிலாறு பகுதிகளில் தோண்டப்பட்ட குழிகளில் இருந்து நூற்றுக்கணக்கான மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டதே, இப்போது ஈழக் கொலைக்களத்தின் சாட்சி.

இந்தியா, தேர்தல் ஜுரத்தில் தகித்துக் கொண்டிருக்க, தமிழகம் கூட்டணிக் கணக்குகளுக்குள் சிக்கி உழன்றுகொண்டிருக்க... ஈழ நிலவரம் கண்டு கொள்ளப்படாத செய்தியாகி விட்டது இப்போது!

தடிநீருக்காகத் தோண்டிய போது திருக்கேதீஸ்வரத்திலும், நிலத்தை உழுதபோது மூங்கிலாறு பகுதியிலும் மனித எலும்புக்கூடுகள் தென்பட்டிருக்கின்றன.

அதிர்ச்சியில் விதிர்விதிர்த்து, அரசுக்குத் தகவல் தெரிவித்து மேலும் தோண்டினால், தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள்! அரைகுறையாகக் குழி தோண்டி அதில் குறுக்கும் நெடுக்குமாக மக்களைப் போட்டு மண் மூடியிருக்கிறார்கள். உயிரோடு புதைத்தார்களா... கொன்று புதைத்தார்களா... அல்லது போரில் கொல்லப்பட்ட மக்களின் பிணங்களா?' என்பதெல்லாம் கடவுளுக்கே வெளிச்சம். இதனால், அடிப்படைத் தேவைகளுக்காக மண்ணைத் தோண்டக்கூட அச்சமடைந்துள்ளனர் ஈழ மக்கள்!

திருக்கேதீஸ்வரம், மூங்கிலாறு பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் பெரும்பாலும் எலும்புகள் சிதைந்தும், மண்டை ஓடுகள் உடைந்தும் காணப்படுகின்றன.

ஐந்து முதல் ஏழு ஆண்டுகளுக்குள் புதைக்கப்பட்டவர்களாக இருக்க வாய்ப்பு இருக்கிறது' என்கிறது மருத்துவர் குழு அறிக்கை. ஆனால், அதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த எலும்புக்கூடுகளுக்கு உரியவர்கள் குண்டு வீச்சில் கொல்லப்பட்டவர்களாக இருக்கலாம். அல்லது இறுதிப் போரில் கொல்லப்பட்ட, போராளிகளுடையதாக இருக்கலாம். ஏனென்றால், போர் முடிந்து மூன்று வருடங்களாக இந்தப் பகுதிக்குள் வேறு யாரும் நுழையாதபடி இராணுவமே தன் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. நிலைமை சகஜமடைந்து ஓரளவு மக்கள் தங்களின் இயல்பு வாழ்வைத் தொடங்கும்போது, இந்த மரணக் குழிகள் வெளிச்சத்துக்கு வருகின்றன.

இப்போது மக்களிடையே இரண்டு விதமான அச்சம். எங்கெங்கு மனிதப் புதைகுழிகள் இருக்குமோ என்பது ஒன்று, காணாமற்போன தங்கள் சொந்தபந்தங்கள் எலும்புக்கூடுகளாக அந்தப் புதைகுழிகளில் இருப்பார்களோ என்பது இன்னொன்று! என்கிறார் கிளிநொச்சியில் வசிக்கும் சாந்தரூபன்.



"இப்போது மக்களிடையே இரண்டுவிதமான அச்சம். எங்கெங்கு மனிதப் புதைகுழிகள் இருக்குமோ என்பது ஒன்று; காணாமற்போன தங்கள் சொந்தபந்தங்கள் எலும்புக்கூடுகளாக அந்தப் புதைகுழிகளில் இருப்பார்களோ என்பது இன்னொன்று!"

போரில் கொல்லப்படுவதைத் தவிர்க்க பதுங்குகுழி தோண்டிப் பழக்கப்பட்ட மக்கள், இப்போது கிணறு தோண்டவோ, வீட்டுத் தேவைக்காகச் சிறிய பள்ளம் ஒன்றைத் தோண்டக்கூட பயப்படுகிறார்கள். போருக்குப் பின்னரான உளவியல் போரின் முதல் புள்ளி... புதைகுழி. வருங்காலங்களில் இன்னும் பல பூதங்கள் எழும்பும்.

ஜெனீவாவில் ஐ.நா. மனித வுரிமை அமர்வுகள் தொடங்கியிருக்கும் நிலையில் தன் மீதான சர்வதேச அழுத்தங்களைத் தவிர்க்க, இந்தப் புதைகுழிகளை தனக்குச் சாதகமான கோணத்தில் அணுகி இருக்கிறது இலங்கை அரசு.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கோபால் கோடீஸ்வரன் என்பவரிடம் புதைகுழி தொடர்பான புகார் மனுவைப் பெற்று அதன் அடிப்படையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக வழக்குப் பதிந்திருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் பொலிஸ் துறையில் பணிபுரிந்த குணராஜ் என்பவரைத் தேடுவதாக அறிவித்துள்ளது இலங்கை இராணுவம்.

விடுதலைப் புலிகள், பொது மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்திக் கொன்று புதைத்த புதைகுழிகள்தான் இவை என்று ஐ.நா. விசாரணையை எதிர் கொள்வது இலங்கை அரசின் திட்டம்.

இந்த நிலையில் ஐ.நா. ஆண்டுதோறும் நடத்தும் மனித வுரிமை அமர்வு, இந்த ஆண்டு ஜெனீவாவில் தொடங்கிவிட்டது. ஐ.நாவின் மனிதவுரிமை ஆணையாளரான நவிப் பிள்ளை நேரடியாக இலங்கைக்கு வந்து சென்று தயாரித்த அறிக்கை, ஐ.நாவில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இலங்கை அரசிடம் அனுப்பி, அவர்கள் கூறிய திருத்தங்களுடன்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

அதோடு ஐ.நாவில் அமெரிக்கா முன்மொழிந்துள்ள தீர்மானம், ஈழத்தில் நடந்த இனப்படுகொலை தொடர்பாக சுதந்திரமான சர்வதேச விசாரணையைக் கோரவில்லை.

இலங்கை அரசு அமைத்த நல்லிணக்க ஆணைக் குழுவின் மூலமான விசாரணையைத்தான் மீண்டும் மீண்டும் கோருகிறது. ஆனால், கொல்லப்பட்ட மக்களுக்கும், உயிர்தப்பி எஞ்சியிருக்கும் மக்களுக்கும் நீதியும் அச்சமற்ற வாழ்வும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றால், சுதந்திரமான விசாரணைதான் குறைந்தபட்சத் தேவை! என்கிறார் ஈழத்துக் கவிஞர் சேரன்.

இலங்கைத் தீவில் ஒரு நூற்றாண்டுக்கும் மேல் அரசியல் பிரச்சினையாகக் கொளுந்து விட்டு எரிந்த இனப் பிரச்சினை என்பது தீர்மான வரைவில் குறிப்பிடப்படாமல், வெறும் மனித வுரிமை மீறல் என்ற அளவில் ஈழத் தமிழர் பிரச்சினையாகச் சுருக்கப்பட்டுவிட்டது.

இதுவே இலங்கை அரசுக்குக் கிடைத்த வெற்றி என்றே கொள்ளலாம். அத்துடன் ஈழத் தமிழருக்கு இழைக்கப்பட்டுவரும் அரசியல் அநீதிக்கும், இன அடையாளப் படுகொலைக்கும், வாழ்வியல் இருப்புக்கான அச்சுறுத்தலுக்கும் அனைத்துலக சமூகமும் துணைபோவதாகவே நினைக்க முடியும்.

இலங்கையில் இனப் பிரச்சினை என்று எதுவும் இல்லை எனும் இலங்கை அரசின் கூற்றுக்கு வலுச் சேர்ப்பதாகவே இந்தத் தீர்மான வரைவு அமைந்துள்ளது.

இலங்கை பொலிஸ் துறை புலிகள் கொன்று புதைத்த பிணக்குவியல் அது என்று குற்றஞ்சாட்ட, இலங்கை அரசின் தொல்லியல் துறையோ, மனிதப் புதைகுழிகளை ஆதிகாலக் கல்லறைகள் என்கிறது.

போரில் தப்பி வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களாலும் பேச முடியாது என்பதே அவர்களின் இந்தத் துணிச்சலுக்குக் காரணம்!

ஈழத்தில் யுத்தம் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், இறுதி இன அழிப்பு யுத்தத்தில் காணாமற்போன தங்களின் உறவுகளைத் தேடி மக்கள் நடத்திய அத்தனை ஆர்ப்பாட்டங்களிலும் தனிக் கவனம் பெற்ற கண்ணீர், சிறுமி விபூசிகாவினுடையது.

13 வயதே ஆன விபூசிகா, காணாமற்போய் இராணுவத்தின் பிடியில் இருக்கும் தன் அண்ணன் மகிந்தனை ஒப்படைக்குமாறு தன் தாய் ஜெயக்குமாரியோடு போராட, அது உள்ளூர் மற்றும் உலக ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தது. நவிப்பிள்ளை வந்தபோது போராடிய விபூசிகா, இப்போது ஐ.நா. அமர்வு நடப்பதையொட்டிப் போராட, 13 வயது விபூசிகாவையும், அவரது அம்மா ஜெயக்குமாரியையும் கைது செய்தது பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ். பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் தந்தார் என்ற பெயரில் கைதுசெய்யப்பட்ட ஜெயக்குமாரியை, பூசா தடுப்பு முகாமுக்கு அனுப்பிய பொலிஸார், விபூசிகாவை சிறுவர் இல்லத்துக்கு அனுப்பி விட்டார்கள்.

அந்த விபூசிகாவின் கண்ணீர் உலகத் தமிழர்களை உசுப்பியிருக்கிறது.

ஆனந்த விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

## வீதியில் விதி முடிகிறது

சாலை விபத்துக்களில்- இன்று
சாய்ந்து போகிறது
தன்மானமுள்ள மனித சமுதாயம்
கூற்றுவனின் கயிறுகளோ
கொடுமையாய் குறி வைக்கிறது
அந்தரித்து அழுகிறோம்
வீடுகளில் இன்றும் வேதனைகள்
வீதிகளிலோ இன்றும் சோதனைகள்
என்று மாறுமோ அவலம்
இன்று தீருமோ எம் துயரம்
அபிவிருத்தியோ ஆட்களை
அடுக்கடுக்காய் கொல்கிறது
விபத்துக்களோ பலரை
விதவைகளாக்குகிறது
யார் விட்ட வழியோ...?
அவன் தந்த வரமோ...?
இன்றும் வினாக்களுடன் நகர்கிறது
ஏழைகள் நம் வாழ்வு...

**ச.வராகி**
**குளவிசுட்டான்**

## கட்டுமரம்

இதுதான் கடற்தாயின்
செல்லப்பிள்ளை
இரும்பேதுமற்ற உடல்
இருந்தொருமுறை அனுபவித்தால்
இதுவுமொரு உயிரென்று புரியும்
கடலின் மடியில்
எல்லையின்றிப் பறப்போம்
கடவுளின் அழைப்புவந்தாலும்
இதிலேதான் செல்வோம்...
இதுவும் எம்மோடு பிறந்தது
இது இத்துப்போனாலென்ன
நாம் செத்தும் போனால்தான் என்ன...
இரண்டிற்கும் ஒரே முடிவிடம்
எல்லையில்லா இந்த உப்புமண்தான்
எட்டத்தார் வந்து
ஏலத்தில் கேட்டாலும்
ஏழைகள் எமைவிட்டுச் செல்லாது...
கடலோரத்தானுக்கு
கடவுள் கொடுத்த வரம்
இந்தக் கட்டுமரம்

**பி.முல்லைதாசன்**
**கள்ளப்பாடு**

## யாவரும் உறவினரே!

ஓர் ஊரைப் பிறப்பிடமாகவும்
இன்னோர் ஊரை வசிப்பிடமாகவும்
சீர்மிகு இலங்கை தேசத்தில்
ஊர்கள் பலவற்றில்
ஆசிரியர் தொழில் செய்தபோது
வாத்தியார் என்ற நாமத்துடன்
இலங்கையன் என்ற சாகியமே
துலங்கும் குறியீடு எனக்கு
ஊர்விட்டு ஊர் செல்லும் போது
ஊர்ப்பெயரால் அழைப்பர்
அடுத்துள்ள பாரதம் செல்லும் போது
இலங்கையன் என்பர்
அயல்கண்டம் ஐரோப்பா
செல்லும்போது ஆசியான் என்பர்
பிறப்பின்போது இவர்மகன் என்பர்
திருமணத்தின்பின் இவள் கணவன் என்பர்
இறுதியிலோ அன்னார் என்பர்
இடம்விட்டு இடம் சென்றால்
தடம்மாறும் சாகியம் பெயர்கள்
நான் ஓர் மானுடன்
யாதும் ஊரே யாவரும் உறவினரே

**புத்தூர் கு.குகன்**

## இமயம் தொட...

உன் பழியை மறைத்து
பிறர் குறை கூறின்
ஊர் உன்னை
தூக்கி எறியும்
உன்னை நீ பிரதிபலி
பசுந்தோல் போர்த்தினாலும்
புல்லைத் தவிர்க்கும் புலி
தவிர்- பசுந்தோல் போர்த்திய
புலிகளை

**மாவை.நா. கஜேந்திரன்**

## இரத்த உறவு

புன்னகை தேசத்தின் புத்திரன் நீ
மண்ணுலகம் மறவாத மறவன் நீ
நண்பனாய் என்னுள் வந்து
நடமாடினாய் -இன்று
நம்மை எல்லாம் தவிக்கவிட்டு
எங்கு சென்றாய்
உயிர்வாழ உதிரம் தேவை
என உணர்ந்து கொண்டாய்
அதனால் உன் உதிரம் தந்து
என் உயிர் காத்தாய்
நாட்கள் ஒவ்வொன்றும்
நகர்ந்து சென்றாலும்
நகராது உன் நினைவு
என் மனம் எனும் மௌன அறையில்

**பு.சர்மி, கரவெட்டி கிழக்கு**

# மௌனத்தின் தேடல் – 196



## பயணம்

இரும்புக் கூட்டுக்குள்- உம்
இருப்பைத் தொலைத்து
இன்னும் எத்தனை நாட்கள்தான்
இரந்து நிற்பது?
பூட்டுக்கள் சிதறிட வாழ்வில்
புன்னகை பொலிந்திட
மூட்டுங்கள் பெருந்தீயை
ஒளிர்ந்திடும் தீயினுள்- உமக்காய்
மிளிர்ந்திடும் புதுவாழ்வொன்று
தொடரட்டும் உம்
புதுவாழ்வு நோக்கிய
புரட்சிப் பயணம்

*கொக்காவிலூர் கஜந்*
*துணுக்காய்*

## கூண்டுக்கிளி

நாசாவில் பணியாற்றும்
திறனுள்ள நம்மவன்
பூசாவுக்குப் போனதும் ஏனோ?
நாசமாகத் தானோ?

*வாணியழகன்*
*முரசுமோட்டை*

## சந்தேகத்தின் பேரில்

எனக்கான நாட்களை
எண்ணிக் கொண்டிருக்கின்றேன்
தசாப்தங்களையும் தாண்டி
சந்தேகத்தின் பேரில்

*உதயம் ரூபன்*
*நயினை*

## என் அப்பா

சுற்று மதிலினுள் தூசிக்காற்றை
ஏசியாய் இனிமையாய் சுவாசித்து
தொலை தூரத்தை
தொலைநோக்கியே பார்த்து
சுற்றத்தவரின் வருகையால்
விடுதலை நாள் எண்ணி
கால் கடுக்க காத்திருக்கும்
என் அப்பாவே!
கயவர்கள் கையால் விலங்கிட்டு
கம்பிக் கூட்டினுள் கைதியாகி
கதி கலங்கி நின்றாலும்
ஓர்நாள் கடவுளின் தீர்ப்புண்டு

*யு.சோபியா*
*விசுவமடு*

## விடுதலை

சிறைக் கதவைப் பிடித்துச்
சிந்திக்கும் மானிடனே!
இவையொன்றும் நிரந்தரமல்ல
நாளையோ என்றோ நீ
விடுதலை பெறுவாய்

*கணபதிதாசன்*
*கட்டைக்காடு*

## பொருள்

மறைபொருள் இறைவன்
பார்வையில்
சிறை அறை குருதி கறை
படிந்த மறைவிடம்
பறை சாற்ற சாட்சியாக
மனிதன் ஒருவன் அங்கே
அவனும் சிறையில்!

*சி.சுகிர்தமலர்*
*உருப்பிராய் மேற்கு*

## புதுவாழ்வு நோக்கி

நஞ்சகர் செய்திட்ட
வஞ்சக வினையாலே
துஞ்சிற்றே உம் வாழ்வு
எஞ்சிய இரு சுவருள்
அஞ்சியே இனும் நின்றால்
எஞ்சிடும் வெறும் மரணமே!
கெஞ்சிடும் நிலை மறந்து
மிஞ்சாது உடைத்தெறிவீர்
வஞ்சகன் தடைகளெல்லாம்
பஞ்சாகிப் பறக்கவே!

*முல்லை கஜன்*
*மல்லாவி*

## மக்களே வாரீர்

பாதாள கோஷ்டிதனை பாதுகாக்கும் அரசுதனை
தட்டிக்கேட்கும் எம்மை கூட்டினில் அடைத்து
மகிழ்பாடும் கூட்டத்தினரை
வீதியில் வீசிட மக்களே வாரீர்
எம்மவரை மீட்டிட நாட்டைக் காத்திட

*நா.தளையசிங்கம்*
*கொக்குவில்*

## கண்ணீர்க்கதவு

குடும்ப அன்புக் கதவு மூடப்பட்டது
பிள்ளைகள் பாசக்கதவு மூடப்பட்டது
சுற்றார் கருணைக்கதவு மூடப்பட்டது
அதனால் உன் கதவை நம்பி வந்தேன்
இங்கு உன் கதவும் மூடப்பட்டது
கண்ணும் மூடப்பட்டது
ஆனால் திறந்தது என்
கண்ணீர்க்கதவு

*ஆனந்த் அபி*
*பருத்தித்துறை*

## அக்கிரமங்கள்

விக்கினங்களை விலக்கி வைக்கும்
விக்கிரகங்கள் வக்கிர புத்தியால்
கடத்தப்படுவதால் கடவுள்களுக்கும்
சிறைவாசம் இடையிடையே
நடைபெறுகின்றது

*க.நாகராசா*
*சாவகச்சேரி*

## மலரும் வசந்தம்

விதி செய்த சதியாலே
கதியிழந்து காத்திருக்கும்
கானல் வாழ்வு - இன்னும்
எத்தனை நாளுக்குத்தான் இப்படி?
இரும்புக்கதவு இமயமலையல்ல
துரும்பாக எண்ணி துடைத்தெறிவீர்
வசந்தம் வீசும் நிலையான வாழ்வொன்று
நீடு வாழ்வதற்கு நிச்சயமாய் கிட்டும்
இன்றல்ல நாளையாவது

*கவிமகன், துணுக்காய்*

## யாரறிவார்?

புரியாததொன்றைத்
தெரிந்தது போல் நடிக்கும்
நரிக்குணம் படைத்தவர்களே
சரித்திரம் நிறையவுண்டு
பரிதாபத்துக்குரிய இவர் போல்
ஊரிலுமிருக்கின்றார்கள்
இரும்புக் கதவின் பின்னால்
இருளில் என்ன நடக்குதென்று
யாரறிவார்?

*துரை, தென்மட்டுவில்*

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –197



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 27.03.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பு வாசகர்களே!

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல. 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

த.கனிஸ்ரன், மட்டுவில்

**Hello வியாசர் அண்ணா!**

**தற்பொழுது நடக்கும் சமூக சீர்கேடுகள் பற்றி தங்கள் கருத்து என்ன?**

எப்போது விளையாட்டின் மகத்துவம் அறியாது எம் இளைய சமூகம் கொலை வரை சென்றதோ அப்போதே எம் சமூகம் தறி கெட்டுப் போய்விட்டது என்பதே திண்ணம்.

சி.சிவறீபன், புன்னாலைக்கட்டுவன்

**வியாசர் அங்கிள்!**

**கேள்வி கேட்பவன் அறிவாளியா? அல்லது அதற்கு பதில் சொல்பவன் அறிவாளியா....?**

அது கேட்கும் கேள்வியையும் சொல்லும் பதிலையும் பொறுத்தது.

த.மோகனரூபன், சுழிபுரம்

**Hi Viyaa Master,**

**கடவுளை உணர முற்படும் மாந்தர் கடமையை உணர முற்படுவதில்லையே ஏன்?**

கடமைக்குள் கடவுள் இருக்கின்றார் என்பதை உணராததனால்தான்.

ஆனந்த் அபி, பருத்தித்துறை

**Hi வியாசர் அண்ணா!**

**பெண்கள், ஆண்கள் மீது வைத்திருக்கும் காதலுக்கும் ஆண்கள், பெண்கள் மீது வைத்திருக்கும் காதலுக்கும் என்ன வித்தியாசம் என தயவு செய்து கூறுங்கள்?**

பெண் காதலுக்காக உயிரையும் கொடுபபாள். ஆண் ஒரு உயிரைக் கொடுப்பான் அல்லது அதை எடுப்பான்.

## கடவுளை உணர முற்படும் மாந்தர் கடமையை உணர முற்படுவதில்லையே ஏன்?




கொஞ்சம் சிரிங்கப்பா...

K. வாணி, புன்னாலைக்கட்டுவன்

**அன்பின் வியா அண்ணா!**

**தலைக்கவசத்தினுள் கையடக்கத் தொலைபேசியை வைத்து விட்டு தங்களையே மறந்து கதைத்துக் கொண்டு செல்லும் இளசுகளை எப்படித் திருத்துவது?**

தண்டம் அறவிடுவதை நிறுத்தி ஆறு வாரம் தலைக்கவசத்துடனேயே வாழ வேண்டும் எனும் தண்டனை கொடுத்தால் ஓரளவு திருந்தும்.

## தற்பொழுது நடக்கும் சமூக சீர்கேடுகள் பற்றி தங்கள் கருத்து என்ன?

வெ.பிரகஸ்பதி, பருத்தித்துறை

**வியா!**

**ஆண்களை காதலிப்பதாக கூறி துரோகம் செய்யும் பெண்களைப் என்ன செய்யலாம்?**

முதலில் பெண்களை கல்யாணம் செய்வதாகக் கூறி கைவிடும் ஆண்களை என்ன செய்யலாம் எனக் கூறுங்களேன்.

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

**அன்பின் வியாசரே!**

**பலகாலம் அடித்தும் திருத்த முடியாத மனிதர்களை ஒரு நிமிட அன்பு சரிப்படுத்துகிறதே. அது எப்படி முடிகிறது?**

இறுகிய பாறையை ஆப்பு வைத்துப் பிளப்பது போன்றது கண்டிப்பு. அதே பாறையில் சிறுவிதை முளைவிட்டு, வேர்விட்டு விருட்சமாவது போன்றது அன்பு. அன்பின் வலிமைக்கு எதுவும் சமனாகிவிடாது.

கனபதிதாசன், கட்டைக்காடு

**அன்பின் வியாசரே!**

**அன்றைய சினிமாவுக்கும் இன்றைய சினிமாவுக்கும் உள்ள வித்தியாசம் எப்படி உள்ளது?**

தகப்பனும் மகனும் புதிய சினிமாப் படமொன்றை T.V.யில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். படத்தில் ஆபாசமான காட்சி வரும்போதெல்லாம் தகப்பன் மகனிடம் தண்ணீர் எடுத்து வரும்படி அனுப்பி விடுவார். படத்தின் ஒரு கட்டத்தில் ஆபாச காட்சி வரும் முன்பே மகன் எழுந்து அப்பா தண்ணீர் எடுத்து வரவா? எனக் கேட்டான். தகப்பன் சொல்வதறியாது விழி பிதுங்கி நின்றார். இக் கதை போல்தான் இன்றைய சினிமாவும் குடும்பத்தினருடன் இருந்து பார்க்க முடியுமா? ஆனால், அன்றைய சினிமா சமூகத்தில் ஒருவனை நற்பிரஜையாய் வாழ வைத்தது. அதுதான் இன்று Old is Gold என்கிறார்களே.

கருணா, மானிப்பாய்

**Mr. வியா!**

**என் உடல் எடை குறைந்திட ஒரு டிப்ஸ் சொல்லுங்களேன்?**

ஒருவன் டாக்டரிடம் சென்று எனக்கு உடல் பருமன் குறைவதற்கு ஏதும் மருந்து கொடுங்கள் என கேட்டான். டாக்டரும் யோசித்து விட்டு காலை, மதியம், இரவு மூன்று வேளையும் கால் இறாத்தல் பாண் சாப்பிடு, எல்லாம் சரிவரும் என கூறி அனுப்பினார். சிறிது நேரத்தில் திரும்பி வந்தவன் டாக்டர் நீங்கள் சொன்ன மருந்து சாப்பாட்டிற்கு முன்பா சாப்பாட்டிற்கு பின்பா என்று கேட்டான். டாக்டர் திகைத்துப் போனார்.

# தலதாமாளிகைக்கு அருகில் தூக்குமேடை அமைத்தவர்கள் மனிதவுரிமை குறித்து பேசுகின்றனர்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தலதாமாளிகைக்கு முன்பாகவே தூக்குமேடை அமைத்து இழுக்கை ஏற்படுத்தியவர்கள் இப்போது மனிதவுரிமை என்றும் மத நல்லிணக்கம் என்றும் எம்மிடம் கேள்வி எழுப்புகின்றனர். இதில் என்ன நியாயமிருக்கிறது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பினார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் கல்வி மேம்பாட்டுக்கான முதலாவது பாடசாலை நேற்று முன்தினம் வட்டரெக்க பானலுவ திறந்தவெளி முகாமில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பௌத்த மதத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் கண்டி தலதாமாளிகைக்கு அருகில் தூக்கு மேடை அமைத்தவர்களே இப்போது மனிதவுரிமை சம்பந்தமாகவும் சமய நல்லிணக்கம் சம்பந்தமாகவும் எம்மிடம் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

அக்காலத்தில் 16 வயதிற்கும் பதினெட்டு வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர்களை படுகொலை செய்ய உத்தரவிட்டவர்கள் மனிதவுரிமை பற்றி பேசுவதில் என்ன நியாயமுள்ளது எனவும் ஜனாதிபதி கேள்வியெழுப்பினார்.

அத்துடன் 1940 ஆம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் மற்றும் அவை சம்பந்தமான சட்ட விடயங்களில் மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளது என ஜனாதிபதி தெரிவித்தார்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சும் கல்வி அமைச்சும் இணைந்து மேற்படி பாடசாலையை நிர்மாணித்துள்ளதுடன் அரசாங்கம் இதற்கென 20 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

முதற்கட்டமாக க. பொ. த. சாதாரண தரம் வரையும் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் இரண்டாம் கட்டமாக க. பொ. த. சா.த., உயர்தரம் அதனையடுத்து திறனபிவிருத்தி தொழில் பயிற்சிகளும் இதனூடாக சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

மேற்படி பாடசாலையை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்த ஜனாதிபதி பாடசாலையின் வகுப்பறைகளை நேரில் பார்வையிட்டார். பாடசாலையின் வசதிகள் மற்றும் விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடினார். முதற்கட்டமாக 120 மாணவர்கள் இங்கு கல்வி பயிலவுள்ளனர்.

தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

சிறைக் கைதிகளாக உள்ள இளம் பராயத்தினருக்கு கல்வியைப் பெற்றுக் கொடுக்க வசதியாக நாட்டில் முதற் தடவையாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலையை திறந்து வைத்துள்ளார்.

இங்குள்ள சிறார் கைதிகளோடு நான் கலந்துரையாடிய போது மிகவும் சிறு சிறு குற்றங்களுக்காக இவர்கள் நீதிமன்றத் தீர்ப்புக்கமைய தண்டனை அனுபவிப்பவர்கள். இதனை நோக்கும் போது 1940 ஆம் ஆண்டு காலங்களில் கொண்டு வரப்பட்ட இத்தகைய சட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படுவது பற்றி மீள சிந்திக்க வேண்டியுள்ளது.

சிறைக் கைதிகளை அடைத்து வைத்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவதை விடுத்து சிறைச்சாலைகளை புனர்வாழ்வு நிலையங்களாக மாற்றி அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பது பற்றி நான் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளேன். இப்போது பல குற்றங்கள் சிறைச்சாலைக்குள்ளும் நடைபெறுவதைக் காண முடிகின்றது.

சிறைச்சாலைகளில் இருப்போர் சமூகத்தைப் பற்றி அறியவும் அவர்கள் சிறந்த கல்வியைப் பெற்று சமூகத்தில் சிறந்த பிரஜையாக உருவாவதற்கும் இந்த பாடசாலை உறுதுணையாக அமையும். இவர்களுக்கு இப்பாடசாலையில் கணனி தொழில்நுட்பம், மொழி பயிற்சியும் வழங்கப்படுகின்றன.

சர்வதேச மொழியும் இவர்களுக்குப் பயிற்றப்பட்டால் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு இவர்களுக்கு வாய்ப்பு கிட்டும்.

எம்மைப் படுகொலை செய்தவர்களான பயங்கரவாதிகளையும் வெடிகுண்டு வைத்து ஆயுதங்களை ஏந்தி படுகொலை கலாசாரத்தில் ஈடுபட்டவர்களையும் நாம் மன்னித்து புனர்வாழ்வளித்து சமூகத்தோடு இணைத்துள்ளோம். சமூகத்தோடு உள்ள நம்பிக்கை காரணமாக, அத்தகைய பாரிய சவாலை துணிவுடன் ஏற்று நாம் செயற்பட்டோம் என்றார். (2)

# இலங்கைப் பெண்ணுக்கு ஆயிரத்து 200 கசையடிகள்

## சவுதி நீதிமன்றம் தண்டனை

சவுதி அரேபியாவில் வீட்டுப் பணிப்பெண்ணாக தொழில் புரிந்து வந்த இலங்கை பெண்ணொருவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் ஆயிரத்து 200 கசையடிகள் மற்றும் 12 வருட சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

இலங்கை பெண் தான் பணியாற்றிய வீட்டில் கொள்ளையிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு அவருக்கு எதிராக நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்தே இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் நிக்கவரெட்டிய, வதுவெஸ்ஸ பிரதேசத்தை சேர்ந்த பெண்ணுக்கே இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர் ஜித்தாவில் உள்ள மலாஸ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சிறையில் அடைகப்பட்டுள்ள தனது மனைவியை விடுதலை செய்ய உதவுமாறு பெண்ணின் கணவர் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் சொந்தக்காணிகள் அபகரிக்கும் நடவடிக்கை தொடர்கிறது

## பொன். செல்வராசா எம்.பி

**இலங்கையிலே தமிழினம் மண்ணை காப்பற்றுவதற்காக இலட்சக்கணக்கான உயிர்களை தியாகம் செய்த போதிலும் தொடர்ந்தும் போராட வேண்டிய நிலையே காணப்படுகிறது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்துள்ளார்.**

எமது பிரதேசங்களில் சட்ட விரோதமாக குடியேறுபவர்களை நீதிமன்றம் சென்று சட்ட நடவடிக்கை மூலம் வெளியேற்றுவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எப்போதும் தயாராகவுள்ளது என்றும் அவர் கூறினார்

சட்டவிரோத காணி அபகரிப்பை தடுப்பது தொடர்பாக செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஐயங்கேணியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வடக்கு கிழக்கிலே தமிழர்களின காணிகளை அபகரிக்கும் நடவடிக்கை தொடர்ந்தவண்ணமேயுள்ளது.

குறிப்பாக வடக்கிலே தமிழர்களின் சொந்த காணிகளையே அபகரிக்குமளவிற்கு அரசாங்கம் தனது நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது.

வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் சுமார் 6 ஆயிரத்து ஐந்நூறு ஏக்கர் காணிகளை தம்வசம் எடுப்பதற்காக அரசாங்கம் தற்பொழுது நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதற்கெதிராக மக்கள் நீதிமன்றிலே வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

இந்த நிலையில் அங்கிருந்த பாடசாலைகள், கட்டடங்கள், வீடுகள், ஆலயங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. அந்தளவிற்கு வடக்கிலே அராஜகம் நடைபெறுகிறது.

கிழக்கு மாகாணத்திலே மட்டக்களப்பு மாவட்டத்திலே எல்லை கிராமங்களில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவர்கள் அரசாங்க காணி என்ற போர்வையில் அத்துமீறி குடியேறிக்கொண்டிருக்கிறார்கள்.

இது தொடர்பாக நாங்கள் சட்ட நடவடிக்கையெடுக்க முற்பட்டபோது போது சில காணி அதிகாரிகள் சட்ட நடவடிக்கையெடுக்க முடியாது என்று கட்டளை பிறப்பித்திருந்தார்கள்.

இவர்களின் கட்டளை செல்லுபடியற்றது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அந்த வழக்கின் தீர்ப்பு வெளிவருவதற்கிடையில் சட்ட நடவடிக்கையெடுக்கலாம் என அதே அதிகாரிகளினால் கூறப்படுகிறது.

எமது காணிகள் பறிபோகின்றன, எமது மாவட்டத்திற்குச் சொந்தமான அரச காணிகள் பறிபோகின்றன, எமது மக்கள் காலாகாலமாக வாழ்ந்துகொண்டிருக்கும் காணிகள் எல்லைப் பிரதேசங்களிலே பறிபோகின்றன.

எந்த இனத்தவராக இருந்தாலும் அரச காணிகளில் சட்டவிரோதமாக குடியேற முடியாது.

அவ்வாறு குடியேறியிருந்தால் அவர்களை வெளியேற்றுவதற்கு சட்டநடவடிக்கையெடுப்போம்.

எமது மண்ணைப் பாதுகாபபதற்காக எமது சகோதரங்கள் இலட்சக்கணக்கில் மரணத்தைத் தழுவினார்கள்.

மண்ணை மீட்டெடுப்பதறகாகத்தான் எமது தமிழினம் இலட்சக்கணக்கான உயிர்களைக் கொடுத்தது.

இவ்வாறான தியாகங்கள் செய்து எமது மண்ணை பறிகொடுக்க முடியாது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தொடர்ந்தும் மண்ணை காப்பாற்றுவதற்காக நடவடிகையெடுத்துக் கொண்டிருக்கிறது என்றார். (2)


## பரிசளிப்பு விழாவும் பட்டிமன்ற நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் அரசடி ஞான வைரவர் ஆலய திருக்கோயில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடைபெற்ற சைவசமய சொற்பொழிவின் வினா விடைப் போட்டியின் பரிசளிப்பு விழாவும் பட்டிமன்றநிகழ்வும் இன்று மாலை 6 மணியளவில் அறிவொளி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

அறிவொளி சனசமூக நிலையத்தின் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் சிறப்பு விருந்தினர்களாக வைத்திய அதிகாரிகளான வைத்திய கலாநிதி த.மயூரன், வைத்திய கலாநிதி திருமதி நந்தினிமயூரன், யா/கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாலய அதிபர் நடராசா கந்தவனச் செல்வன், யாழ் கல்லூரியின் நிர்வாக இயக்குனர் லயன் என்.ரி.எஸ் சுடநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்வுகளின் முடிவில் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது. (2-4)



யா/நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயத்தின் கால்கோல்விழா அதிபர் திருமதி குகமாரி விஜயரகுநாதன் தலை மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் புதுமுக மாணவர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வ்டமாகாண விவசாய அமைச்சர் புதிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## சீஷெல்ஸ் தீவொன்றை விலைக்கு வாங்கிய இலங்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீஷெல்ஸ் நாட்டின் தீவு ஒன்றை விலைக்கு வாங்கியுள்ளதாக சிங்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

சீஷெல்ஸ் நாட்டில் எவ்வித அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படாத 100இற்கும் மேற்பட்ட தீவுகள் இருப்பதாகவும் அவற்றை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும்வழங்க அந்நாடு தீர்மானித்துள்ளதாகவும் அவற்றில் ஒன்றை ஜனாதிபதி கொள்வனவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

ஒரு வருடத்திற்கு முன்னர் இந்த தீவு கொள்வனவு தொடர்பான கொடுக்கல்-வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள சீஷெல்ஸ் தீவுகள், ஆபிரிக்க கண்டத்திற்குரிய நாடாகும்.

செல்வந்த நாடாக சீஷெல்ஸ் தீவுகளில் ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்களே வசித்து வருகின்றனர். இலங்கையை சேர்ந்த பலர் அங்கு தொழில் புரிந்து வருகின்றனர்.

இலங்கையின் வரலாற்றில் முதல் முறையாக சீஷெல்ஸ் நாட்டின் ஜனாதிபதி கடந்த 2012 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருந்ததுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சீஷெல்ஸ் நாட்டுக்கு விஜயம் செய்திருந்தார்.

இந்த பயணத்தின் போது பிரசாலின் என்ற தீவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி, உலகில் மிகவும் அரிய வகை பறவை இனமான கறுப்பு கிளிகளை எடுத்து வந்து, அலரிமாளிகையில் வளர்த்து வந்தார்.

அவற்றில் ஒன்று அண்மையில் பறந்து சென்று விட்டதால், அதனை தேடிக் கண்டுப்பிடிக்க பெரும் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன எனவும் அந்த சிங்கள இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

1700 ஆண்டு காலப்பகுதியில் ஐரோப்பியர் சீஷெல்ஸ் தீவுகளை கைப்பற்றும் வரை அந்த தீவு அரேபிய மற்றும் ஆசியா இடையில் பயணிக்கும் கப்பல்களை கொள்ளையிடும் கொள்ளையர்களின் வாசஸ்தலமாக இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## மனிதவுரிமை ஆர்வலர்கள் தகவல்கள் சேகரிக்க தடைவிதிக்க முடியாது

### வெலியமுன தெரிவிப்பு

(கொழும்பு)

உலகிலுள்ள மனிதவுரிமை ஆர்வலர்கள், மனிதவுரிமை மீறல்கள் குறித்து தகவல்களை சேகரிக்க தெற்கிற்கோ அல்லது வடக்கிற்கோ செல்லக் கூடாது என்று தடை விதிக்க முடியாது என சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.சி. வெலியமுன தெரிவித்துள்ளார்.

மனிதவுரிமை ஆர்வலர்கள் தகவல்களை சேகரிப்பதையோ, பேசுவதையோ தடை செய்ய முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கைது செய்யப்பட்டு எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாது விடுதலை செய்யப்பட்ட மனிதவுரிமை ஆர்வலர்களான ருக்கி பெர்னாண்டோ மற்றும் அருட் தந்தை பிரவீன் மகேசன் ஆகியோருக்கு எதிராக நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவு தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பயங்கரவாத விசாரணை பிரிவினர் மேற்கொண்டு வரும் விசாரணைகளுடன் தொடர்புடைய தகவல்களையோ, அறிக்கைகளையோ உள்நாடு மற்றும் வெளிநாட்டவர்களுக்கு வழங்குவது விசாரணைகளுக்கு தடையாக அமையும் என்பதால், அதனை தவிர்க்குமாறு நீதிமன்றம் ருக்கி மற்றும் அருட் தந்தை பிரவீன் ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளதை கடுமையாக விமர்சித்துள்ள வெலியமுன, நாட்டில் அவசர காலச் சட்டம் அமுலில் இல்லாத சந்தர்ப்பத்தில் இப்படியான உத்தரவுகளை பிறப்பிக்க சட்ட ரீதியான அதிகாரம் இல்லை என சுட்டிக்காட்டியுள்ளார். (2)

## 21 மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 21 பேரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்று உத்தரவிட்டது.

இதையடுத்து 18 மீனவர்கள் அனுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டனர். 3 மீனவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக மன்னார் அரசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இராமேஸ்வரம் மற்றும் மண்டபத்திலிருந்து கடந்த 19ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற 21 மீனவர்களை இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டியதாக கைது செய்தனர்.

நேற்று முன்தினம் இந்த மீனவர்கள் அனைவரும் மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

நீதிபதி ஹையஸ்மீனவர்கள் அனைவரையும் எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இவர்களில் 3 மீனவர்கள் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 3 பேரும், நீதிமன்ற உத்தரவின் பேரில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய 18 பேரும் நேற்று முன்தினம் மாலை அனுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி விபத்து; 35 பேர் பலி



(கராச்சி)

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் நேற்று இரண்டு பேருந்துகளுடன் பெற்றோல் தாங்கிகளுடன் வந்த லொறி மோதியதில் 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

நெடுஞ்சாலை ஒன்றில் பயணிகளுடன் வந்த இரண்டு பேருந்துகள் ஒன்றையொன்று முந்திச் செல்ல முயன்றபோது எதிரே வேகமாக வந்துக் கொண்டிருந்த பெற்றோல் தாங்கிகளுடன் வந்த லொறியுடன் இரண்டு பேருந்துகளும் பயங்கரமாக மோதியுள்ளன.

மோதிய வேகத்தில் பெற்றோல தாங்கிகள் தீப்பிடித்து எரிய ஆரம்பித்துள்ளது. அதிலிருந்து பரவிய தீ பேருந்துகளையும் பற்றிக் கொண்டதால் பயணிகளில் 35 பேர் உடல் கருகி பரிதாபமாக ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர்.


அவர்களில் பலரது உடல்கள் அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் கருகிய நிலையில் காணப்பட்டதாக விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். (9)

# பால்டிக்கின் பாதுகாப்புக்காக பிரான்சின் 4 போர் விமானங்கள்

## பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் உறுதி

(பிரான்ஸ்)

**சோவியத் யூனியனிலிருந்து பிரிந்த உக்ரைனின் ஒரு பகுதியான கிரிமியாவை ரஷ்யா இணைத்துக்கொள்வது தொடர்பாக நேட்டோ நாடுகளுக்கும் ரஷ்யாவிற்கும் கருத்து வேறுபாடு எழுந்துள்ளது. இதனால் பாதுகாப்பு கருதி போலந்து மற்றும் பால்டிக் நாடுகளுக்கான விமானக் கண்காணிப்பிற்கு 4 போர் விமானங்களை அனுப்புவதாக பிரான்சின் பாதுகாப்பு அமைச்சர் ஜீன் யுவெஸ் லீ டிரியன் உறுதியளித்துள்ளார்.**



நேட்டோ நட்பு நாடுகளான எஸ்டோனியா. லிதுவேனியா மற்றும் போலந்து ஆகிய நாடுகளுக்கு தற்போது விஜயம் செய்துவரும் பிரான்சின் பாதுகாப்பு அமைச்சர் எஸ்டோனியாவின் தலைநகர் டலினில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த விமானங்களுடன் ஒரு ஏடபிள் யுஏசி கண்காணிப்பு விமானம். ரேடர் போன்றவையும் வழங்கப்படவுள்ளதாகவும் இந்த கண்காணிப்பு விமானம் நெருக்கடி மிகுந்த தளங்களின் அருகில் குறிப்பாக போலந்து மற்றும் லிதுவேனியா நாடுகளின் அருகில் இருந்து செயற்படும் என்று பிரான்சின் அரசு அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.


பிரான்சின் இந்த அறிவிப்பானது கிரிமியா விவகாரத்தில் ரஷ்யாவின் நடவடிக்கையைக் கூர்ந்து கண்காணித்து வரும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் ஒத்துப் போகின்ற ஓர்விடயமாகவுள்ளது.

இதுமாத்திரமன்றி முன்னாள் சோவியத் குடியரசிலிருந்து பிரிந்து தற்போது சுதந்திரமாக செயற்பட்டுவரும் சில நாடுகளும் ரஷ்யாவின் இந்த ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும். பிரான்சின் இந்த விருப்பம் இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவின் எண்ணத்தையும் எதிரொலிப்பதாக அமைந்துள்ளது.

சமீபத்தில் தோன்றியுள்ள இந்த அழுத்தங்களுக்கு இடையிலும் ரஷ்யாவுக்கு இரண்டு போர்க் கப்பல்களை அளிப்பதாக பிரான்ஸ் மேற்கொண்ட மூன்று ஆண்டு ஒப்பந்தத்தினைத் தொடர இருப்பதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

இப் போர்க்கப்பல்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ரஷ்யாவிற்கு வழங்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

1.2 பில்லியன் யூரோக்கள் மதிப்பு கொண்ட இக்கப்பல்கள் ரஷ்யாவிற்கான நேட்டோ நாடுகளின் முதல் உற்பத்தி என்பது குறிப்பிடத்தக்கது. (9)




ஹங்கேரிக்கு விஜயம் மேற்கொண்ட மலேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் அனீபா அமான், புதாபெஸ்ட் நகரில், ஹங்கேரி வெளியுறவுத்துறை அமைச்சர் ஜாகோஸ் . மார்டோனியை சந்தித்து கைலாகு கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

# ஐ.நா அனுப்பிய நிவாரணப் பொருட்கள் மக்களை சென்றடைய சிரிய அரசு தடை

(டமாஸ்கஸ்)

சிரியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஐ.நா. சபை அனுப்பிய நிவாரணப் பொருட்கள் கொண்டு சென்ற 71 பாரவூர்திகளையும் சிரிய அரசு நிறுத்திவைத்துள்ளது.

சிரியாவில் கடந்த 40 ஆண்டுகளாக ஆட்சி செலுத்திவரும் ஷியா பிரிவு ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் குடும்பத்திற்கு எதிராக போராளிக்குழுக்கள் போரிட்டு வருகின்றன.

இந்நிலையில் கடந்த 3 வருடங்களாக நடைபெற்றுவரும் இந்த உள்நாட்டுப் போரினால் ஒரு இலட்சத்து 36 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 20 இலட்சம் மக்கள் வெளிநாடுகளிலும், 65 இலட்சம் மக்கள் உள்நாட்டிலும் அகதிகளாகியுள்ளனர்.

உள்நாட்டில் உள்ள அகதிகள் முகாம்களில தங்கியுள்ள மக்களில் பலர் அத்தியாவசிய தேவைகளான உணவு, உடை, மருத்துவம் உள்ளிட்ட வசதிகளை பெற முடியாமல் பசியோடும், நோயோடும், கந்தல் ஆடைகளோடும் சொல்லொண்ணா துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இவர்களின் துயர நிலையை கண்டு மனமிறங்கிய ஐ.நா. சபை, சர்வதேச நாடுகளின் பங்களிப்புடன் துருக்கியில் இருந்து 79 பாரவூர்திகளில் உணவு, உடை, போர்வை, மருந்து போன்ற நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்தது.

ஆயினும், சிரியாவின் எல்லையை அடைந்தும் அந்நாட்டு அரசு உரிய அனுமதியை அளிக்காமையினால் நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்ற 71 பாரவூர்திகள் அவ்விடத்திலேயே வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்த பொருட்களை பெற்று பலன் அடைய வேண்டிய இலட்சக்கணக்கான மக்கள் வேதனை கண்ணீர் வடிக்கின்றனர். ஐ.நா.வின் நிவாரண உதவிகளை அனுமதிக்க மறுக்கும் சிரியாவின் போக்கை மேற்கத்தேய நாட்டை சேர்ந்த ஒரு உயரதிகாரி வன்மையாக கண்டித்துள்ளார். (9)

# மாலைதீவுகளின் வாக்குப்பதிவு திட்டமிட்டபடி நேற்று ஆரம்பம்

(மாலே)

மாலைதீவுகளின் பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு திட்டமிட்டபடி நேற்றையதினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையகத்தின் அதிகாரியான அய்வித் ரீமா தெரிவித்துள்ளார்.

நாட்டின் புதிய ஜனாதிபதி அப்துல்லா யாமீனின் கட்சி உறுப்பினர் ஒருவர் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் ஆணையம் வாக்குப்பதிவை சரிவர மேற்பார்வையிட முடியாது என்று கூறி வாக்குப் பதிவைத் தள்ளி வைக்குமாறு கடந்த வியாழக்கிழமை நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

ஆனால் இதுகுறித்து நீதிமன்றம் முடிவு எதனையும் அறிவிக்காத போதும் நேற்று குறிப்பிட்டபடி வாக்குப்பதிவு தொடங்கியுள்ள நிலையில் நாடு முழுவதும் எட்டு மணி நேரத்திற்கும் மேலாக வாக்குப்பதிவு நடைபெறும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீதின் மால்திவியன் ஜனநாயகக் கட்சி முன்னணியில் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் எந்த ஒரு கட்சியும் தனிப் பெரும்பான்மை பெறமுடியாது என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அதேபோல் கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் முதல் சுற்றில் நஷீத் பெற்ற வெற்றியை வெளியிடாமல் செய்த உச்ச நீதிமன்றம் அதன்பின்னர் நடைபெற இருந்த இரண்டு சுற்றுகளையும் இரத்து செய்தது.

மேலும் இந்த வாக்குப்பதிவின் போது எழுந்த சர்ச்சையினை முன்னிட்டு தேர்தல் ஆணையத்தின் ஐந்து உறுப்பினர்களில் இரண்டு பேர் இரண்டு வாரங்களுக்கு முன்னால் நீதிமன்றத்தால் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்தே இன்றைய வாக்குப் பதிவு திறம்பட நடக்குமா என்ற சந்தேகம் புதிய ஜனாதிபதியால் எழுப்பப்பட்டது என்று தகவல்கள் குறிப்பிடுகின்றன.

சுற்றுலா பயணிகளுக்கு தேனிலவு சொர்க்கமாக விளங்கிய மாலைதீவு சமீபத்திய அரசியல் சர்ச்சைகளினால் தன்னுடைய புகழை இழந்துள்ளது.

எனவே இந்த நாட்டின் அரசியல் முன்னேற்றங்களைக் கூர்ந்து கவனித்து வருவதாக இந்தியா உட்பட பல மேற்கத்தேய நாடுகளும் குறிப்பிட்டுள்ளன.

ஐ.நாவின் பொது செயலாளரான பான் கீ மூனும் அமைதியா[illegible] தேர்தலுக்கு அழை[illegible]ள்ளார். (9)

# கிழக்கு உக்ரைனில் ரஷ்யப்படைகள் குவிப்பு

(வோஷிங்டன்)



கிரீமியாவை கைப்பற்றியுள்ள ரஷ்யா, கிழக்கு உக்ரைனிலும் இராணுவ பயிற்சி என்ற பெயரில் படைப்பலத்தை அதிகரித்து வருவதை இலகுவாக எடுத்துக் கொள்ள முடியாது என அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசியபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

கிரீமியா போன்ற சம்பவம் மீண்டும் நடக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. கிரீமிய இணைப்பை ஏற்றுக் கொள்ள முடியாது என அனைத்து நாடுகளும் கூறியுள்ளன.

சர்வதேச சட்டங்களை மீறி, கிரீமியாவின் இறையாண்மை மற்றும் உக்ரைனின் எல்லைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு உக்ரைனில் ரஷ்யா நடத்திய இராணுவ நடவடிக்கைகளால் மேற்கு நாடுகள் அதிருப்தி அடைந்துள்ளன.

ரஷ்யாவுடனான உறவை தொடர்வது பற்றி அமெரிக்கா தீவிரமாக பரிசீலித்து வருவதுடன் இதனிடையே கிரீமியாவை ரஷ்யாவின் ஒருங்கிணைந்த ஆட்சிப் பகுதியாக அங்கீகரிக்கும் சட்டபூர்வ உத்தரவில் ரஷ்ய ஜனாதிபதி புடின் கையெழுத்திட்டுள்ளார்.

இதனையடுத்து அங்கு ரஷ்யாவின் நீதி மற்றும் பொருளாதார சட்டங்கள் அமுலுக்கு வந்தன. கிரீமியர்களுக்கு ரஷ்ய கடவுச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இனி ரஷ்ய நாணயத்திலேயே கிரீமியாவில் பணப்பரிவர்த்தனை நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது என்றார். (9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யார் குற்றியும்
அரிசியானால் சரி
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜெனிவாத் தீர்மானத்தில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட– கொண்டு வரப்படவுள்ள தீர்மானம் தொடர்பில் பலரும் தத்தம் அறிவுக்கு எட்டிய வகையில் கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.

ஜெனிவாத் தீர்மானத்தை தமிழ் மக்கள் பெரிதாகக் கருதியது மகா தவறு என்று தமிழர் தரப்பில் கூறுவோரும் உளர்.

இன்னோர் தரப்பு ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் தமிழ் அரசியல் தலைமை தவறான கருத்துருவாக்கங்களை தமிழ் மக்களிடம் ஏற் படுத்தி உள்ளது என்ற குற்றச்சாட்டை முன் வைக்கின்றது.

இதற்கு அப்பால், ஜெனிவாத் தீர்மானத்தால் எதுவும் நடந்து விடப்போவதில்லை. அவ்வாறு ஏதும் நடப்பதற்கு ஐ.நா சாசனம் இடம் கொடுக் காது என்று அடித்துக் கூறுவோரும் உண்டு.

யார் எந்தக் கருத்தைக் கூறினாலும் அஃது அவர்களின் அறிவின்பாற்பட்டது என்பதற்கு அப்பால், இத்தகையவர்கள் ஒரு உண்மையை புரிந்து கொள்ளவேண்டும் என்பது நம் தயவான வேண்டுகோள். அதாவது ஜெனிவாத் தீர்மா னம் பற்றி நீங்கள் எதைக் கூறுவதாக இருந்தா லும் அதை அமெரிக்காவிடமும் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையிட முமே கூற வேண்டும்.

ஏனெனில் இலங்கைக்கு எதிரான தீர்மா னத்தை ஜெனிவாவில் கொண்டு வருவது ஈழத் தமிழர்களாகிய நாமல்ல. அத் தீர்மானத்தை கொண்டு வருவது அமெரிக்காவே.

அதேநேரம் இலங்கையில் நடந்துள்ள போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவையென்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இலங்கையில் நடந்த போர்க் குற்றம் தொடர் பில் உள்ளக விசாரணையை நடத்துவதற் கான காலஅவகாசம் இலங்கை அரசுக்கு கொடுக் கப்பட்டு விட்டது. இருந்தும் அதனை அவர்கள் (இலங்கை அரசு) அலட்சியம் செய்து விட்டனர்.

ஆகையால், போர்க் குற்றம் தொடர்பில் சர்வ தேச விசாரணை தேவை என்பது நவநீதம்பிள்ளை அம்மையாரின் அறிவிப்பு. இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டுவர, சர்வ தேச விசாரணை தேவை என்று நவநீதம்பிள்ளை கூற, அது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் ஜெனிவாவில் பெரும் எடுப்பில் நடைபெற,

இது ஒன்றும் சரிப்பட்டு வராது, இதற்கு ஐ.நா சாசனம் இடம் கொடாது என்று கூறுவது ஒரு தேவையற்ற விடயமாகவே இருக்கும்.

ஜெனிவாத் தீர்மானம் தோற்றால் அது அமெரிக்காவுக்கும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்திற்கும் ஏற்பட்ட தோல்வியாகவே அமையும்.

எங்களைப் பொறுத்தவரை தெய்வம் என்றோ ஒருநாள் தீர்ப்பு வழங்கும். அந்தத் தீர்ப்பு ஐ.நா வால் அல்லது அமெரிக்காவால் அல்லது சிங் கள மக்களால் கூட அமையலாம்.

இவை எதுவும் சாத்தியப்படாது என்று அடித்து கூறினால், எங்கிருந்தோ ஒருவன் வருவான்; அவன் தீர்ப்பு வழங்குவான் என்று கூட எடுத் துக் கொள்ளலாம்.

எதுவாயினும் தர்மம் வென்றதாகவே உலக வர லாறும் உலக அனுபவமும் அமைந்துள்ளதால், ஜெனிவாத் தீர்மானம் சரிப்பட்டு வராது என்று கருத்துக் கூறுவோர் அமைதி காப்பது நல்லது.

ஏனெனில் வெந்தணலாய் வேகின்ற மனத் தோடு வாழ்கின்ற எங்கள் பல்லாயிரக்கணக் கான தமிழ் மக்களுக்கு உங்கள் கருத்துரைப் புக்கள் கசப்பாக–வெறுப்பாக இருக்கிறது என் பதை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

உண்மை எதுவோ அதனைக் காலம் உணர்த் தட்டும். அதுவே நல்லதும் பொருத்தமானதுமாகும்.

# ஒரு கவிஞனின் பார்வையில் எல்லாள காவியமும் இயற்றிய புலவனும்

வரலாறுகள் மாற்றப்பட்டு புனை வுகள் வரலாறுகளாகப் பதியப்பெறுவது இன்று வாடிக்கையாகிப் போயுள்ளது. இப்போது வெளியிடப்படும் எல்லாள காவியம் என்னும் நூல் இலங்கை வரலாற்று முக்கியத்துவம் கொண்ட மாமன்னன் எல்லாளனைப் பற்றியதாகும்.

நாற்பத்துநான்கு ஆண்டுகள் இல ங்கை மண்ணில் செங்கோலோச்சிய இம் மன்னனின் வரலாற்றை மறைத் தடிக்க முயலும் காலகட்டத்தில் அவனது கீர்த்தியையும், வீரவரலாற்றையும் 1464 செய்யுட்களில் பேசுவதாகும்.

எல்லாளனின் இளமைப் பருவந் தொட்டு வஞ்சனையால் அவன் கொல்ல ப்படும் வரையிலான நிகழ்வுகள் பாடல்களில் பதிவாகியுள்ளன.

மரபுவழிச் செய்யுள்களின் ஆதிக்கம் மழுங்கடிக்கப்பட்டு, நவீனகவிதைகளின் ஆதிக்கம் ஓங்கியிருக்கும் இற்றைய நாளில், வரலாற்றுச் சான்றுகளுடன் கூடி நாவலாசிரியர் செங்கைஆழியான் அவர்களால் எழுதப்பெற்ற "ஈழராஜா எல் லாளன்" என்ற புதினத்தை மூலக்கரு வாக வரித்து காவியத்திற்கான வரன் முறைகள் பெரிதும் பேணி, பல்வகைப பட்ட சந்தங்களில், கற்பனைவளங் கூட்டி படைக்கப் பெற்றுள்ளது இக்காவியம்.

நாவலில் பேசப்படாத எல்லாளன் திருமணம், தனிச்சமர், இயற்கை அனர்த் தம், கேசாதிபாத வர்ணனைகள், போன்ற பல புதிய அலங்காரங்களும் இக் காவி யத்திற்கு மெருகூட்டவெனச் சேர்க்கப்ப ட்டுள்ளன.

***எல்லாள காவியம் நூல் இன்று பிப 3.30 மணியளவில் றக்கா வீதி யில் உள்ள ஓவியக் கூட அரங்கத் தில் வெளியிடப் படுகின்றது.***

இலக்கியத்தின் இன்ப நுகர்வுக்கு ஏற்றபடி, சந்தர்ப்பங்களுக்கு உகந்தவாறு கூடியுள்ள வர்ணனைகள் புலவனின் கவித்துவ ஆளுமையை காட்டுவன. விரு த்தம் புலவருக்கு எளிதாகக் கைவரப்படு வதால் பல்வகை விகற்பங்களோடு கவி தைகள் இலகுவாய்ப் புரியும் மொழி நடை யில் ஓசைகுன்றாது யாக்கப்பட்டுள்ளன.

வட மாகாண முதலமைச்சரின் ஆசிச் செய்தியுடன். தந்தையாரின் ஆசிப்பாவும், ஞானத்தந்தை எஸ்.டி.சிவநாயகம் அவர் களின் பொதுப்பாயிரமும், பன்மொழிப் புல வர சோ.பத்மநாதன் அவர்களின் சிறப்புப பாயி ரமும் காவியத்திற்குச் அணிசெய்கி ன்றன.

அட்டைப்பட ஓவியத்தை பிரபல ஓவியர ஆசை இராசையா அழகுற வரைந்துள் ளார். நூலின் வடிவமைப்பும், அச்சு வண ணமும் சிறப்பாக அமைந்துள்ளன.

எல்லாளன் காவிய நூலாசிரியர் புல வர் மணி, காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரி புத்தீன் அவரகள் புலவர்மரபுவழி வந்த இலங்கையின் ஒரு மூத்த கவிஞர்.

தந்தை புலவர்மணி ஆ.மு. ஷரிபு த்தீனிடம் தமிழையும், கவிதை இயற் றும் ஞானத்தையும் பெற்ற இவர், பத் திரிகைத்துறை ஜாம்பவான் எஸ்.டி.சிவ நாயகம் அவர்களர்ல் இலக்கிய உல கிற்கு அறிமுகமாகி வளர்க்கப் பெற்றவர்.

1970களில் மரபுசார் கவிதை மூலம் இலக்கியம் படைக்கத் தொடங்கி சிறுகதை,புதினம்,சிறுவர் இலக்கியம், மொழிமாற்றக் கவிதை, கட்டுரை எனப் பல்துறையிலும் பதம் பதித்து தமிழன்னைக்கு அணிசேர்த்தவர; சேர்த்துக் கொண்டிருப்பவர்.

காவியங்களுக்கு உ ரை காண்பதே தொன்று தொட்டு வழிவந்தமரபு. இம் மரபினை மாற்றி உரைநடைக்குக் காவி யம் செய்த முதன்மைப் படைப்பாளி இவராவார்.

இவர் படைத்த காவியம் பல் கலைக்கழகங்களில் ஆய்வுக் குரிய தாக இருப்பது பெருமைக்குரியது .

**முனைவர் அகளங்கன்**

# மனித உறவை வளர்ப்பதற்கு தடையாகவுள்ள தடைக்கற்களை தகர்த்தெறிவோம்


தவக்காலத்தின் 3ஆவது ஞாயிறு ஆகிய இன்று எமக்குத்தரப்படும் பைபிள்ப் பகுதியில் "இயேசுவிற்கும் சமாரியப் பெண்ணுக்கும் இடையில் நடந்த ஓர் உரையாடல் சம்பவம் விபரிக்கப்படு கின்றது. எனவே நாம் முதலில் நாம் சமா ரியர்களுக்கும், யூதர்களுக்கும் உள்ள பகைமை உணர்வு பற்றி தெரிந்து கொள்வோம்.கி.மு 722 இல் அசீ ரியர் கள் வடக்கு அரசைக் கைப்பற்றி, வழக்க மாக வெற்றிபெற்ற அரசர்கள் அந்தக் காலத்தில் செய்யும் செயலைச் செய்த னர. இதனை பைபிளில் 2 அரசர்கள் 17: 6 பகுதியில் வாசிக்கிறோம்: ஓசேயா ஆட்சியேற்ற ஒன்பதாம் ஆண்டில், அசீ ரியா மன்னன் சமாரியாவைக் கைப் பற்றி, இஸ்ரயேலரை அசீரியாவுக்கு நாடு கடத்தினான். அவர்களை அலகிலும், கோசானின் ஆபோர் நதிக்கரையிலும், மேதியர் நகர்களிலும் குடியேற்றினான்.

## பரமபிதா காட்டிய பாதை

அதேபோல 2 அரசர்கள் 17:24 பகுதியில வாசிககிறோம் பாபிலோன், கூத்தா, அவ்வா, ஆமாத்து, செபர்வயிம் ஆகியவற்றினி ன்று அசீரிய மன்னன் ஆட்களைக் கொண்டுவந்து, இஸ்ரயேல் மக்களுக் குப் பதிலாகச் சமாரியா நகர்களில் குடி யேற்றினான். அவர்கள் சமாரியாவை உரிமையாகக்கொண்டு அதன் நகர்க ளில் வாழ்ந்து வந்தனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் வேற்றி னத்த ரோடு திருமணம் செய்து கொள்ள ஆரம பித்தனர். பொதுவாக யூதர்களுக்கு இனத்தூய்மை உயிரைப் போன் றது. வேறு எந்த நாட்டினருடனும் பெண கொடுப்பதோ, எடுப்பதோ இல்லை. சமாரியாவில் வாழ்ந்தயூதர்கள் இதற்கு முரணாக திருமணம் செய்துகொண் டதால், அவர்களைத் தூய்மையற்ற வர்கள் என பாரம்பரிய யூதர்கள் கருத ஆரம்பித்தனர். அவர்களை வெறுத்து ஒதுக்க ஆரம்பித்தனர்.

இயேசு மனித உறவிற்கு தடை யாக இருக்கக்கூடிய பல தடைக்கற்களை தகத்தெறிந்தார். யூதர்களுக்கும், சமாரி யர்களுக்கும் இடையே இருந்த மனக் கசபபை உடைக்கிறார். இயேசு ஒரு யூதர், ஆனாலும் சமாரியப் பெண்ணோடு பேச வதற்க இயேசு தயங்கவில்லை. இயே சுவே முதலில் உரையாடலை ஆரம்பிக கிறார். அடுத்து, அவள் ஒருபெண். பொது வாக, யூதப் போதகர்கள் பொதுவில் ஒரு பெண்ணோடு பேசுவதை விரும்புவது இல்லை. சிலபேர்தங்கள்மனைவியோடோ, மகளோடு கூட வீட்டிற்கு வெளியே பேசு வதைத் தவிர்ப்பார்கள். சில பரிசேயர் கள் பெண்களைக்கண்டாலே, கண்ணை மூடிக் கொண்டு செல்கின்ற அளவுக்கு பெண்களைத் தவிர்ப்பதிலே அதிக கவ னம் செலுத்தினார்கள். இயேசு அத்தகைய மன நிலையையும் உடைக்கிறார். அவளு டைய வாழ்க்கை நடத்தை முறையும் போற்றுதற்குரியதாக இல்லை. சாதா ரண ஆண்களே அப்படிப்பட்ட பெண் ணோடு பேசுவதற்கு தயங்குவார்கள். ஆனால் இயேசு போதகரகாக இருந்தா லும், துணிந்து பேசுகிறார். சமாரியப் பெண்ணுக்கு இயேசுவைக் கண்டதும் வியப்பும் பயமும் ஏற்பட்டன. இயேசு வின் உரையாடலில் உண்மை வெளிப பட்டது. சமாரியப் பெண் அதை ஏற்றுக் கொள்ள மறுத்தார். உண்மை புலப்பட வேண்டிய நேரம் வந்தது. நீர போய், உம கணவரை இங்கே கூட்டிக் கொண்டு வாரும். உண்மைக்காக பொய்மை நிவ ர்ததி செய்யப்பட அழைப்பு விடுக்கப் பட்டது. எனக்கு கணவர் இல்லையே என்று கூறிய சமாரியப் பெண்ணிற்கு இயேசு உண்மையை வெளிப்படுத்தினார். அப்பெண்ணிடம் இருந்த பொய்மையைக் களைந்தார். மேற்கண்ட அனைத்துமே நமக்கு சொல்வது இதுதான். இயேசு எப் போதுமே மற்றவர்களை திருப்திப்படு த்த வேண்டும் என்பதற்காக வாழ்ந்த தில்லை. உண்மைக்காக வாழ்ந்தார். நீதி யின்படி வாழ்ந்தார். மனச்சாட்சிக்கு மதி ப்பு கொடுத்து வாழ்ந்தார். பலவேளைக ளில் நம்மு டைய வாழ்வில் யாரையும் தேவையில்லாமல் பகைத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காக, மதிப்பீடுகளோடு சமரசம் செய்து கொள்கிறோம். மற்றவர் களைத் திருப்திப்படுத்துவதற்காக நம முடைய கொள்கைகளை, மதிப்படுகளை காற்றிலே பறக்க விட்டு விடுகிறோம. வாழ் வுக்கு மதிப்பு கொடுத்து உண் மையாக, நேர்மை யாக, நீதியோடு வாழ்வோம்.

"என் உயி ரின் மையம் எரி ந்து கொண் டிருக் கி றது. எப்போதும் இந்த பயங்கர வேதனை தொடர் கிறது. கட்டுக்கட ங்காத, புதிரான ஒரு வேதனை இது. இந்த உலகத் தைத் தாண்டிய ஏதோ ஒன்றை என் உயிரின் மையம் தேடு வதால் வரும் வேதனை இது. இந் தத் தேடலின் முடிவு எல்லையற்ற இறை வன் என்று பலர் சொல்கின்றனர். நான் அந்த இறைவனை இன்னும் கண்டு பிடிக்கவில்லை. இனியும் அவரைக் கண்டுபிடிப்பேன் என்று எனக்குத் தோன்றவில்லை. இந்தத் தேடல், இந் தத் தாகம் சில சமயங்களில் என் னைக் கோபத்திலும், சில சமயங்களில் என்னை விரக்தியிலும் மூழ்கச்செய்கிறது."



20ஆம் நூற்றாண்டில் புகழ்பெற்ற சிந் தனையாளராக, எழுத்தாளராக விளங் கிய Bertrand Russell (பேணற் இறசல்) என்பவர் தன் சுயசரிதையில் இவ்விதம் எழுதியுள்ளார். தான் கடவுள் நம்பிக்கையற்றவர் என்பதை உலக றியச் சொல்லிவந்த பேணற்இறசல் என்ற தனி மனிதரின் மையம் கடவுளைத் தேடியதையும், அவரைக் கண்டுபிடிக்க முடியாமல் அவர் பட்ட வேதனைகளை யும் இந்த வரிகள் தெளிவாக்குகின்றன. மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் வாழ் வின் ஏதோ ஒரு கட்டத்தில் கடவுளைத் தேடியிருக்கின்றனர். தாகம் தணிக்கப் பெறும்படி சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்கிறார் இயேசு.

தாகமே எடுக்காத தண்ணீரைத் தனக்குத் தரும் படி இயேசுவிடம் அவள் கேட்கிறாள். தாகம் என்று வந்தவ ரிடம் தண்ணீர் கேட்கிறாள் அந்த மாது. அவளுடைய அந்தரங்க வாழ்வை இயேசு வெளிப் படுத்தியதும் மெசியா பற்றிய தாகம் அவளி டததிலே வெளிப்படுகிறது. தானே அவர் என்று சொன்னதுதான் தாமதம். தன் ஊரார்க்கெல்லாம் மெசியா வின் பால் தாகத்தை ஏற்படுத்துகி றாள் அவள். நாமும் அவளின் இப்பணியை தொடர்வோமா?

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் பிரதேச இளைஞர் கழக

# பெண்களுக்கான வலைப்பந்து; நடராஜ இராமலிங்க வித்தி வெற்றி



நடராஜ இராமலிங்க வித்தியாலயம்



புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி

கோப்பாய் பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் போட்டிகள் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப் போட்டியில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இளைஞர் கழக அணியும் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி இளைஞர் கழக அணியும் மோதின.

இதில் 10:9 என்னும் புள்ளிகள் அடிப் படையில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இளைஞர் கழக அணி வெற்றி பெற்றது. (க-23)

## தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக

# பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி; கலைச்செல்வி இளைஞர் வெற்றி



தெல்லிப்பழை கிழக்கு கலைச் செல்வி இளைஞர் கழகம்



இளவாலை இளஞ்சுடர் இளைஞர் கழகம்

தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இதில் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி அண் மையில் இடம்பெற்றது.

இதில் தெல்லிப்பழை கிழக்கு கலைச் செல்வி இளைஞர் கழகமும் இளவாலை இளஞ்சுடர் இளைஞர் கழகமும் மோதின.

நாணயற்சுழற்சியில் வென்று முதலில் துடுப பாடிய இளவாலை இளஞ்சுடர் இளைஞர் கழகம் 3 விக்கெட்டுக்களை இழந்து 32 ஓட்டங் களைப் பெற்றது. பதிலளித்த தெல்லிப்பழை கிழக்கு கலைச் செல்வி இளைஞர் கழக அணி 4 ஆவது ஓவரில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. (க-23)

# சிநேகபூர்வ இருபது-20 போட்டி டிறிபேக் தாரகை வெற்றி

சாவ்கச்சேரி டிறிபேக் கல்லூரி அணி மற்றும் டிறிபேக் தாரகை விளையாட்டுக்கழக அணி மோதிக்கொள்ளும் சிநேகபூர்வ இருபது - 20 துடுப்பாட்டப் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. மேற்படி போட்டியில் டிறிபேக் தாரகை அணி 50 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய டிறிபேக் தாரகை அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. துடுப் பாட்டத்தில் எஸ்.பிரதி 54 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

தொடர்ந்து 186 என்ற வெற்றியிலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவகச் சேரி டிறிபேக் கல்லூரி அணி 135 ஓட்டங்க ளுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

இந்த போட்டியில், சிறந்த பந்துவீச்சாள ராக தாரகை அணியின் என்.கண்ணனும், சிறந்த களத்தடுப்பாளராக டிறிபேக் கல்லூரி யின் எஸ்.தனுஜனும், ஆட்டநாயகனாக தாரகை அணியின் எஸ்.பிரவீனும், சகல துறை விளையாட்டு வீரராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் எஸ்.லஷ்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச் சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்த பபாலன், சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத் தலைவர் வ.சிறிபிரகாஷ், யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் செயலாளர் எஸ்.விமலதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு வெற்றியீட்டிய வீரர்களுக்கு பரிசில்களை வழங்கினார்கள். (க-23)

# யாழ்ப்பாணக் கல்லூரியை வீழ்த்தி ஸ்டான்லிக் கல்லூரி வெற்றி

ஸ்டான்லிக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டியில் ஸ்டான்லிக் கல்லூரி வெற்றி பெற்றது.

இப் போட்டியில் நானயற்சுழற்சியில் வென்ற ஸ்டான்லிக் கல்லூரி 42.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங் களைப்பெற்றது. இதில்கலைச்செல்வன்47, விதுன் 46, கம்சிகாந் 41 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக கல்லூரி சார்பில் ரவிராம் 4 விக்கெட்டுக் களையும், நிமலேந்திரா மற்றும் சிந்துசன் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


பதிலுக்கு 223 என்னும் இலக்கோடு துடுப்பாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 21.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 114 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் பிபேஷ் 23, நிமலேந்திரா 18, ரவிவர்மன் 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் உதயா 4 விக்கெட்டுக்களை யும், விதுன் 3 விக்கெட்டுக்களையும், கம்சி காந் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் இப் போட்டியில் ஸ்டான்லிக் கல்லூரி வெற்றி பெற்றது. (க-23)







மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதன் போது பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திருமதி அமிர்தாம்பிகை செல்லகுணச்சந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஆங்கிலக்கல்வி ஆலோசகர் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிப்பதையும் வெற்றி பெற்ற இல்லத்திற்கான சம்பியனை வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் அ.இராஜேந்திரன் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் போர்: யாழ் இந்து வெற்றி




யாழ்.இந்துவின் மைந்தன் மதுசன் சகலதுறைகளிலும் பிரகாசிக்க 5-வது இந்துக்களின் போரில் யாழ். இந்துக் கல்லூரி அணி 9 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

யாழ்.இந்துக் கல்லூரி – கொழும்பு இந்துக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான 5-வது இந்துக்களின் போர் துடுப்பாட்டம் நேற்று முன்தினம் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி அணி தமது முதல் இன்னிங்ஸுக்காக 39.3 ஓவர்கள் வரை துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக யசோதரன் 60, கிரிசாந்த் 42 ஓட்டங்கள் எடுத்தனர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்.இந்துக் கல்லூரி அணி நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்டநேர நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய 2-வதும் இறுதியுமான நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி, மதுசனின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் தனது முதல் இன்னிங்ஸில் 66 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 274 ஓட்டங்களை எடுத்து 74 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது.




துடுப்பாட்டத்தில் மதுசன் அபாரமாக ஆடி 62 ஓட்டங்களை எடுத்தார்.

கொழும்பு இந்துக் கல்லூரியின் பந்துவீச்சில் யசோதரன் 4, கஜேந்திரன் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 74 ஓட்டங்களை பெற வேண்டும் என்ற இலக்குடன் தமது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த கொழும்பு இந்துக் கல்லூரி அணி, யாழ்.இந்துவின் மைந்தர்களின் அபார பந்துவீச்சின் முன் தாக்குப் பிடிக்க முடியாமல் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து வெறும் 97 ஓட்டங்களை மட்டுமே




எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக திவாகரன் 27, ஸ்ரீபன் 16 ஓட்டங்கள் எடுத்தனர்.

யாழ்.இந்துவின் பந்துவீச்சில் பானுகோபன் 4, சிந்துஜன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

24 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ். இந்துக் கல்லூரி அணி 3.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டினை மாத்திரமே இழந்து வெற்றியிலக்கை (27) அடைந்து 5-வது இந்துக்களின் போரில் சம்பியனானது.

துடுப்பாட்டத்தில் பானுகோபன் 12, கல்கோகன் 9 ஓட்டங்கள் எடுத்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக மதுசன் (யாழ்.இந்து), சிறந்த களத்




தடுப்பாளராக கல்கோகன் (அணித் தலைவர்- யாழ்.இந்து), சிறந்த பந்துவீச்சாளராக பானுகோபன் (யாழ். இந்து), சிறந்த துடுப்பாட்ட வீரராக யசோதரன் (கொழும்பு இந்து), ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் துடுப்பாட்டபோட்டிகள் தொடர்பான சர்ச்சைகள் நிலவி வரும் வேளையில் இந்துக்களின் போர் சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெற்றமை சிறப்புமிக்கதொரு விடயமாகும். (கு-23)

# இலங்கை வெற்றி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபது-20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பங்களாதேஷில் ஐந்தாவது இருபது-20 உலக கிண்ணப் போட்டிகள் நடந்து வருகிறது. சூப்பர்-10 சுற்று எனப்படும் பிரதான சுற்று போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது. இச்சுற்றின் .இரண்டாவது ஆட்டத்தில் நேற்று இலங்கை- தென்னாபிரிக்கா அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. அந்தவகையில் களமிறங்கிய இலங்கை அணி, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனையடுத்து 166 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கோடு களமிறங்கிய தென்னாபிரிக்கா அணிவீரர்கள் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இருப்பினும் இலங்கை அணியின் பந்துவீச்சில் சற்று தடுமாறவே, 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்களை மட்டுமே எடுத்ததால், இலங்கை அணி 5 ஓட்டங்களால் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கை அணியின் குசல் பெரேரா தெரிவானார். (க)



# இராணுவ நடவடிக்கை...

யாழ்.வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றுப் பகல்வரை சுமார் 500 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் திடீர் சுற்றிவளைப்பில் ஈடுபட்டு தேடுதல் நடத்தியதோடு 300 தமிழ் இளைஞர்கள் வரை விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

வடக்கில் கடந்த சில வாரங்களாக இடம்பெற்றுவரும் இராணுவத்தினரின் திடீர் சோதனை நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்திலும் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், கிளிநொச்சியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரைத்தேடும் பணியில் இராணுவத்தினரும், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பகுதியைச்சேர்ந்த இரண்டு குடும்பஸ்தர்கள் பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு பெரும பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் கடந்த 13 ஆம்திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தையடுத்து பாலச்சந்திரன் ஜெயக்குமாரி என்ற குடும்பப்பெண் மற்றும் அவரது 13 வயதேயான மகள் ஆகியோர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். மேற்படி துப்பாக்கி சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் என்று குற்றம்சாட்டி பயங்கரவாதகுற்றத்தடுப்பு பிரிவினரும், இராணுவத்தினரும், பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் குறித்த நபர் வட்டுக்கோட்டைப் பகுதியில் மறைந்திருப்பதாக கிடைத்த ரகசியத் தகவலையடுத்து இந்த சுற்றிவளைப்பு தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது நூற்றுக்கணக்கான இளைஞர்கள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள திடலுக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டிருந்தனர்.

வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதியிலுள்ள வட்டுக்கோட்டை, சங்கரத்தை, மாவடி, மூளாய், பொன்னாலை போன்ற பிரதேசங்களிலேயே இராணுவத்தினர் சுற்றிவளைப்பு தேடுதல்கள் மேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சோதனை நடவடிக்கைக்காக மக்கள் எவரும் வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லையென்றும் அவ்வாறு வெளியே செல்பவர்கள் தீவிர சோதனைகளுக்கு பின்னரே அனுமதிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இராணுவத்தினரினதும் பொலிஸ் தரப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரதும் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் றெட்பானா, விசுவமடு, தர்மபுரம், முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம், பனிக்கன்குளம் உட்பட பல இடங்களில் இராணுவத்தினரின் வீதி ரோந்துகள் கால்நடையாகவும் சைக்கிள்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பகல் வேளைகளில் பொலிஸாருடன் வீடுகளுக்குள் புகுந்து விசாரணை செய்யும் இராணுவத்தினர், குடும்ப அட்டைகளை பறித்துச் செல்வதாகவும், புதிதாக யாரும் உறவினர்கள், நண்பர்கள் தங்கியுள்ளனரா எனவும் விசாரணை செய்து செல்வதாகவும் கூறப்படுகின்றது.

அடையாள அட்டையின்றி இரவு வேளைகளில் பயணித்தவர்கள் சந்திகளில் உள்ள படையினரின் வீதிச் சோதனையின் போது தடுத்து வைக்கப்பட்டு அடையாள அட்டை காண்பிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் கூடும் இடங்களில் ஆயுதம் தாங்கிய படையினர் பேருந்துகளின் திடீரென வரவழைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகளை முடுக்கி விடுவது அப்பகுதி மக்களை மீண்டும் போர்க் கால சூழ்நிலை போன்ற பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இதைவிட சரளமாக தமிழில் உரையாடக்கூடிய புலனாய்வாளர்கள் மக்களோடு மக்களாக கூடிநின்று தகவல்களைத் திரட்டிச் செல்வதால் புதிதாக உரையாடுபவர்களை கண்டவுடன் மக்கள் அச்சம் அடைந்து மௌனமாகி செல்வதாகவும் கூறப்படுகின்றது.

படையினரின் இத்திடீர் சோதனை நடவடிக்கைகளால் இரவு நேரங்களில் கூடுகின்ற இளைஞர்கள் பலர் தற்போது மாலை 6 மணிக்கு பின்னர் வீடுகளுக்குள்ளேயோ முடங்கி வெளி நடமாட்டங்களை குறைத்துக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இத்தகைய அசாதாரண சூழ்நிலை வடக்கு மக்கள் மத்தியில் அச்சம் கொள்ளத்தக்க போர்ச் சூழலுக்கான அபாய பிரதிபலிப்பை மீண்டும் ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-6.15)

# கைத்து...

கோப்பாய் பொலிஸார் நேற்று பிற்பகல் 4 மணியளவில் மீட்டுள்ளனர்.

குறித்த வீட்டினை துப்புரவு செய்தபோதே சமையலறைப் பகுதியிலிருந்து இந்த ஆயுதங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த வீட்டில் முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்ததாகவும் அவர்கள் அங்கு இந்த ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதில் மைக்ரோ ரக துப்பாக்கியும் அதில் இட்டு பயன்படுத்தும் ரவைகள் ஒருதொகுதியும், துப்பாக்கி பாகங்களும், கைக்குண்டு ஒன்றும் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ- 6)

# ஒரே...

ன்று மட்டக்களப்பு நகரில் நடைபெற்றது

அப்போதுபோது சாட்சியமளித்த பொத்துவிலை சேர்ந்த மகேஸ்வரி ராஜநாதன், 1990ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மீண்டும் மோதல் காரணமாக தானும் தனது பிள்ளைகளும் பொத்துவில் சிங்கள மகா வித்தியாலய முகாமில் தஞ்சம் பெற்றிருந்தபோது இந்த சம்பவம் நடந்தது. எனக் கூறினார்.

12.07.1990 அன்று பொலிஸ் ஜீப்பில் வந்த விஷேட அதிரடி படை அதிகாரியொருவரால் தனது பிள்ளைகள் அழைத்துச் செல்லப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மற்றுமோர் சாட்சியான திருப்பெருந்துறையை சேர்ந்த யேசுதாசன எலிசபெத், தனது மகன் காணாமல்போன சம்பவத்துடன் தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சியொன்று தொடர்புபட்டிருந்ததாக தெரிவித்துள்ளார். (செ-11)

# ஒரே...

என்ற நிலையில் பரவலாக சுற்றிவளைப்புகள் இடம்பெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வவுனியா நகர்ப் பகுதியில் வைத்து லோகநாதன் என்ற குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் பின்னர் அவரது குடும்பத்தினர் புலனாய்வு பிரிவினரால் அன்றிரவே ஸ்ரீராமபுரம் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது லோகநாதனின் மனைவியான மங்களேஸ்வரி அவர்களது மகன்களான லோ. பாரதி கண்ணன் (வயது 8) மற்றும் லோ. கண்ணன் (வயது 6) ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். (செ-11)

# காரில்...

கார் ஒன்றில் சென்ற இனம் தெரியாத நபர்கள் சிலர் தம்மை புலனாய்வுத்துறையினர் என்று அறிமுகப்படுத்தியதோடு அந்த வீட்டில் தனிமையாக வசித்து வந்த வயோதிகப் பெண்ணிடம் உங்களுடைய வீட்டினை சோதனைக்குட்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளனர்.

புலனாய்வுத்துறையினர் என்பதனால் பயந்துபோன குறித்த வயோதிகப்பெண் வீட்டை சோதனை போட அனுமதித்துள்ளார். இதன்போது அந்த வயோதிக பெண்ணை வீடுக்கு வெளியில் விட்டு விட்டு குறித்த நபர்கள் வீட்டை சல்லடை போட்டுள்ளனர்.

பின்னர் அங்கிருந்து சென்றுவிட்டனர். இதன்பின்பு வீட்டுக்குள் சென்று பார்த்தபோது அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 20 பவுண்தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். இருப்பினும் மேற்படிச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பணிப் பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டுக்கு நம்பிக்கையான பணிப்பெண் ஒருவர் தேவை. நாளாந்தம் 500/= சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-0776564346
(சி-6769)

5வது ஆண்டில் சிகரம் காலடி வைத்ததை ஒட்டி

## ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாடு

அனைத்து முன்னணி நாடுகளுக்குமான

**வெளிநாட்டு கல்வி - தொழில் விசா அனுமதிகள்**

Sikaram
Gateway to Education & Employment

உங்கள் தெரிவுக்கு 15க்கு மேற்பட்ட நாடுகள்

**மார்ச் 27 வியாழக்கிழமை**
UK, New Zealand, Canada, America, Australia

**மார்ச் 28 வெள்ளிக்கிழமை**
Latvia, France, Germany, Italy, Switzerland மற்றும் Cyprus, China

**மார்ச் 29 சனிக்கிழமை**
Skills Malaysia 50,000/= உடன் ஹொட்டேல் பயிற்சி & DOHA, Qatar, Bahrain, UAE, Dubai வேலை வாய்ப்புக்கள்

**மார்ச் 29 ஞாயிற்றுக்கிழமை**
Student Visa, Visit Visa, Dependent Visa, Work Permit, Skilled Migration & Visa Rejection Appeals (நிராகரிக்கப்பட்ட விசா மீள்விண்ணப்பம்)

முற்பதிவு அவசியம் 077 36 16 798

ஒளிமயமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும்
**100% நம்பிக்கையான சேவை**

**சிகரம்**
153, பலாலி வீதி, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.
www.sikaram.lk
fb: Edu Sikaram

கல்வி-தொழில் வாய்ப்புக்களுக்கான நுழைவாயில்

## சேவை

அரச அங்கீகாரம் பெற்ற நாடு முழுவதும் பல கிளைகள் மூலம் சேவையை நடத்திக் கொண்டிருக்கும் எமது நிறுவனத்தில் உங்களுக்கு தேவையான வேலையாட்களை ஒரே கூரையின் கீழ் பெறலாம். சாரதிகள், இயக்குநர்கள், தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிற்சாலைகள் நிறுவனங்கள் கட்டிட நிர்மாணம், ஹோட்டல் போன்ற அனைத்து பிரிவுகளிலும் வேலை செய்யக்கூடிய நன்கு அனுபவம் வாய்ந்த வேலையாட்களை பெற்றுக் கொள்ள முடியும்.

(விசேடம் : எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது)

**தொடர்பு : 077 - 5561883, 077-7662129** (C-6801)

## ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர்

யாழ்ப்பாணத்து சித்த மருத்துவமுறைகள் இந்தியா, கேரளா ஆயுர்வேத, சித்த மருத்துவ முறைகளை உள்ளடக்கிய பக்க விளைவற்ற முற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப் படுகின்றது.

சித்த மருத்துவ நிபுணர்களினால் பாரிசவாதம், நரம்புத் தளர்ச்சி, பேச்சுக் குறைபாடு, கண்ணில் ஏற்படும் பாதிப்பு, காது கேட்பதில் உள்ள குறைபாடு, முள்ளந் தண்டுப் பிரச்சினை, இளமையில் ஏற்படும் முதுமை போன்றவற்றுக்கு பஞ்சகர்மசிகிச்சையும், குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, ஆஸ்மா போன்றவற்றுக்கு Herbal Nebulaization & Nasal Therapy முகப்பரு, தலைமுடி உதிர்தல், வயிற்றுப்புண், நீரிழிவு, இருதய பாதிப்பு, வாதரோகங்களுக்கு சிறப்பான சிகிச்சையளிக்கப் படுகிறது.

குறிப்பு : பிறப்பிலே ஏற்படும் Cerebral Palsy, Autism, Down's Syndrome, spinal cord leison, Spectrum disorders (Global Mental Disorders) இவற்றிற்கு சிவன்பவுண்டேசன் நிறுவனத்தின் ஆதரவுடன் இலவச சிகிச்சை நடைபெறுகிறது.

சித்த ஆயுர்வேத பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 5 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல:**
**021 222 2537 / 075 0413579 / 077 8201195**
**முற்பதிவு அவசியம்**

Dr. G. Sritharan, B.S.M.S (SL) M.Phil (Jaf)
Dr. (MRS) S. Anpuchelvy B.S.M.S (SL), M.D, (S) (India) (Consultant Physician)
(5858)

**Herbal Health Care Centre**
65, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.
(பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)

## ஆசி குடும்பமாகச் செல்ல பெரிதாக ஒன்றும் தேவையில்லை

**ஒன்றன்பின் ஒன்றாக எல்லோரும் பறக்கின்றனர் நீங்களும் வாருங்கள்**

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 9016, 021 499-3501
(C-6809)

## நிரந்தர தொழில் வாய்ப்பு

வருமானம் பிரச்சினையா??? தீர்க்க நிரந்தர தொழில் வாய்ப்பு. 18-50 வயது இருபாலாருக்கும் கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் (ஜேம் / கோடியல் / டின்மீன் / காமெண்ட் / சொக்லெட் / பெயின்ட் / காட்போட் / பிளாஸ்டிக் / கிளவுஸ் மற்றும் பல...) * உற்பத்தி * லேபல் * பொதியிடல் *தரம்பிரித்தல் பிரிவுக்கு ஆட்கள் உடனடியாக தேவை. உணவு + தங்குமிடம் சகாய விலைகளில் (நண்பர்கள் + குழுக்களாகவும் சேரலாம்) சம்பளம் 19,000/-, 26000/-, 35000/- தொடர்புக்கு முந்துங்கள் : **077 - 5561883**
(C-6803)

## இத்தாலி இலகுவில் பறக்கலாம்

**சட்ட ரீதியாக செல்ல சறுக்கல் இல்லாத சட்ட ஆலோசனை**
(நிபந்தனைகளுடன்)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 9016, 021 499 3501
(C-6809)

SPEED LANKA EXPRESS Courier

## வெளிநாடுகளுக்கான தபால் பொதிகள் சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

(C-6805)

**ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்**
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net

## விசேட ...

ஜனாதிபதி சார்ல்ஸ் டெய்லருக்கு எதிராக அமைக்கப்பட்டமையை போன்று விசேட நீதி மன்றம் அமைக்கப் பட்டால் அதன் மூலம இலங்கையின் காயங்களுக்கு தீர்வு கிட்டும் என்று வில்லியம் ஹேக் குறிப்பிட்டுள்ளார்.

நெதர்லாந்து ஹேக்கில் நடைபெற்ற சியாராலியோன் விசேட நீதி மன்றத்தின் மூலம் மனித உரிமை மீறல் குற்றம் சுமத்தப்பட்ட சார்ல்ஸ் டெய்லருக்கு 50 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. (செ-11)

## வெளிநாட்டு உயர்கல்வி

பகுதி நேர வேலைவாய்ப்புடன்

**ஹோட்டல் முகாமைத்துவம் சிங்கப்பூர் மலேசியா**

ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L

- மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவு 50,000/=-60,000/=
- பாடநெறிக்கட்டணம் 275,000/= 1 வருடம்

கட்டணம் 100% வீசா வந்தபின் வீசா 14 நாட்களில்

**Hotline: 077 3013060**

(C-682..)

Study in
AUSTRALIA, NEW ZEALAND, USA, CANADA, UK, LATIVIA CYPRUS ETC...

எந்த ஒரு வங்கியிலும் பண வைப்பிற்கான சரியான வழிகாட்டல்கள் எம்மால் வழங்கப்படும்.

ICS Study Overseas
இல. 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
021 7306000, 077 3013060
107, B-1/1 காலி வீதி, கொழும்பு-06,
011 434 3322, 077 3013060

## சித்திரை புத்தாண்டு காலத்தில் சிங்கர் தரும் விசேட சலுகைகள்



- * பழைய ஒன்றுக்கு 10,000 ரூபா அல்லது 8,000 ரூபா விலைக்கழிவு
- * வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

35,999/= (Fully Automatic - 7 kg)

10,000/= பெறுமதியான Vacum Cleaner ஒன்று இலவசம்

69,999/= Fully Automatic - 6 kg)

- * 3,750 ரூபா விலைக்கழிவு
- * வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

21,249/= ( Semi Automatic - 6 kg )

அனைத்து சலவை இயந்திரங்களுக்கும் 4 வருட உத்தரவாதம்
(நிபந்தனைக்குட்பட்டது)

சிங்கர் GEO குளிர்சாதன பெட்டிகளுக்கு விசேட விலைக்கழிவு



~~41,000/=~~ 37,925/= GEO- 182S

50% வரை மின் சேமிப்பு

10 வருட உத்தரவாதம்

59,999/= GEO- 260NF

ஃபில்டர் ஒன்று இலவசம்

47,999/= GEO- 200D

விசேட இலகு தவணை கொடுப்பனவு மற்றும் ஃபில்டர் ஒன்று இலவசம்

(C-6807)

கடனட்டைகளுக்கு 24 மாத வட்டியின்றிய கொடுப்பனவு வசதி

| ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | சுன்னாகம். | மானிப்பாய். | சங்கானை | சாவகச்சேரி | கொடிகாமம் | நெல்லியடி. | பருத்தித்துறை | கிளிநொச்சி | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 021 222 5408 | 021 224 0555 | 021 225 5343 | 021 225 1100 | 021 227 0197 | 0776433888 | 021 226 4937 | 021 226 3411 | 021 228 0199 | 021 229 0180 |

www.singersl.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.